



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI Volume- 3 Issue:208 12-02-2026 வியாழக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

12.02.2026 தை 29
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று பிற்பகல் 1.20 வரை தசமி பின்பு ஏகாதசி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.40 வரை கேட்டை பின்பு மூலம்

யோகம் :
இன்று அதிகாலை 3.37 வரை வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

கரணம் :
இன்று அதிகாலை 12.18 வரை வணிசை பின்பு பிற்பகல் 1.20 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 2.40 வரை பரணி பின்பு கார்த்திகை

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30
இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.
எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ‘ஆட்சியில் பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை’

## முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, பிப்.12:**
‘ஆட்சியில் பங்கு’ என காங்கிரஸ் தலைவர்கள் போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருக்கும் சூழலில், ‘கூட்டணி ஆட்சியெல்லாம் தமிழகத்துக்கு சரிப்பட்டு வராது’ என தடாலடியாக மறுத்துள்ளார் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின்.

விஜய் அரசியலுக்கு வந்தது தமிழகத்தில் பல்வேறு கட்சிகளுக்கும் அனுகூலமாகிவிட்டது. டிடிவி தினகரன், அன்புமணி தொடங்கி கிருஷ்ணசாமி வரை தவெகவை வைத்து கேம் ஆடிய நிலையில், காங்கிரஸூம் விஜய்யை வைத்து திமுகவுக்கு தண்ணி காட்டிக் கொண்டிருக்கிறது.

கடந்த சில வாரங்களாகவே காங்கிரஸில் கலகக் குரல்கள் அதிகமாகியிருக்கிறது. ‘ஆட்சியில் பங்கு வேண்டும், அதிகம் தொகுதிகள் வேண்டும்’ என்பதை அழுத்தமாக சொல்லி வருகின்றனர் பிரவீன் சக்கரவர்த்தி, மாணிக்கம் தாகூர், ஜோதிமணி உள்ளிட்டோர். இவர்களின் கோரிக்கைக்கு வலு சேர்ப்பதுபோல டெல்லி தலைமையும் பெரிதாக கண்டிக்காமல் அப்படியே விட்டுவிட்டது.

2006-ல் 34 தொகுதிகளில் வென்று, 96 தொகுதிகளில் மட்டுமே வென்றிருந்த திமுகவுக்கு ஆட்சியில் பங்கு கோராமலேயே பரிபூரண ஆதரவளித்தது காங்கிரஸ். 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 63 தொகுதிகள் திமுக கூட்டணியில் ஒதுக்கப்பட்டது. அதன்பின்னர் 2016-ல் காங்கிரஸூக்கு 41 தொகுதிகள் மட்டுமே கொடுத்தது திமுக.

2021 சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸூக்கான கோட்டாவை இன்னும் குறைத்து 25 ஆக்கியது. 2026 தேர்தலில் காங்கிரஸூக்கான தொகுதிகள் இன்னும் குறைக்கப்படலாம் என்று அரசல் புரசலாக பேசப்பட்டது. இதனை மனதில் வைத்தே காங்கிரஸ் சார்பில் அமைக்கப்பட்ட குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்து வந்தது திமுக.

தங்களுக்கான தொகுதிகள் குறைக்கப்படலாம் என்பதை யூகித்த காங்கிரஸ், அடுத்த ஆப்ஷனாக தவெகவை கையில் எடுத்தது. மிகக் குறைவான தொகுதிகளை திமுக ஒதுக்கினால், தவெக பக்கம் செல்வோம். வெற்றிபெறவில்லைஎன்றாலும், கட்சியை உயிர்ப்பிப்போம். விஜய்யின் செல்வாக்கைவைத்து தேர்தல் நடைபெறவுள்ள புதுச்சேரி, கேரளாவில் வெற்றி பெறுவோம் என்றெல்லாம் கணக்குப் போட்டது.

இதற்கு உடனடியாக பதிலளித்த காங்கிரஸின் பிரவீன் சக்கரவர்த்தி, “இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் கூட்டணி அரசை ஏற்கும் நிலையில், தமிழ்நாடு மட்டும் ஏன் ஏற்காது? இந்தியாவில் மற்ற மாநில மக்களை போல் தமிழ்நாட்டு மக்களும் கூட்டணி ஆட்சிக்கு ஆதரவாகவே உள்ளனர். கூட்டணி ஆட்சி அமைவதில் தமிழக மக்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை’ எனத் தெரிவித்தார்.

இவரின் கருத்தை ஆமோதித்த காங்கிரஸ் எம். பி மாணிக்கம் தாகூர், ‘மக்கள் முடிவு செய்வார்கள் கூட்டணி ஆட்சியா அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை. 2006-ல் மக்கள் தீர்பை செயல்படுத்தாதது காங்கிரஸ் கட்சியின் தவறு’ எனத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய திமுக தலைவர் ஸ்டாலின், அரசியலுக்கு அப்பாற்பட்டு ராகுல் காந்தி என் சகோதரர் போன்றவர் எனச் சொல்லியுள்ளார். ஆனால், ‘ஆட்சியில் பங்கு’ என குரலெழுப்பும் அத்தனை காங்கிரஸ் தலைவர்களும் ராகுல் காந்திக்கு நெருக்கமானவர்கள் என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம். ஆட்சியில் பங்கு இல்லை என உறுதியாக மறுத்திருக்கிறார் ஸ்டாலின். அடுத்தகட்டமாக காங்கிரஸ் என்ன செய்யப்போகிறது என்றுபார்ப்போம்.



‘ஆட்சியில் பங்கு’ என குரலெழுப்பும் காங்கிரஸ் தலைவர்களும் கவனிக்க வேண்டிய விஷயம்.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதன் அடிப்படையில் தான் கூட்டணி அமைக்கப் படுகிறது.

## எடப்பாடி பழனிசாமி

**சென்னை, பிப்.12:**
‘தேசிய ஜனநாயகக் கூட்டணியில் குழப்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை’ என அதிமுக பொதுச் செயலரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி பேட்டியளித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தனியார் செய்தி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அதிமுக பொதுச் செயலரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தமிழக அரசியல் குறித்து கேள்விகளுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் பேசுகையில், “181தொகுதிகளுக்கும் மேலாக எழுச்சிப் பயணத்தை மேற்கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டோம். எழுச்சிப் பயணம் மக்களிடையே மிகவும் எழுச்சியாக இருந்தது.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுகவுக்கான வெற்றியை மக்கள் முகத்தில் பார்க்க முடிகிறது. ஒவ்வொரு தேர்தலில் மாறுபட்ட மக்களின் தீர்ப்பைத்தான் பார்க்க முடிகிறது.

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி பெருவாரியான இடங்களில் வெற்றிபெற்றது. ஆனால், 2021 ஆம் ஆண்டில் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணி 75 இடங்களில் வெற்றிபெற்றது. சட்டப்பேரவைத் தேர்தல் வேறு; மக்களவைத் தேர்தல் வேறு.

அதிமுக தலைமையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி வலிமையான கூட்டணியாக அமைந்திருக்கிறது. 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை.

அதனால், அதிமுகவின் வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக இருக்கிறது. வருகிற தேர்தலில் சுமார் 210 இடங்களில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும்.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதன் அடிப்படையில்தான் கூட்டணி அமைக்கப்படுகிறது. அதிமுகவில் இருந்தவர்கள் திமுகவில் கூட்டணியில் இருந்துள்ளனர். அதேபோல், அங்கு இருந்தவர்கள் இங்கு இருந்திருக்கின்றனர். கூட்டணியைப் பொறுத்துதான் வெற்றிவாய்ப்பு.

திமுக - காங்கிரஸ் இடையேயான கூட்டணிப்பிரச்னையில் தலையிட தார்மிகப் பொறுப்பு எங்களுக்கு இல்லை.

இருதரப்பிலும் நீண்டகாலமாகவே பிரச்சினை இருந்து வருகிறது.

ஆட்சியில் பங்கு என்பது குறித்த கேள்விக்கு பதிலளித்துப் பேசுகையில், “மத்திய அமைச்சர் அமித் ஷாவின் முன்னிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை அதிமுக தலைமை தாங்கும்.

முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமிதான் என்பதை அவர் தெளிபடுத்திவிட்டார். சில அரசியல் கட்சித் தலைவர்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

எங்கள் கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எந்த குழப்பமும் இல்லை. அதிமுக பெருவாரியான இடங்களில் வெற்றிபெறும். அதிமுக பெருவாரிய இடங்களில் வெற்றிபெற்று தனித்தே ஆட்சியமைக்கும்” எனத் தெரிவித்தார்.



## அதிபர் டிரம்புடன் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு சந்திப்பு




**வாஷிங்டன், பிப்.12:**
ஈரான் உடனான அணுசக்தி பேச்சுவார்த்தைகளை விரிவுபடுத்துமாறு அதிபர் டிரம்ப்பை வலியுறுத்தும் நோக்கில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இன்று அமெரிக்காவுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில், அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நேதன்யாகு இன்று அந்நாட்டு அதிபர் டிரம்பை வெள்ளை மாளிகைக்குச் சென்று சந்தித்தார். வரை அதிபர் டிரம்ப் உற்சாகமாக வரவேற்றார்.

அப்போது, ஈரானின் யுரேனியம் வளங்களை நிறுத்தவேண்டும், அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் மற்றும் கிளர்ச்சிப் படைகளுடனான உறவுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் வலியுறுத்தினார்.

ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பல அதிரடி நடவடிக்கைகளுக்கு இஸ்ரேல் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகின்றது.

## ஏழைகள், விவசாயிகளை விற்றது: ராகுல் காந்திக்கு நிர்மலா சீதாராமன் பதிலடி



**புதுடில்லி, பிப்.12:**
மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று பட்ஜெட் மீதான விவாத்திற்கு பதில் அளித்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

* வரி பகிர்வின் ஒரு பகுதியாக 2027 நிதியாண்டில் மாநிலங்களுக்கு ரூ.25.44 லட்சம் கோடியை அரசு வழங்கும்

* 2026-27-ஆம் ஆண்டிற்கான மொத்த செலவு ரூ.53.47 லட்சம் கோடியாக இருக்கும் என்று பட்ஜெட்டில் திட்டமிடப்பட்டுள்ளது

* நாட்டில் உரப் பற்றாக்குறை இல்லை; விவசாயிகளை ஆதரிக்க உர இறக்குமதிக்கு ரூ.1.71 லட்சம் கோடி பட்ஜெட் ஒதுக்கீடு

* அப்போது சிவசேனா (UBT) சரியான நேரத்தில் நிலம் வழங்கியிருந்தால், இந்தியாவில் புல்லட் ரயில் ஓடியிருக்கும்

* பாலுக்கு ஜிஎஸ்டி இருப்பதாக டிஎம்சி தலைவர் அபிஷேக் பானர்ஜி கூறுவது முற்றிலும் பொய்.

*மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்தவில்லை, ஆனால் இரவில் பெண்களை வீட்டிற்குள் இருக்கச் சொல்கிறார்

*மேற்கு வங்கத்தில் சட்டம் அல்ல, குண்டுகள்தான் நிலவுகின்றன

*தரவு இந்தியாவில் இருக்கும் வகையில் தரவு மையங்களை அரசாங்கம் ஊக்குவிக்கிறது

*பிரதமர் மோடி எப்போதும் இந்தியாவின் நலனுக்காகவே பேசுவார்

* காங்கிரஸ் அரசு உலக வர்த்தக அமைப்பின் முன் சரணடைந்தது. ஏழைகளையும், விவசாயிகளையும் விற்றுவிட்டது.

இவ்வாறு நிர்மலா சீதாராமன் பேசினார்.

## அரசு, பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முன்னதாக வந்தே மாதரம் பாடல் இசைக்க உத்தரவு

**புதுடில்லி, பிப்.12:**
அரசு மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும். அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

வங்கமொழி கவிஞர் பக்கிம் சந்திர சட்டர்ஜி கடந்த 1875-ம் ஆண்டு நவம்பர் 7-ம் தேதி வந்தே மாதரம் பாடலை இயற்றினார். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்பாடல் மிகப் பெரிய உத்வேகம் அளித்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த 1950-ம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதி வந்தே மாதரம் தேசியப் பாடலாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதை மத்திய அரசு கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் வந்தே மாதரம் பாடலுக்கு புதிய விதிமுறைகளை மத்திய அரசு வகுத்துள்ளது. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: அரசு மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் (ஜன கன மன) இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும்.

கடந்த 1937-ல் நீக்கப்பட்ட 4 வரிகள் உட்பட வந்தே மாதரத்தின் அனைத்து 6 சரணங்களும் பாடப்பட வேண்டும். இது 3 நிமிடம், 10 வினாடிகள் நீளமுடையதாக இருக்கும். குடியரசுத் தலைவர், ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பத்ம விருதுகள் உள்ளிட்ட அரசு விருது வழங்கும் நிகழ்ச்சிகள், தேசியக் கொடி ஏற்றுதல் போன்ற அதிகாரப் பூர்வ நிகழ்ச்சிகளில் தேசியப் பாடல் பாடப்பட வேண்டும்.

தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலை அவமரியாதை செய்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் வகையில் விதிகளில் திருத்தம் கொண்டு வந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.







## திருக்குறள் குறள்-528

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்



அரசன் எல்லாரையும் பொதுவகையாக நோக்காமல், அவரவர் சிறப்புக்கு ஏற்றவாறு நோக்கினால், அதை விரும்பி சுற்றமாக வாழ்கின்றவர் பலர் ஆவர்.

## சிந்திக்க ஒரு நொடி



பேசுங்கள்
மென்மையாக
சாப்பிடுங்கள்
உணர்வுடன் மூச்சு
விடுங்கள் ஆழமாக
செலவிடுங்கள்
சிக்கனமாக
வாழ்க்கை வசந்தமாகும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் 2ஆம் நாள் மாவட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் 11.02.2026 காலை 11.00 மணிக்கு தி.மலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. TNGPA முன்னாள் மாநில செயலாளர், TNRDPA மாநில செயலாளர், சி. சுப்ரமணியன், எஸ். பச்சையப்பன், எஸ். இனியன் வாழ்த்தி பேசினார்கள். அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் ஆர். ராஜகோபால், மா. மணி ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

## ரோஜா செடிகளில் கவாத்து பணி



உதகை அரசு ரோஜா பூங்காவில் கோடைகாலத்தை முன்னிட்டு ரோஜா செடிகளில் கவாத்து பணிகளை கலெக்டர் லட்சுமிபவ்யா துவக்கி வைத்தார்.

## மாநில அளவிலான வில்வித்தைப் போட்டி



முதலமைச்சர் ஸ்டாலின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு, மன்னார்குடி சட்டமன்ற தொகுதி திமுக இளைஞரணி சார்பில் நடத்தப்பட்ட "மாநில அளவிலான வில்வித்தைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் டிஆர்பி ராஜா பரிசுகளை வழங்கினார்.

## தஞ்சை தேசிய தகவலியர் மையத்தில் விழிப்புணர்வு உறுதிமொழி



தஞ்சை தேசிய தகவலியர் மையத்தில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில், இணைய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஏஐ - என் பாதுகாப்பான, பொறுப்பான பயன்பாட்டிற்கான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர்.

## மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்



கிருஷ்ணகிரியில், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான "கலைத்திருவிழா" போட்டியில் வெற்றி பெற்ற 52 மாணவ, மாணவியர்களுக்கு கலெக்டர் தினேஷ்குமார் கேடயங்கள்,பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

## உயர்மட்ட மேம்பாலம் திறப்பு விழா

**திருவண்ணாமலை, பிப்.12:**

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட பூண்டி- பழங்கோயில் சாலையில் உயர்மட்ட பாலத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என் அண்ணாதுரை அவர்கள், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் அவர்கள் உயர்மட்ட பாலத்தை குத்து விளக்கு ஏற்றி, ரிப்பன் வெட்டி மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன்



பழங்கோயில் தலைவர் இராஜசேகரன் அவர்கள், ஒன்றிய செயலாளர் சிவக்குமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் உயர் மட்ட பாலம் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளுக்கு விளையாட்டு பொருட்களை சட்டமன்றத் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் விளையாட்டுப் பொருட்களை வழங்கினார். உடன் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள், பேரூராட்சி தலைவர் சரவணன் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு



பெரம்பலூர் ஆயுதப்படை அலுவலகத்தில் ரூபாய் 9.15 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்தார். பிரபாகரன் எம்எல்ஏ உடன் உள்ளார்.

## மாணவ மாணவிகளுக்கான வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி



*மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் & மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்திய, விடுதியில் தங்கிப் பயிலும் 10 ,12-ம் வகுப்பு மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கான வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் மணமேல்குடி GK எண்டர்பிரைஸ் நிர்வாக இயக்குனர் திரு கார்த்தீஸ்வரன் BE.,MBA.,LLB.,B.எடுத்து., அவர்களின் அறிவுறுத்தலின் படி M.ஜனனி மாணிக்கராஜன் MA.,M.Ed.மாணவ மாணவிகளுக்கு உயர் கல்வி மற்றும் Skill training-ல் சேர்வதன் பயன்களையும் அதனால் பயனடைந்தவர்களை பற்றியும் எடுத்துக் கூறினார்.இவர்களுடன் Gk Enterprise Skill trainer திருமதி பஞ்சவர்ணம் MA.,M.com.,B.Ed. skill training (கணினி மற்றும் தையல் பயிற்சி) பற்றிய விளக்கவுரை அளித்தார்..*




கன்னியாகுமரி கன்னியம்பல மண்டபத்தில் கடைகளை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து நேற்று வியாபாரிகள் கடையடைப்பு நடத்தினர்.

## திமுக பிரசார கூட்டம்




குன்னம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் சிவசங்கர் முன்னிலையில் நடந்த திமுக பிரசார கூட்டத்தில் திண்டுக்கல் லியோனி பேசினார்.

## ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை கலெக்டர் அலுவலகம் முன் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி நாட்டிய நாடகம்



திருநெல்வேலியில் வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி நாட்டிய நாடகம் நடந்தது. விழாவை சபாநாயகர் அப்பாவு துவக்கி வைத்தார். அப்துல்வகாப் எம்எல்ஏ, டிஆர்ஓ துரை உடன் உள்ளனர்.

## தென்காசியில் ஆர்ப்பாட்டம்



பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறியதாக கூறி தமிழக அரசை கண்டித்து பாஜக மகளிர் அணி, என்டிஏ கூட்டணிக் கட்சிகள் சார்பில் தென்காசியில் ஆர்ப்பாட்டம் நடந்தது

## மகளிருக்கு உறுப்பினர் அடையாள அட்டை



நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் 1,438 மகளிருக்கு உறுப்பினர் அடையாள அட்டைகளை அமைச்சர் மதிவேந்தன், ராஜேஷ்குமார் எம்.பி.வழங்கினர்.

## மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி



தூத்துக்குடி பொ. தங்கம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

# ரூ. 3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் விமானங்கள்... மத்திய அரசு விரைவில் ஒப்புதல்?

**புதுடெல்லி, பிப்.12:**

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் விரைவில் டெல்லி வர இருக்கிறார். இந்த நிலையில், இந்திய விமானப்படையின் பல்நோக்கு போர் விமானத் திட்டத்திற்காக 114 பிரெஞ்சு தயாரிப்பு ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கான ரூ.3.25 லட்சம் கோடி ஒப்பந்தத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் இந்த வாரம் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்டால், இது இந்தியாவின் இதுவரை இல்லாத மிகப்பெரிய ஆயுத ஒப்பந்தமாக அமையும். இதில் சுமார் 100 விமானங்களை இந்தியாவில் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இது உயர்தர போர் விமான தொழில்நுட்பத்தை இடமாற்றம் செய்வதையும், 'மேக் இன் இந்தியா' திட்டத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டால், இது இந்தியாவை பிரான்ஸ் அல்லாத நாடுகளில் ரஃபேலின் மிகப்பெரிய இயக்குநர்களில் ஒன்றாக உறுதிப்படுத்தும்.

இந்த இரட்டை என்ஜின், பல்நோக்கு போர் விமானம் உலகின் தலைசிறந்த விமானங்களில் ஒன்றாக கருதப்படுகிறது, இது வான்வெளி ஆதிக்கம் மற்றும் துல்லியமான தாக்குதல் பணிகளை நிறைவேற்றுவதற்கு பெயர்பெற்றது. இந்தியா ஏற்கனவே 36 ரஃபேல்களை வைத்துள்ளது. இந்திய விமானப்படை கடந்த 2024 டிசம்பரில் கடைசி 'சி' வகை விமானத்தை பெற்றது. மேலும் ரூ.63,000 கோடி மதிப்புள்ள 26 கடற்படை வகைகளான 'எம்' விமானங்களை ஆர்டர் செய்துள்ளது.

அந்த ஒப்பந்தத்தில் நான்கு இரட்டை இருக்கை பயிற்சி விமானங்கள் வாங்குதல், கடற்படை பராமரிப்பு, லாஜிஸ்டிக்ஸ் ஆதரவு மற்றும் பணியாளர்கள் பயிற்சி ஆகியவை உள்ளடங்கிய MRO (பராமரிப்பு, பழுதுபார்த்தல், மேம்படுத்தல்) ஒப்பந்தமும் அடங்கும். 'எம்' வகை ரஃபேல்கள் ஐ.என்.எஸ். விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா போன்ற விமானம் தாங்கி கப்பல்களில் பயன்படுத்தப்படும்.

இந்திய விமான படையினர் இந்த விமானங்களை ஏற்கனவே போரில் பபயன்படுத்தியுள்ளன. கடந்த ஆண்டு மே மாதம் பஹல்கம் பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியாவின் இராணுவ பதிலடியான "ஆபரேஷன் சிந்தூர்" மற்றும் லடாக்கில் பங்கேற்றன. ஆபரேஷன் சிந்தூரின் போது பயன்படுத்தப்பட்ட ரஃபேல்கள், ஸ்கால்ப் என்ற வான்-வழி குரூயிஸ் ஏவுகணையை ஏவியதாக நம்பப்படுகிறது. இது 250 கிமீ தொலைவில் உள்ள கடின இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடியது, இது ஈராக் போர் மற்றும் லிபியாவில் உள்ளிட்ட பல்வேறு மோதல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.


இதற்கிடையே, கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரான்ஸ் மற்றும் இந்தியா, உற்பத்தியாளர்களான டசால்ட் ஏவியேஷன் மற்றும் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் இடையே நான்கு முக்கிய உற்பத்தி இடமாற்ற ஒப்பந்தங்களை அறிவித்தன. இது இந்திய இராணுவத்திற்கு ரஃபேல்களின் பாக்கியை விரைவுபடுத்தும். டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஐதராபாத்தில் பிரெஞ்சு போர் விமானத்தின் முக்கிய கட்டமைப்பு பிரிவுகளை தயாரிப்பதற்கான அதிநவீன உற்பத்தி வசதியை அமைக்கும்.

இதில் பின்புற உடற்பகுதியின் பக்கவாட்டு ஷெல்கள், முழு பின்புற பிரிவு, மைய உடற்பகுதி மற்றும் முன்புற பிரிவு ஆகியவை அடங்கும். முதல் உடற்பகுதி பிரிவுகள் 2028இல் உற்பத்தி வரிசையில் இருந்து வெளியேறும். ஒரு மாதத்திற்கு இரண்டு முழு உடற்பகுதிகளை வழங்குவதே இலக்கு, ரஃபேல் போர் விமானத்தின் இறுதி அசெம்பிளி பிரான்ஸின் போர்டோ அருகிலுள்ள மெரிக்னாக்கில் உள்ள டசால்ட் உற்பத்தி ஆலையில் நடைபெறும்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# திடீரென முடங்கிய யுபிஐ சேவை: பயனர்கள் அவதி!

**புதுடெல்லி, பிப்.12:**




யுபிஐ மின்னணு பரிவர்த்தனை சேவை இன்று(பிப். 10) மாலை திடீரென முடங்கியதால் இன்னொருவருக்கு பணம் அனுப்புதல், ஃக்யூர்.ஆர். கோடு ஸ்கேன் செய்தல் உள்பட பல யுபிஐ சேவைகள் மேற்கொள்ள இயலவில்லை. கூகுள்பே, போன்பே, பேடிஎம் உள்பட பல தளங்களிலும் இந்தப் பிரச்னை இன்று மாலை 7 மணியளவில் எதிரொலித்தது.

இதைத்தொடர்ந்து பெரும்பாலான சமூக ஊடக தளங்களிலும் இது குறித்து பயனர்கள் புகார் தெரிவித்து பதிவுகள் பல வெளியிட்டதைப் பார்க்க முடிந்தது.

தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய பெருநகரங்களில் யுபிஐ சேவை கடுமையாகவே பாதிக்கப்பட்டதாக பயனர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் நேரடியாக பணம் செலுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டதாக பயனர்கள் தெரிவித்தனர்.

# மோடி இருக்கையை முற்றுகையிட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் - வீடியோ வெளியிட்ட மத்திய அமைச்சர்

**புதுடெல்லி, பிப்.12:**



லோக்சபாவில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பிரதமர் மோடியை "நேரடியாகத் தாக்க" திட்டமிட்டிந்ததாக தனக்கு உறுதியான தகவல் கிடைத்ததாகச் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தெரிவித்தார்.

பிரதமரின் பாதுகாப்பு கருதியே அவரது பதிலுரை ரத்து செய்யப்பட்டதாகவும், எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்களை கேடயமாகப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்ததாக ஓம் பிர்லா தெரிவித்தார்.

பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகள் சதி செய்துள்ளதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பிரதமர் மோடியின் இருக்கைக்கு அருகே காங்கிரஸ் எம்.பி.க்கள் முற்றுகையிடும் வீடியோவை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "காங்கிரஸ் கட்சி தங்கள் எம்.பி.க்களின் மிகவும் இழிவான நடத்தையைப் பற்றி பெருமை கொள்கிறது. நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும் புனிதத்தையும் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

# மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை தீயில் கருகி உயிரிழந்த சோகம்!

**கான்பூர், பிப்.12:** உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் தனியார் மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை ஒன்று தீயில் கருகி உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கான்பூரில் உள்ள பக்கர்கஞ்சில் வசிக்கும் அருண் நிஷாத் மற்றும் அவரது மனைவி பிட்டு ஆகியோருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்த குழந்தையின் உடல் வெப்பநிலையைச் சரியாகப் பராமரிக்க உதவும் கருவியில் குழந்தை வைக்கப்பட்டது. அப்போது மின் கசிவு ஏற்பட்டு தீ பிடித்ததில், அதிலிருந்த குழந்தை தீ காயம் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறது.

இந்தசம்பவத்தைப் பலமணி நேரம் கழித்தே பெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளது மருத்துவமனை நிர்வாகம். இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள் மருத்துவமனைக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து இந்த சம்பவத்தை குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட குழு அமைத்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# சொகுசு கார் விபத்து : தொழிலதிபர் மகன் காரை ஓட்டவில்லை! சரணடைகிறார் ஓட்டுநர்?

**கான்பூர், பிப்.12:** உத்தரப் பிரதேசத்தில் அதிவேகமாகச் சென்ற சொகுசு கார் மோதி 6 பேர் படுகாயமடைந்த விவகாரத்தில் காரை ஓட்டிச்சென்றது தொழிலதிபரின் மகன் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சொகுசுக் காரை ஓட்டுநர் மோகன் ஓட்டிச்சென்றதாகவும், விரைவில் அவர் சரணடைவார் என்றும் காவல் துறையிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரிலுள்ள குவால்டோலி பகுதியில் பிரபல தொழிலதிபரான கே.கே. மிஸ்ராவின் மகன் அதிவேகமாக ஓட்டிய சொகுசுக் கார் கட்டுப்பாட்டை இழந்து பாதசாரிகள் மீது மோதியதில் 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

புகையிலை தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வரும் கே.கே.மிஸ்ராவின் மகன் ஷிவம் மிஸ்ரா, கான்பூரில் ஞாயிற்றுக்கிழமை பகல் 3.15 மணியளவில் லம்போர்கினி காரில் அதிவேகமாகச் சென்று விபத்து நேர்ந்துள்ளது.

அப்போதுகட்டுப்பாட்டை இழந்த கார் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனத்தின் மீது முதலில் மோதி, பின்னர் சாலையோரம் இருந்த பாதசாரிகள் மீது மோதியது. இந்த விபத்தில் 6 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்தவுடன் ஷிவம் மிஸ்ரா தப்ப முயற்சித்ததாகவும், காரின் கண்ணாடியை உடைத்த மக்கள் அவரை தாக்க முயற்சித்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

காவல் துறையினர் பறிமுதல் செய்த சிசிடிவி காட்சிகள் மற்றும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூறிய தகவல்களின் அடிப்படையில் தொழிலதிபரின் மகன் ஷிவம் மிஸ்ரா காரை ஓட்டிச் சென்றது தெரியவந்துள்ளது.

எனினும், தொழிலதிபரின் குடும்பத்தினர் இதனை மறுத்துள்ளனர். விபத்து நேர்ந்தபோது புதிதாக சேர்ந்த ஓட்டுநர் துரை என்பவர் காரை ஓட்டிச்சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

விபத்தைஏற்படுத்தியதாகக் கூறப்படும் ஓட்டுநர் துரை, இதுபோன்ற பல்வேறு தொழிபதிபர்கள் மற்றும் பிரபலங்களின் சொகுசுக் கார் விபத்துகளில் தொடர்புடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது" - யோகி ஆதித்யநாத் உறுதி



**பாராபங்கி, பிப்.12:** "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது. அதைப் பற்றி கனவு காண்பவர்கள் நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் எச்சரித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பாராபங்கியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் யோகி ஆதித்யநாத், "பாபர் மசூதியை கட்ட கனவு காண்பவர்களுக்கு, அந்த தீர்ப்பு நாள் (judgement day) ஒருபோதும் வராது என்று நான் அவர்களிடம் கூற விரும்புகிறேன். எனவே அந்தத் தீர்ப்பு நாளுக்காக வாழாதீர்கள்.

இந்தியாவில் உள்ள விதிகளின்படி வாழ கற்றுக் கொள்ளுங்கள்.

நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படியுங்கள். யாராவது விதிகளை மீறினால், அந்தப் பாதை அவர்களை நேராக நரகத்திற்கு இட்டுச் செல்லும். சட்டங்களை மீறி சொர்க்கம் செல்வதாக யாராவது கனவு கண்டால், அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது" என்றார்.

மேலும், "சில சந்தர்ப்பவாதிகள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது ராமரை நினைவில் கொள்கிறார்கள், பின்னர் அவரை மறந்துவிடுகிறார்கள். எனவே, ராமரும் அவர்களை மறந்துவிட்டார். அவர்களால் இப்போது வெற்றி பெற முடியாது. ஒருபோதும் முன்னேறவும் முடியாது" என்று அவர் கூறினார்.

# மேற்கு வங்கத்தில் ஒரே மாவட்டத்தில் 90 எச்ஐவி பாதிப்புகள் உறுதி!

**கிழக்கு பர்தமான், பிப்.12:** மேற்கு வங்க மாநிலத்தின் கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு பர்மான் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வசித்து வரும் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்புகள் ஏற்பட்டு அங்கு பெரும் சுகாதார அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல மருத்துவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மூத்த கார்பரேட் அதிகாரிகள் ஆகியோர் எச்ஐவியால் பாதிக்கப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர்கள் பணியாற்றும் இடங்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் 50 எச்ஐவி பாதிப்புகள் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது 90 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், பாதுகாப்பற்ற முறையில் உறவு கொண்ட தன்பாலினச் சேர்கையாளர்களிடம் இந்தப் பாதிப்புகள் அதிகம் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், எச்ஐவி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த நோய் பரவிய வழிகள் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் சமூக ஊடகங்களின் வழியாக இணைந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், எச்ஐவி பாதிப்புகள் குறித்து கிழக்கு பர்தமான் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு வருவதாக, தலைமை சுகாதார மருத்துவ அதிகாரி ஜெயராம் ஹெம்பிரோம் தெரிவித்துள்ளார்.

# "திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400+ நிறைவேற்றம்" - கனிமொழி எம்.பி தகவல்

**ராமநாதபுரம், பிப்.12:** "கடந்த தேர்தலின்போது திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400-க்கும் மேற்பட்டவை நிறைவேற்றப்பட்டுள்ளது" என கனிமொழி எம்.பி தெரிவித்தார்.

ராமநாதபுரத்தில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கூட்டம் இன்று திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி எம்பி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்எல்ஏ வரவேற்றார். இதில் அமைச்சர் பெரியகருப்பன், திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், எம்எல்ஏக்கள் செ.முருகேசன், தமிழரசி, முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, அன்வர்ராஜா, சுந்தர்ராஜன் உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாய, வர்த்தக சங்கங்கள், மீனவ அமைப்புகள், நெசவாளர், தொழில் துறை அமைப்பினர், மிளகாய் வத்தல் வணிகர் சங்கங்கள், முஸ்லிம் ஜமாத்தார்கள், இந்து, கிறிஸ்தவ அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் கனிமொழி எம்.பி கூறியது: "பல்வேறு அமைப்பினரும் தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டுள்ளனர். அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியானவை தேர்தல் அறிக்கையில் கொண்டுவரப்படும். கடந்த தேர்தலின்போது திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400-க்கும் மேற்பட்டவை திமுக அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒரு சில வாக்குறுதிகள் மத்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாமல் போனது. சில பரிசீலனையில் உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் அடிப்படைத் தேவைகள், குறைபாடுகள், குறிப்பாக மீனவர் பிரச்சினையை குறித்த கோரிக்கைகளை வைத்துள்ளனர்.

அரசு ஊழியர்கள் அவர்களது கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலை மையமாகக் கொண்டு தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். காங்கிரஸ் தனிநபர்கள் எதையும் பேசலாம். திமுக மற்றும் காங்கிரஸ் தலைவர்களிடையே நல்ல உறவு உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமிதான் தினமும் பொய் பேசி வருகிறார்" எனத் தெரிவித்தார்.

# "நயினார் நாகேந்திரன் உடன் பனிப்போர் எதுவும் இல்லை" - அண்ணாமலை

**திருப்பூர், பிப்.12:** "நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை" என்று பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பல்லடத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "உலக நாடுகளிடம் எங்கு போட்டி இருக்கிறதோ அங்கு எரிபொருள் வாங்கப்படும் என்று நாட்டின் வெளியுறவுத் துறை செயலர் சொல்லியிருக்கிறார். இதுதான் மத்திய அரசின் பதில். ரஷ்யாவில் இருந்து வாங்குகிறோமோ அல்லது வெனிசுலாவில் இருந்து வாங்குகிறோம் என்று சொல்லவில்லை.

தமிழகத்துக்கு மத்திய அரசு கொடுக்கப்பட்டுள்ளதை பட்ஜெட்டில் பலரும் பட்டியலிட்டுள்ளனர். அதிவேக ரயில்கள், மருந்து, ஜவுளிப் பூங்கா உள்ளிட்டவை தமிழ்நாட்டுக்கும் பொருந்தும். தமிழ்நாடு அரசு பட்ஜெட்போடும்போது, தனித்தனியாக மாவட்டங்களுக்கு போடுவதில்லை. ஒட்டுமொத்தமாகவே போடுகிறார்கள்.

இந்தியாவில் அதிகப்படியான மருத்துவக் கல்லூரி இருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் தொடர்ந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கட்டிட பணிகளை ஆய்வு செய்யலாமே? அவர் 5 ஆண்டுகளில் எத்தனை முறை மதுரைக்கு சென்றார்? எய்ம்ஸ் பக்கம் அவர் ஏன் போகவில்லை. எய்ம்ஸ் வரவில்லை என்று சொல்வது எளிது. ஆனால், மாநில அரசின் ஒத்துழைப்பின்றி கட்டுவது பெரும் சவால்தான்.

தேசிய ஜனநாயக கூட்டணி மேலும் வலுப்பெறும் வகையில் கூட்டணியில் சில கட்சிகள் சேரும். சிறுபான்மையினருக்கு கொடுக்கப்படும் ஊக்கத் தொகை பாஜக அரசு அதிகரித்துள்ளது. உதயநிதி ஸ்டாலின் பொத்தாம் பொதுவாக அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைக்கிறார். கடந்த 5 ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினருக்கு திமுக அரசு என்ன செய்துள்ளது?

கேசவ விநாயகம் நல்ல மனிதர். ஆர்.எஸ்.எஸ் சங்கம் அவருக்கு வேறு பொறுப்பு வழங்கியுள்ளது. அவரது பணி சிறப்பாக முடிந்ததற்கு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துவிட்டு வந்தேன். நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை. கட்சி கொடுக்கும் வேலைகளை செய்து கொண்டிருக்கிறேன்" என்றார். தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் வருவாரா என்ற கேள்விக்கு, 'டீயும் காபியும் ஒன்றாக கலந்து குடிக்க முடியாது" என்றார்.

# த.வெ.க. நிர்வாகிகள் மீது தாக்குதல்: விஜய் கண்டனம்

**சென்னை, பிப்.12:** தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

சென்னை பாரிமுனைப் பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்ட தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மீது 100-க்கும் மேற்பட்ட ரவுடிகள் அராஜக தாக்குதல் நடத்தியிருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது.

இந்தத் தாக்குதலில், 4 மாதக் கர்ப்பிணி உள்பட நிர்வாகிகள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர. அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 4 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படுகாயம் அடைந்த கழகத் தோழர்கள் 6 பேரும் விரைவில் குணமடைய விழைகிறேன். தமிழக வெற்றிக் கழகத்திற்கு மக்களிடையே பெருகி வரும் செல்வாக்கைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள், மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுள்ள நம் கழகத் தோழர்கள் மீது இவ்வாறான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயலாகும். தி.மு.க.வின் தோல்வி பயத்தையே இது காட்டுகிறது.

இந்த அராஜகத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டப் போவது நிச்சயம் என தெரிவித்துள்ளார்.

# பழங்குடியினர் சமூக பெயர் மாற்றம் கோரிய மனு தள்ளுபடி



**மதுரை, பிப்.12:** தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வகுமார் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் 2019-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் சீர் மரபினருக்கான சாதிச் சான்றிதழ் டிஎன்டி என்ற ஒரே பெயரில் வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஆனால், நடைமுறையில் டிஎன்டி/டிஎன்சி என இரு வகைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதனால் பழங்குடியினர் பிரிவில் வருபவர்கள் மத்திய அரசின் நலத் திட்டங்களைப் பெற முடியாத நிலை உள்ளது.

குற்றப் பரம்பரைச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பின்னரும், அவர்களை அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் (டி நோட்டி பைடு டிரைப்ஸ்) என்று அழைப்பது சட்டவிரோதமாகும்.

அவர்களை மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் (டிக்னிலைடு நேட்டிவ் டிரைப்ஸ்) என்று அழைக்க வேண்டும். எனவே சாதிச் சான்றிதழ் வழங்கும்போது, அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் என்பதை, மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் என்று வழங்கவும், அவர்களுக்கு தேசிய அளவில் தனி இட ஒதுக்கீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

அரசிடம் முறையிடலாம்...

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து, "இது அரசின் கொள்கை முடிவோடு தொடர்புடையது என்பதால், நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலாது. மனுதாரர் அரசிடம் முறையிட்டு நிவாரணம் பெறலாம். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று உத்தரவிட்டது.

# விஷம் கலந்த கேக் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற குடும்பம்- இருவர் உயிரிழப்பு

**சென்னை, பிப்.12:** சென்னை பெரம்பூரில் விஷம் கலந்த கேக்கை சாப்பிட்டு 2 பேர் உயிரிழந்தனர். 2 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சகாயம் செபஸ்டின் என்பவரின் மனைவி பியூலா புற்றுநோயால் பாதிப்பட்டார். இதன் காரணமாக மன வேதனையில் இருந்த சகாயம் செபஸ்டின் கேக்கில் விஷம் கலந்து குடும்பத்தினருக்கு கொடுத்தார்.

கேக்கை சாப்பிட்டு 2 பேர் உயிரிழந்தனர். தாய் மற்றும் மகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த இருவரின் உடலை கைப்பற்றி பெரம்பூர் செம்பியம் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இப்படியும் உதவலாம்: ஸ்கூட்டரில் எழுதி வைத்த துண்டுச்சீட்டால் சிக்கிய பாம்பு




**திருச்சி, பிப்.12:** திருச்சி தென்னூர் பகுதியை சேர்ந்தவர் கணபதி. வக்கீலான இவர் தினமும் திருச்சி கோர்ட்டுக்கு சென்று அன்றாட அலுவல் பணிகளை மேற்கொள்வது வழக்கம். நேற்று காலை 9.30 மணிக்கு கணபதி தனது ஸ்கூட்டரில் கோர்ட்டுக்கு சென்றார். ஸ்கூட்டரை ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு கட்டிடம் முன்பு நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். பின்னர் காலை 11.30 மணி அளவில் அவரது ஜூனியர் வக்கீல் அலறி அடித்துக்கொண்டு கணபதியை பார்க்க ஓடோடி வந்தார்.

அவர் கணபதியிடம், உங்களது ஸ்கூட்டர் இருக்கை மீது ஒரு துண்டுச்சீட்டு உள்ளது. அந்த சீட்டில் 'இந்த வண்டியின் உள்ளே பாம்பு உள்ளது' என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது.

அதோடு வாகனத்தின் பதிவு எண்ணும், தேதி மற்றும் நேரமும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அத்துடன் அந்த துண்டுச்சீட்டு பறக்காமல் இருக்க அதன் மீது ஒரு சிறிய கல்லையும் யாரோ ஒருவர் வைத்துவிட்டு சென்றுள்ளார் என்று கூறினார்.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த கணபதி பதறி அடித்துக்கொண்டு கோர்ட்டில் இருந்து வெளியே வந்தார். ஸ்கூட்டர் இருக்கை மீது இருந்த துண்டுச்சீட்டை பார்த்துவிட்டு தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் கோர்ட்டுக்கு விரைந்து வந்து, ஸ்கூட்டருக்குள் சோதனையிட்டனர். ஆனால் அங்கு பாம்பு இல்லை.

இருப்பினும் வக்கீலின் வேண்டுகோளை ஏற்று. ஸ்கூட்டரின் ஒவ்வொரு பாகங்களையும் கழற்றி பார்த்தனர். அப்போது இண்டிகேட்டருக்கு பின்னால் சிறிய சாரைப்பாம்பு மறைந்து இருந்ததை கண்டுபிடித்தனர். உடனே தீயணைப்பு வீரர்கள் அந்த பாம்பை லாவகமாக பிடித்து பைக்குள் போட்டு, அங்கிருந்து கொண்டு சென்றனர்.

கோர்ட்டுக்கு வந்த யாரோ ஒருவர் ஸ்கூட்டரில் பாம்பு புகுந்ததை கண்டுள்ளார். அந்த சமயம் அக்கம்பக்கத்தில் யாரும் இல்லாததால், அந்த ஸ்கூட்டரை ஓட்டுபவர் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற மனிதநேயத்துடன் துண்டுச்சீட்டில் குறிப்பு எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த துண்டுச்சீட்டின் மூலம் வாகனத்துக்குள் புகுந்த பாம்பு சிக்கியது. இந்த சம்பவம் காரணமாக திருச்சி கோர்ட்டு வளாகத்தில் ½ மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மாதேஸ்வரன் மலைக்கோயில் பாதையில் சிறுவனை தாக்கிய சிறுத்தை: பக்தர்கள் அச்சம்



மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு குழுவினருடன் பாதயாத்திரையாக சென்ற சிறுவனை சிறுத்தை திங்கள்கிழமை தாக்கியது.

தமிழக எல்லையான பாலாற்றில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் கர்நாடக மாநிலத்தில் உள்ள மாதேஸ்வரன் கோயிலுக்கு, கர்நாடக மாநில பக்தர்கள் மட்டுமின்றி தமிழகத்தில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் செல்கின்றனர்.

பாதயாத்திரையாகவும், இருசக்கர வாகனங்களிலும், கார்கள் மற்றும் பேருந்துகளிலும் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோயிலுக்கு சென்று வருகின்றனர். சில பக்தர்கள் பாதயாத்திரையாக சென்று ஆலயத்தில் தங்கி ஆலயத்தைத்தூய்மைப்படுத்துவது உள்ளிட்ட சேவைகளை செய்துவருகின்றனர்.

கடந்த 10 நாள்களுக்கு முன்பு பாதயாத்திரையாக சென்ற பக்தரை கர்நாடக மாநிலம், சாமராஜ நகர் மாவட்டத்தில் உள்ள தாளபெட்டா என்ற இடத்தில் சிறுத்தை தாக்கிக் கொன்றது. இதைத் தொடர்ந்து, மாதேஸ்வரன் மலைக்கு பாதயாத்திரையாக செல்லவும், இருசக்கர வாகனங்களில் செல்லவும் தடை விதிக்கப்பட்டது. அதன்பிறகு, தமிழக பக்தர்கள் காலை 6 மணிமுதல் மாலை 4 மணிவரை இருசக்கர வாகனங்களில் சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தமிழக எல்லையில் உள்ள பாலாறு வனப் பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் இருப்பதை சென்னம்பட்டி வனத் துறையினர் உறுதிசெய்தனர். இதனால் பகலிலேயே பாலாறு பகுதியில் பக்தர்கள், வாகனங்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

இந்நிலையில், கர்நாடக மாநிலம், ஹனூர் வட்டம், சென்னபட்டணா கிராமத்தில் இருந்து ஒரு குழுவினர் பாதயாத்திரையாக மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு திங்கள்கிழமை சென்றனர். இந்தக் குழுவில் பெண்களும், சிறுவர்களும் இருந்தனர்.

காலை 11 மணி அளவில் தாளபெட்டா அருகே பாதயாத்திரை குழுவினர் சென்றபோது, புதர் மறைவில் இருந்த சிறுத்தை அந்தக் குழுவில் இருந்த சிரேயன் (8) என்ற சிறுவனை தாக்கியது. இதில், சிறுவனின் காதில் சிறுத்தையின் நகக்கீறல் பதிந்தது. உடன், வந்தவர்கள் சப்தமிடவே சிறுத்தை சிறுவனை விட்டுவிட்டு வனப்பகுதியில் ஓடி மறைந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த கர்நாடக வனத் துறையினர், மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு செல்ல கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். அதைத் தொடர்ந்து, மாதேஸ்வரன் மலைக்கு செல்லும் பாதைகளில் ஆங்காங்கே கையில் வாக்கி-டாக்கியுடன் வனக் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

# ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்ட தொன்மையான கோயில் கல்தூண் மீட்பு நடவடிக்கை தீவிரம்!



தமிழக கோயிலிலிருந்து திருடப்பட்டு ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்ட தொன்மையான கல் தூணை மீட்கும் நடவடிக்கையில் சிலைக் கடத்தல் தடுப்பு பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆஸ்திரியா நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கலை சொத்துகள் பிரிவு, அண்மையில் ஒரு பழைமையான கல் தூணை பறிமுதல் செய்தது. சுமார் அரை டன் எடை கொண்ட அந்தக் கல் தூணில் விஷ்ணு, கருடன், முனிவர், அலங்கரிக்கப்பட்ட அன்னம் ஆகியவற்றின் சிற்பங்கள் உள்ளன.

தகவலறிந்த சிலை திருட்டு தடுப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜி.பாலமுருகன் இதுகுறித்து நடத்திய விசாரணையில், அந்தக் கல் தூண் தமிழகத்தில் உள்ள ஒரு தொன்மையான கோயிலில் இருந்து திருடப்பட்டு, ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. ஆனால், எந்தக் கோயிலில் இருந்து திருடப்பட்டது என்பதை சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவினரால் உடனடியாகக் கண்டறிய முடியவில்லை. மேலும், கல் தூணின் புகைப்படங்களைப் பெற்று சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் காப்பாளர் பி.எஸ். ஸ்ரீராமனிடம் கருத்துரைப் பெறப்பட்டது. அதில் அவர், இந்தக் கல்தூண் கிரானைட் வகை கல்லால் ஆனது, வட தமிழகத்தில் இருந்தோ அல்லது ஆந்திரம், கர்நாடக மாநிலங்களில் கோயில்களில் இருந்து திருடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இந்தக் கல் தூண், தமிழகத்தில் ஒரு கோயில் மண்டபத்தில் திருடப்பட்டு, கடத்தப்பட்டுள்ளது என்று ஆஸ்திரியா நாட்டு அரசுக்கு சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இதையடுத்து சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு, வழக்குப் பதிவு செய்து, விசாரணையைத் தொடங்கியுள்ளது. மேலும், தொன்மையான கல்தூணை ஆஸ்திரியா நாட்டில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

# தஞ்சாவூர் மாநகராட்சியில் காலை உணவை திருப்பி அனுப்பிய தூய்மைப் பணியாளர்கள்



**தஞ்சாவூர், பிப்.12:** தஞ்சை மாநகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் 16 பேர் நேற்று காலை தங்களுக்கு வழங்கப்பட்ட உணவு தரமாக இல்லை என்று கூறி, ஒப்பந்ததாரரிடமே திருப்பி வழங்கிவிட்டனர்.

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் என மொத்தம் 757 பேருக்கு காலை உணவு வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, 2-வது நாளான நேற்று காலை 14-வது கோட்டத்தில் உணவு வழங்கப்பட்டபோது, உணவு தரமாக இல்லை என்றும், ஒவ்வாமை ஏற்படுவதாகவும் கூறி அந்த உணவை தூய்மைப் பணியாளர்கள் உண்ண மறுத்து, அவற்றை ஒப்பந்ததாரரிடமே வழங்கிவிட்டனர். மேலும், இதற்கான காரணத்தை விளக்கி, மாநகராட்சியில் கடிதத்தையும் வழங்கினர். இதுகுறித்து தமிழ்நாடு உள்ளாட்சித் துறை பணியாளர் சங்க மாவட்ட துணைத் தலைவர் ஆனந்தராஜ் கூறியதாவது: தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியின் 5, 7, 8 ஆகிய கோட்டங்களில் ஒரு மாதம் பரீட்சார்த்த முறையில் தினமும் ரவா உப்புமா, ரவா கிச்சடி, சேமியா கிச்சடி, வெண் பொங்கல், இட்லி ஆகியவற்றில் ஏதாவது ஒன்று வழங்கப்பட்டது. ஆனால், அந்த உணவு தரமாக இல்லாததால் பல நாட்கள் நாங்கள் சாப்பிடவில்லை. மேலும் இதுகுறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் தெரிவித்து, தரமாக உணவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டோம்.


இத்திட்டம் தொடங்கப்பட்ட பின் தரமான உணவு வழங்கப்படும் என்று அலுவலர்கள் உறுதி அளித்தனர். ஆனால், தமிழகம் முழுவதும் நேற்று (பிப். 9 இந்த திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, இன்று காலையும் தரமில்லாத ரவா கிச்சடியையே வழங்கினார்.

எனவே, 14-வது கோட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 16 பேரும், உணவை அவர்களிடமே திருப்பி வழங்கிவிட்டோம். தரமான உணவு தந்தால்தான் ஏற்றுக் கொள்வோம்.

இல்லையெனில், எங்களுக்கு இந்த உணவு வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து மாநகர நகர் நல அலுவலர் நமச்சிவாயத்திடம் கேட்டபோது, "14-வது கோட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் காலை உணவைத் திருப்பி அனுப்பிய தகவல் இதுவரை எனக்கு வரவில்லை, விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.




# 'தங்க நகை விற்கும் விலையில்...' – குற்றத் தடுப்புக்காக பெண் ஆய்வாளர் பகிர்ந்த ஆடியோ வைரல்



**மதுரை, பிப்.12:** மதுரையில் நகைப் பறிப்பு, குற்றங்களை தடுக்க, பெண் ஆய்வாளர் வாட்ஸ்ஆப்-பில் ஆடியோ ஒன்றை வெளியிட்டு அறிவுறுத்தினார்.

சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு பெண் ஆய்வாளர் கிரேசி சோபியா சமீபத்தில் பொறுப்பேற்றார். காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வார்டுகளிலுள்ள பெண்கள், பொதுமக்கள் இணைத்து வாட்ஸ்ஆப் குரூப் ஒன்றை ஏற்படுத்தி, அதில் வெளியிட்ட ஆடியோ ஒன்றில், 'ஒரு பவுன் ரூ. 1 லட்சத்தை தாண்டியிருக்கிறது.

பாதுகாப்பின்றி நகை அணிந்து வந்தால் டூவீலரில் வந்து பறித்துக்கொள்வர். அதிகாலை 5.30 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் இரு இடத்தில் நகைப் பறிப்பு சம்பவம் நடந்துள்ளது. நகை விற்கும் விலைக்கு பாதுகாப்பாக வையுங்கள். முடிந்தளவு பெண்கள் தங்க நகைகளை அணிவதை தவிர்க்கலாம். இதற்கு பதில் கவரிங், பாசிகளை போடுங்கள்.

வெளியூர் சென்றால் வீட்டிலுள்ள பணம் நகைகளை வங்கி லாக்கரில் வையுங்கள். காவல் துறைக்கு தகவல் தெரிவியுங்கள். வர்த்தகர்கள் கடை கல்லா பெட்டியில் பணம் வைக்கக் கூடாது. நம்பர் பிளேட் இன்றி டூவீலர்களில் வலம் வரும் கொள்ளையர்கள், குறிப்பாக வாக்கிங், வாசலில் கோலமிடும், கடைக்கு செல்லும் பெண்களை குறி வைத்து நகை பறிக்கின்றனர்.

நகைப் பறிப்பு நடந்துவிட்டால் கண்டுபிடிப்பது கடினம். மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். வீடு, வர்த்தக நிறுவனங்களில் பணியிலுள்ள காவலாளிகள் விசில் வாங்கி கொடுத்து, குறிப்பிட்ட நேரத்திற்கு ஒருமுறை விசில் ஊத அறிவுறுத்தாலும், சில இடங்களிலுள்ள சிசிடிவி கேமராக்கள் செயல்படாததால் குற்றச் செயல்களை கண்டறிவதில் சிரமம் உள்ளது.

மரங்கள், போஸ்டரால் கேமராக்கள் மறைக்கப்படுகிறது. எவ்வித தகவலாக இருந்தாலும் போலீஸுக்கு தகவல் தெரிவியுங்கள். காவல் துறைக்கு ஒத்துழைப்பு கொடுங்கள்' என்று குறிப்பிட்டு இருந்தார். குற்றச் செயல்களை தடுக்க, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆய்வாளர் கிரேசி சோபியா வெளியிட்ட இந்த ஆடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# மடப்புரம் அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் மார்ச் 4-ல் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு



**மதுரை, பிப்.12:** மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் மார்ச் 4-ம் தேதி ஆஜராகுமாறு மதுரை மாவட்ட நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

மடப்புரம் காளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார், நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக தனிப்படைக் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், டிஎஸ்பி, காவல் ஆய்வாளர் உட்பட 4 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனு, கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அஜித்குமார் மீது நிகிதா என்பவர் அளித்த நகை திருட்டு புகாரில் உண்மை இல்லை என்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், இது தொடர்பாக விரைவில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, "செய்யாத குற்றத்துக்காக ஒருவரை போலீஸார் அடித்தே கொலை செய்துள்ளனர். போலீஸாருக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டும். விசாரணை முடியும் வரை காவலர் சிறையிலேயே இருக்கட்டும்" என்று கூறி, "பொய் புகார் அளித்த பெண் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?" என சிபிஐயிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், அஜித்குமார் காவல் மரண வழக்கை விசாரித்துவரும் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில், நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை அழைத்து விசாரிக்க அனுமதி கோரி, சிபிஐ தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி செல்வபாண்டி விசாரித்து, மார்ச் 4-ம் தேதி நிகிதா நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# பயணம்

தனது வேலையை முடித்துக்கொண்டு' பை! கைஸ்! காட்ஸ் ஓன் கண்ட்ரி காலிங் மி. வில் மீட் ஆஃப்டர் த்ரீ வீக்ஸ்' என்று, தான் விடுமுறையில் வருடாந்திர விடுமுறையில் போவதை அலுவலகத்திற்கு நினைவுபடுத்தும் வண்ணமாக ஒரு குறுஞ்செய்தி யையும் பதிவிட்டு; விடுதலை உணர்வுடன், நந்தா தன் மடிக்கணினியை ஒரு துள்ளலுடன்; மூடி வைக்கும் போது அவள் மனதில் ஆனந்தம் பொங்கியது. அங்கீகரிக்கப்பட்ட ராயல் என்ஃபீல்ட் சர்விஸ் சென்ட்டருக்கு ஃபோன் செய்து தன் வண்டியை சர்விஸ் செய்தாகி விட்டதா என்று உறுதி செய்து கொண்டாள். வண்டியின் மெக்கானிக் துரையுடனும் பேசினாள். ' அக்கா! வண்டி இப்பத்தான் 'புட்டு சுத்தின' பொண்ணு போல் மினுங்குது. சுத்தமா வேலை பாத்தாச்சு. வந்து எடுத்துட்டுப் போங்க' என்றான். ' ரொம்ப தாங்ஸ்;துரை! நான் கம்பெனிக்கு ஆன்லைன் பேமெண்ட் பண்ணிட்டேன். எனக்கு ஒரு உதவி மட்டும் செய். எனக்கு முக்கியமாகத் தேவைப்படும் டூல்ஸ் எல்லாம் பேமெண்ட் பண்ணி பேக் பண்ணி வை. நான் வந்ததும் உனக்கு பேமெண்ட் பண்ணிவிடடறேன். வீட்டுக்குப் போயிட்டு பேக் எல்லாம் எடுத்து வரேன். முன்னே பின்னே ஆனாலும் நீ கொஞ்சம் வெயிட் பண்ணறியா? ஷிஃப்ட் முடிஞ்சாச்சுன்னு கிளம்பிடாதே; என்ன! முக்கியமான ட்ரிப்.' என்றாள். ' சரிக்கா! நான் வெயிட் பண்ணறேன். உங்களை அனுப்பிவிட்டே வீட்டுக்குப் போயிக்கறேன். நீங்களும் வெரசா வந்திடுங்க' என்றான் ; துரை.

தன் இல்லம் வந்ததும் குளித்து பயணத்துக்கு சித்தமானாள்.

தயாராக இருந்த backpack ஐ ஒரு தரம் செக் பண்ணிக் கொண்டாள்.

இப்போதுதான் முக்கியமான வேலை. வீட்டுக்குப் ஃபோன் போட்டு தான் கிளம்புவதைச் சொல்லணும்.

நிதானமாக டீவி முன் இருந்த இருக்கையில் அமர்ந்தவள் , காணொளி அழைப்பில் தன் பெற்றோரை அழைத்தாள். 'ரெடியாகியாச்சா? காருக்கும் சொல்லிட்டியா?' .. அப்பா 'சாப்பிட்டாயா'..அம்மா' இரண்டு பேருக்கும் தலையசைப்பில் பதில் சொல்லி பொதுவான வீட்டு விஷயங்கள் பேசி முடித்து இணைப்பைத் துண்டிக்க பதினைந்து நிமிடங்கள் ஆகியது. மலை போல் இருந்த வேலை சுளுவாக முடிந்ததில் ஒரு நிறைவு.

அடுத்த கணத்தில் கோபியின் காணொளி அழைப்பு. ' என்ன கிளம்பிட்டியா? வீட்டுக்குப் பேசியாச்சா ' என்று கேட்டான். 'ஆமாம் ; கோபி! குடைச்சலான கேள்விகள் இல்லை. தப்பித்தேன். கோபி! விஷ் மி சேஃப் ட்ராவல் அண்ட் லக்' என்றாள்.'ஷயுர்! யுவர் ட்ரிப் வில் கோ ஸ்மூத்லி. ஆல் வில் பி குட். ஸ்டே இன் ஸேஃப் ப்ளேஸ். கீப் காலிங் அண்ட் மெசேஜிங்' என்று கட்டைவிரல் உயர்த்த; காணொளி அமைப்பைத் துண்டித்தாள். வீட்டுக்குப் சொல்லாமல் போவது சற்றே உறுத்தினாலும்; தம்பி யிடம் சொல்லிவிட்டு செல்வது: ஆறுதலாய் இருந்தது.

அடுத்த அரை மணியில் துரையிடமிருந்து வண்டியைப் பெற்றவள், சில முக்கியமான வண்டி பழுது பார்த்தல் விஷயங்களை மீண்டும் ஒரு தரம் கேட்டுக் கொண்டாள். ' துரை எந்நேரமானாலும் உனக்குத்தான் ஃபோன் போட்டு சந்தேகம் எதுவாயினும் கேட்பேன். ஃபோனில் என் அழைப்புக்கு அலர்ட்டாக இரு. ட்ரிப் முடிந்து வரும்போது வண்டியை சர்விஸுக்கு விட வரும்போது உன்னையப் பார்க்கிறேன். விஷ் மி லக்' என்றாள். ' அக்கா !நல்லபடியாக போய் வருவீங்க. டென்ஷன் ஆகாமல் இருங்க. ராவுலே ஏழு மணிக்கப்புறம் வண்டி ஓட்டாதீங்க' என்றவனை, ஒரு தரம் 'ஹக்' செய்து விட்டு வண்டியில் ஏறி தன் வண்டியை மூன்று வார கேரளா சுற்றுபயணத்திற்கு பங்களூர்- மைசூர் ரோட்டில் திரும்பினாள்; நந்தா.





- சசிகலா விஸ்வநாதன்

# கர்மாவின் நீதிமன்றம்



நீதிபதி ராஜசேகர் தீர்ப்பை எழுதிக் கொண்டிருந்த போது எதிரே நிற்கும் குற்றவாளியின் முகம் அவர் மனத்தைப் பிறாண்டியது.

"இந்த முகம் எனக்குப் புதிதல்ல...ஏற்கனவே பார்த்த முகம்... ஆனா... எப்போ?... எங்கே?ன்னு தான் புரியலை"

சாட்சிகள் பேசினர். வழக்கறிஞர்கள் வாதாடினர். சட்டம் தன் பாதையில் நடந்தது. ஆனால் கர்மா அமைதியாக ராஜசேகரின் ஆழ்மன நினைவுகளைக் கிளறியது.

அன்று இரவு அவர் உறக்கம் தொலைத்தார். நினைவுகள் எங்கெங்கோ சுழன்று கொண்டிருந்தன. அந்நினைவுகளுக்குள் கொஞ்சம் பழைய நீதிமன்றம். மண் வாசனை கொண்ட மனிதர்களின் கூச்சல்.

ஒரு நிரபராதி "அய்யா சத்தியமா நான் எந்தத் தப்பும் செய்யலை" என்று கத்திக் கொண்டே தூக்குக் கயிற்றுக்குள் செல்கிறான். அந்தத் தீர்ப்பை வாசித்த நீதிபதி... ராஜசேகர். அவர் கையிலிருந்த தீர்ப்பு ஒரு உயிரின் மீதான இறுதிக் கையொப்பம். "நீதி நிலை நாட்டப்பட்டது" என்று அப்போது அவர் நம்பினார். ஆனால் கர்மா பதிவு செய்தது, "இது ஒரு தவறான தீர்ப்பு" என்று.

பிறவிகள் மாறின. சரீரங்கள் மாறின. ஆனால் கால தேவன் கணக்கு மட்டும் மாறவில்லை. இந்தப் பிறவியிலும் அவர் மீண்டும் நீதிபதி. இந்த முறையும் அவனே குற்றவாளிக் கூண்டில். கர்மா தன்னை நினைவூட்டவில்லை. முன் நிறுத்தியது. ராஜசேகர் உணர்ந்தார்.

"ஆகா... இது வழக்கு அல்ல.. கணக்கு," சட்டம் சாட்சிகளின் அடிப்படையில் தண்டனை சொன்னது. கர்மா திருத்தம் கேட்டது. ராஜசேகர் தீர்ப்பை எழுதினார். "சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நியாயம் இவ்வழக்கில் இல்லை.... எனவே குற்றவாளி விடுதலை."

அந்த மனிதன் வெளியேறினான். கூட்டம் குமுறியது. ஆனால் ராஜசேகருக்குள் ஒரு பாரம் இறங்கியிருந்தது. அன்று அவர் ஒரு மனிதனைக் காப்பாற்றவில்லை. கர்மாவிடம் தன் கடனை அடைத்தார்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# Boomer to Gen Z

பாகம் 18



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

நிச்சயதார்த்தத்திற்கு நல்ல பச்சையில் அரக்கு பார்டர் புடவையை தழைய தழைய கட்டிண்டு, பாவை விளக்கு பார்டர் தெரியறாப்புல தலைப்பை சொறுகிண்டு, குஞ்சலம் வச்சுப் பிண்ணிண்ட தலையில் கனகாம்பரமும், நெருக்கித் தொடுத்த மல்லிப்பூவும் வச்சுண்டு அம்பாள் மாதிரி நடந்து வந்தாள் மாலதி. கண்ணாடி வளையலும், பாட்டியோட ரெட்டை வடமும் போட்டுண்டு பளிச்சினு நெத்தியில பொட்டும் ஒன்னோட ஒன்னு போட்டிப் போட்டுண்டு அழகைக் கூட்டியது என்றே சொல்ல வேண்டும்.

வாசு வைத்த கண் வாங்காமல் பார்த்தான். கல்யாணிக்கு புக்காத்து மனுஷா முன்னாடி பெருமை பிடிபடவில்லை.

குனிந்த தலை நிமிராமல் வந்தவளை கோமளம் தோளைப் பிடித்து வரதனின் அருகில் உட்கார வைத்தாள்.

வாசுவும் மாலதியும் எதிரும் புதிருமாக அமர்ந்தனர். வாசுவின் பெரியப்பா பெரியம்மா மிகுந்த சந்தோஷத்துடன் அமர்ந்திருந்தனர்.

வாதியார் மந்திரம் சொல்ல சுற்றிலும் உடன் பிறந்த சொந்தங்கள் ஒன்னும் மன்னுமாய் உட்கார்ந்து தங்களுக்குள் மகிழ்ச்சியாக இருந்தனர்.

வாத்தியார் ஓதியிட்ட நிச்சயதார்த்த துணிமணிகளை பெற்றுக் கொண்டு மீண்டும் உடை மாற்றிக் கொண்டு வரச் சென்றனர்.

அதற்குள் அவரவர் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் காத்திருந்தனர்.

ராமர் கலர் புடவையில் சிவப்பு பார்டர் வைத்த புடவையில் அத்தனை அழகாக நடந்து வந்து அமர்ந்தாள்.

கோமளத்தின் தம்பி தாய்மாமன் முறையில் மாலை போட்டுவிட கைத்தட்டல்களுடன் ஆரம்பித்த நிச்சயதார்த்தம் மிகச்சிறப்பாக இரு வீட்டாரின் பத்திரிகைகள் வாசிக்கப்பட்டு அரங்கேறியது.

வாசுவும் மாலுவும் அருகருகே அமர்ந்ததும் அந்த மீனாக்ஷி சுந்தரேசனே வந்தமர்ந்தது போல் இருந்தது.

வாசுவின் பெரியப்பா பெண் சித்ரா ஜலந்தரிலிருந்து தம்பி கல்யாணத்துக்கு ரெண்டு குழந்தைகளுடன் வந்திருந்தாள்.

நாத்தனார் மடிகட்டி நிச்சயதார்த்தத்தில் தன் பங்கு வேலைகளை துவங்கினாள்.



கல்யாணி மாலுவுக்கு மூன்று பவுனில் ஒரு நெக்லஸ் போட்டுவிட்டாள். மாலு கழுத்திற்கு பொருத்தமாய் இருந்தது. மச்சினர் பெண் சித்ராதான் மாலுவுக்குப் போட்டு விட்டாள்.

கோமு எடுத்துக் குடுத்த பொடிக்கலர் பட்டுப்புடவையில் ஜொலித்தாள்.

வாய்நிறைய தனக்கு மிகவும் பிடித்திருப்பதாக கல்யாணியிடமும் கோமுவிடமும் சொல்லி சந்தோஷப்பட்டாள்.

பார்வதி கூட சொன்னாள், "கோமு நீ கொஞ்சம் அகலக்கால் வக்கிறியோன்னுத் தோன்றது. பாத்து செய்" என்றாள். அதை பஞ்சு ஐயரும் ஆமோதித்தார்.

இருந்தாலும் "நம்பாத்துல முதல், இரண்டு ரெண்டும் சேந்த கல்யாணம் ப்பா. இருக்கட்டும். நெறக்கச் செஞ்சிடுவோம்" என்றாள் கோமளம். இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

மாப்பிள்ளைக்கு வாட்ச், மோதிரம், செயின் எல்லாம் ஸ்ரீஹரி மச்சினன் என்ற முறையில் அணிவித்தான்.

எல்லோரும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார்கள். ஒரு சில பெரிசுகள் "நன்னா கிளாத்தரமா இருந்திருக்கலாம். பொசுக்குன் இருக்கு" என்றாலும் "நன்னா தாராளமா கொறவில்லாம செஞ்சுட்டா கல்யாணியும், கோமளமும்" என்ற பாராட்டுகளும் இல்லாமலில்லை.

கல்யாணியின் முகத்தில் அத்தனை சந்தோஷம். உறவுகள் கூடியிருப்பது என்பது எத்தனை ஆனந்தத்தை அளிக்கும் என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தது வரதன் கோமளத்தின் மகள் மாலுவின் திருமண நிச்சயதார்த்தம் இனிதே நடந்து முடிந்தது.

மேடையில் இருந்த பருப்புத்தேங்காய்கள், பெண் வீட்டில் சீராகக் குடுத்த வெள்ளித்தட்டு, சந்தனப்பேலா, மஞ்சள் குங்குமக் கிண்ணம், பஞ்சப்பாத்ர உத்ரணி, மாலைகளை எல்லாவற்றையும் கல்யாணியும், ஓர்ப்படியும் அடுக்கிக் கொண்டார்கள். நாத்தனார் சித்ரா பட்டுப்பாயும், நிச்சயதார்த்த ஓலையும் (பேப்பரும்) என்று எல்லாவற்றையும் பத்திரமாக எடுத்துக்கொண்டு போய் வைத்தார்கள்.

இதோ இலை போட ஆரம்பித்தாயிற்று. குழந்தைகளும் பெரியவர்களும் சேர்ந்து ஆத்ம துரோகம் செய்யாமல் நன்றாக ரசித்து ருசித்து சாப்பிட்டார்கள்.

நாளை முக்கியமான நாளான இருமனம் இணையும் திருமணம் நடக்கவிருக்கிறது. கிடைத்த இடத்தில் அப்படி அப்படியே படுத்துக் கொண்டார்கள். சித்திரை மாதம் என்பதால் குளிரும்' கொசுவும் இல்லை. தப்பித்தார்கள்

தொடரும்...

# மகா சிவராத்திரி - 2026



**சிவராத்திரி அன்று நடைபெறும் நான்கு ஜாம வழிபாடுகள்:**

மகாசிவராத்திரி விழா இந்த ஆண்டு பிப்ரவரி 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்பட உள்ளது. இந்த நாளில் இரவு முழுவதும் சிவ பூஜை செய்வது மிக முக்கியமானதாகும். இந்த நான்கு கால பூஜைகளில் எந்த ஜாமத்தில் சிவபெருமானுக்கு என்னென்ன பொருட்களை கொண்டு அபிஷேகம் செய்வார்கள், எந்த மலர் கொண்டு அர்ச்சனை செய்து, என்ன நைவேத்தியம் படைத்து வழிபடுவார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

› "அம்பிகைக்கு ஒன்பது நாள் நவராத்திரி; சிவனுக்கு ஒரு நாள் சிவராத்திரி" என்பது ஆன்மீக மொழி. மாதந்தோறும் வரும் வளர்பிறை சதுர்த்தசி திதியை மாத சிவராத்திரி என்று வழிபட்டாலும், வருடத்திற்கு ஒருமுறை மாசி மாதம் வரும் சதுர்த்தசியை மகா சிவராத்திரி நாளாக கொண்டாடுகிறோம். அன்றைய தினம் மாலை துவங்கி, அடுத்த நாள் காலை வரை அனைத்து சிவன் கோவில்களிலும் சிவபெருமானுக்கு நான்கு காலங்களாக பூஜைகள் நடைபெறும்.

உலக உயிர்களை காப்பதற்காக ஈசன் ஆலகால விஷத்தை உண்டு, நீலகண்டனாக காட்சி அளித்த தினமே மகா சிவராத்திரி தினம் என்றும், சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் நடைபெற்ற இரவே மகா சிவராத்திரி என்றும், சிவபெருமான் அக்னி சொரூபமாக காட்சி அளித்த நாள் என்றும், சிவபெருமான் தனது ஆனந்த தாண்டவத்தை நிகழ்த்தி காட்டிய திருநாள் என்றும் மகா சிவராத்திரி கொண்டாட பலவிதமான காரணங்கள் புராணங்களில் சொல்லப்படுகிறது.

மகா சிவராத்திரி இரவை நான்கு காலங்களாக பிரித்து சிவ பூஜைகள், வழிபாடுகள் நடத்தப்படுவது வழக்கம். மகா சிவராத்திரியின் முதல் காலம் என்பது பிரம்ம தேவர், சிவபெருமானுக்கு பூஜைகள் செய்து வழிபட்ட நேரம் என்றும், 2வது காலம் என்பது மகாவிஷ்ணு, சிவபெருமானை வழிபட்ட நேரம் என்றும், 3வது காலம் எனப்படும் அர்த்தஜாம பூஜை என்பது பார்வதி தேவி சிவ பெருமானை வழிபட்டு, வரங்கள் பெற்ற காலம் என்றும், நான்காவது கால பூஜை என்பது தேவர்களும், ரிஷிகளும் சிவபெருமானை வழிபட்டு, ஆசி பெற்ற காலம் என்றும் சொல்லப்படுகிறது. நான்கு காலங்களிலும் காலத்திற்கு ஒன்றாக நான்கு வேதங்களும் ஓதப்பட்டு, வேத நாயகனான ஈசனுக்கு பூஜைகள் நடத்தப்படும்.

மகா சிவராத்திரி அன்று சிவபெருமானுக்கு நடத்தப்படும் நான்கு ஜாம வழிபாட்டு முறைகள் வழக்கமான சிவ வழிபாடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இரவு முழுவதும் நான்கு காலங்களாக சிவபெருமானுக்கு நடத்தப்படும் பூஜைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

மகா சிவராத்திரியின் நான்கு கால பூஜைகள் :

**1. முதல் ஜாமம் -**

சிவலிங்கத்திற்கு பஞ்சகவ்யம் என்று கூறப்படும் பால், தயிர், நெய், கோமியம், கோசலம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து, வில்வ மாலை சாத்தி, தாமரை பூக்கொண்டு அர்ச்சனை செய்வார்கள். பயத்தம் பருப்பு சேர்ந்த பொங்கலை இறைவனுக்கு நைவேத்தியம் செய்ய வேண்டும். இந்த முதல் ஜாம பூஜையில் ரிக் வேதம் ஓத வேண்டும்.

**2. இரண்டாம் ஜாமம்-**

பஞ்சாமிர்தம் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் சந்தனமும், தாமரைப் பூவும் சாத்தி, துளசியால் அர்ச்சித்து, பாயசம் நைவேத்தியம் படைக்க வேண்டும். இந்த ஜாம பூஜையில் யஜுர் வேதம் ஓதுதல் வேண்டும்.

**3. மூன்றாம் ஜாமம் -**

இறைவனுக்கு தேன் அபிஷேகம் செய்து, அரைத்த கற்பூரத்துடன் சாதி முல்லைப் பூவை சார்த்தி வழிபட வேண்டும். வருடத்தில் ஒரே ஒரு முறை இந்த மூன்றாம் ஜாம பூஜையில் மட்டும் சிவனுக்கு தாழம்பூ சமர்ப்பிக்கப்படும். அதாவது, உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் எந்தவித பேதமும் இல்லாமல் அருளை வழங்க வேண்டும் என பார்வதி தேவி, சிவபெருமானை வேண்டிய காலமாக சொல்லப்படுவதால், எந்த இறை வழிபாட்டிற்கும் பயன்படுத்தப்படாத தாழம்பூ இந்த ஒரு பூஜையின் போது மட்டும் படைக்கப்படும். மேலும் மூன்று இலைகள் கொண்ட வில்வத்தால் அர்ச்சனை செய்து அன்னம் நைவேத்தியம் செய்து, சாம வேதம் ஓத வேண்டும்.

**4. நான்காம் ஜாமம் -**

சிவபெருமானுக்கு கரும்பு சாறு அபிஷேகம் செய்ய வேண்டும். அரைத்த குங்குமப் பூவுடன் நந்தியாவட்டைப் பூவும் சார்த்தி, நீலோற்பலப் பூவால் அர்ச்சனை செய்ய வேண்டும். அப்போது இறைவனுக்கு அன்னம் நைவேத்தியம் படைத்து, அதர்வண வேதத்தை ஓதுதல் முறையாகும்.

நற்றுணையாவது நமசிவாயவே!




**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

---

## தினம் ஒரு தலைவர்கள்

# அசரத் மோகானி வரலாறு

அசரத் மோகானி என்ற புனைப்பெயரால் அறியப்பட்ட சையத் பசல் உல் அசன் (14 அக்டோபர் 1875 - 13 மே 1951) ஓர் இந்திய ஆர்வலரும், இந்திய சுதந்திர இயக்கத்தின் சுதந்திர போராட்ட வீரரும், உருது மொழியின் பிரபல கவிஞருமாவார். 1921 ஆம் ஆண்டில் "இன்குலாப் ஜிந்தாபாத்" ("புரட்சி நீண்ட காலம் வாழட்டும்!") என்ற குறிப்பிடத்தக்க முழக்கத்தை இவர் உருவாக்கினார். சுவாமி குமாரானந்த் என்பவருடன் சேர்ந்து, 1921 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசின் அகமதாபாத் மாநாட்டில் இந்தியாவுக்கு முழுமையான சுதந்திரம் கோரிய முதல் நபராக இவர் கருதப்படுகிறார்.



சுயசரிதை

இவர் பிரிட்டிசு இந்தியாவில் ஐக்கிய மாகாணங்களின் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள மோகான் என்ற நகரத்தில் சையத் பசல் உல் அசனாக 1875 இல் பிறந்தார். அசரத் என்பது இவரது உருதுக் கவிதைகளில் இவர் பயன்படுத்திய புனைப்பெயராகும். அதே நேரத்தில் இவரது கடைசி பெயர் 'மோகானி' இவரது பிறந்த இடமான மோகானைக் குறிக்கிறது. இவருடைய முன்னோர்கள் ஈரானின் நிசாபூரிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் ஆவர்.

சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவராக அசரத் மோகானி கருதப்பட்டார். கிருட்டிணன் மீது ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தும் வசனங்களையும் எழுதினார். மேலும் கிருட்டிண ஜெயந்தியைக் கொண்டாட அடிக்கடி மதுராவுக்குச் சென்றார்.

இவர் முகம்மது ஆங்கிலேய- கீழைக் கல்லூரியில் படித்தார். பின்னர் அது அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகமாக மாறியது. அங்கு மௌலானா முஹம்மது அலி ஜவ்ஹர் மற்றும் மௌலானா சௌகத் அலி ஆகியோர் இவரது சகாக்களில் சிலர் அடங்குவர். கவிதைகளில் இவரது ஆசிரியர்கள் தஸ்லீம் லக்னாவி மற்றும் நசீம் தெகல்வி. இவரை கௌரவிப்பதற்காக, அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் இவரது பெயரில் விடுதி ஒன்று உள்ளது.

கல்வி

குல்லியத்-இ-அசுரத் மோகானி (அசரத் மோகானியின் கவிதைத் தொகுப்பு), சார்-இ-கலாம்-இ-காலிப் ( காலிப்பின் கவிதைகளின் விளக்கம்), நுகாத்-இ-சுகான் (கவிதையின் முக்கிய அம்சங்கள்), முசாகிதாத்- இ-ஜிந்தான் (சிறைச்சாலையில் அவதானிப்புகள்), முதலியன. குலாம் அலி மற்றும் 'கசல் மேதை' ஜக்ஜீத் சிங் பாடிய மிகவும் பிரபலமான கசலான "சுப்கே சுப்கே ராத் தின்" என்பது இவரால் எழுதப்பட்டது. நிகா (1982) என்றவ்படத்திலும் இவர் இடம்பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகழ்பெற்ற வாசகமான "இன்குலாப் ஜிந்தாபாத்" 1921இல் இவரால் உருவாக்கப்பட்டது.

அரசியல்

மோகானி பல ஆண்டுகளாக இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினராக இருந்தார். மேலும் அகில இந்திய முஸ்லீம் லீக்கிலும் சேர்ந்து, அதன் தலைவராக 1919 இல் பணியாற்றினார். முகமது அலி ஜின்னாவின் தலைமையை மோகானி ஆதரித்தார். ஆனால் 1947 இல் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருக்கத் தேர்வு செய்தார். இவர் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய இந்திய அரசியலமைப்பு சபையில் உறுப்பினரானார். அரசியலமைப்பில் முஸ்லிம் சிறுபான்மையினர் மீதான பாசாங்குத்தனத்தை இவர் கண்டார். எனவே இவர் அதில் கையெழுத்திடவில்லை. மீதமுள்ள இந்திய முஸ்லிம்களை வெவ்வேறு தளங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு, அசுரத் மோகானி பாக்கித்தானுக்கு குடிபெயர்வதை விட இந்தியாவில் வாழ தேர்வு செய்தார்.



இவர் ஒருபோதும் அரசாங்க உதவித் தொகைகளை ஏற்கவில்லை அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கவில்லை. அதற்கு பதிலாக இவர் மசூதிகளில் தங்கி, பாராளுமன்றத்திற்கு செல்வது வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் ஒரு முஸ்லீம் மதத்தை பின்பற்றி ஒரு எளிய வாழ்க்கையை நடத்தினார். மௌலானா பல முறை ஹஜ் ( சவுதி அரேபியாவின் மக்கா யாத்திரை) சென்றுள்ளார். இவர் இரயில் பயணங்களின்போது மூன்றாம் வகுப்பிலேயே பயணிப்பார். இதற்கான விளக்கத்தை இவரிடம் கேட்டபோது "நான்காம் வகுப்பு இல்லாததால் இவ்வாறு பயணிக்கிறேன்" என்றார்.

**இந்திய சுதந்திரத்திற்கான போராட்டம்**

வல்லபாய் பட்டேலின் வரவேற்பில் அம்பேத்கர் மற்றும் மோகானி (இடது)

இந்திய சுதந்திரத்திற்கான போராட்டத்தில் (பிரிட்டிசு இராச்சியத்தின் முடிவு) மோகானி பங்கேற்றார்; 1903 இல் பிரிட்டிசு அதிகாரிகளால் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். அந்த நேரத்தில் அரசியல் கைதிகள் பொதுவான குற்றவாளிகளைப் போலவே நடத்தப்பட்டனர். மேலும் சொந்தக் கைகளால் உழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1904 இல், இவர் இந்திய தேசிய காங்கிரசு கட்சியில் சேர்ந்தார். அகில இந்திய முஸ்லீம் லீக்கின் வருடாந்திர அமர்வுக்கு தலைமை தாங்கியபோது, 1921 ஆம் ஆண்டில் 'முழுமையான சுதந்திரம்' (ஆசாதி-இ-காமில்) கோரிய இந்திய வரலாற்றில் முதல் நபர் இவர். திசம்பர் 1929 இல், 'முழுமையான சுதந்திரத்திற்கான' இவரது பிரச்சாரம் லாகூரில் நடந்த இந்திய தேசிய காங்கிரசு கூட்டத்தின் வடிவத்தை ஏற்படுத்தியது.

பிரிட்டிசு ஆட்சியில் இருந்து முழுமையான சுதந்திரத்திற்குப் பிறகு, மௌலானா அசரத் மோகானி சோவியத் ஒன்றியத்தின் அமைப்பைப் போல ஒரு கூட்டமைப்பை அமைக்க விரும்பினார். பிரிட்டிசு ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் இந்தியாவில் ஒரு கூட்டமைப்பு அரசியலமைப்பைக் காண அவர் விரும்பினார். இவரது திட்டத்தில் ஆறு கூட்டமைப்புகள் இருந்தன: 1. கிழக்கு பாக்கித்தான்; 2. மேற்கு பாக்கித்தான்; 3. மத்திய இந்தியா; 4. தென்கிழக்கு இந்தியா; 5. தென்மேற்கு இந்தியா; மற்றும் 6. தக்காண ஐதராபாத்.

பொதுவுடமை இயக்கம் 1925 இல் கான்பூரில் நடந்த இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவராக இருந்தார். பிரிட்டிசு எதிர்ப்பு கருத்துக்களை ஊக்குவித்ததற்காகவும், குறிப்பாக எகிப்தில் பிரிட்சு கொள்கைகளுக்கு எதிராக இவரது 'உருது-இ-முவல்லா' இதழில் ஒரு கட்டுரையை வெளியிட்டதற்காகவும் இவர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், ஜோசு மாலிகாபாடி போன்ற சில உருது கவிஞர்கள் மற்றும் பல முஸ்லீம் தலைவர்களைப் போலல்லாமல், சுதந்திரத்திற்குப் பிறகு (1947) பாக்கித்தானுக்குச் செல்வதை விட இந்தியாவில் வாழத் தேர்ந்தெடுத்தார். இவரது முயற்சிகளுக்கு அங்கீகாரமாக, இவர் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஆனால் மற்ற உறுப்பினர்களைப் போலல்லாமல், இவர் அதில் கையெழுத்திடவில்லை.

இறப்பு மற்றும் நினைவு

மௌலான அசரத் மோகானி 13 மே 1951 அன்று இந்தியாவின் லக்னோவில் காலமானார்.

மௌலானா நுசரத் மோகானி என்பவரால், 'அசரத் மோகானி நினைவு அமைப்பு' 1951 இல் நிறுவப்பட்டது. பாக்கித்தானின் கராச்சி, சிந்து, ஆகிய மாகாணங்களில் அசரத் மோகானி நினைவு நூலகம் மற்றும் அறக்கட்டளை போன்றவற்றை இந்த அமைப்பு நிறுவியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், இவரது நினைவு நாளில், இந்த அறக்கட்டளை, இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள பல அமைப்பு ஆகியவற்றால் ஒரு நினைவு கூட்டம் நடத்தப்படுகிறது. பாக்கித்தானின் கராச்சியில் உள்ள கோரங்கி நகரத்திலுள்ள ஒரு காலனிக்கு அசரத் மோகானி காலனி எனப் பெயரிடப்பட்டது. கராச்சியின் நிதி மையத்தில் ஒரு பிரபலமான சாலையும் இவரது பெயரிடப்பட்டது.



நடிகை சாக்ஷி அகர்வால் தமிழில் கபாலி உள்ளிட்ட பல படங்களில் நடித்து இருப்பவர். பிக் பாஸ் மூலமாக அவர் பெரிய அளவில் பிரபலம் ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது. திருமணத்திற்கு பிறகும் சாக்ஷி அகர்வால் நடிப்பில் தான் கவனம் செலுத்தி வருகிறார். அவர் தற்போது சேலையில் மிக மிக கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

# ஜெயிலர் 2 படத்தில் நடிக்கும் தமிழ் திரையுலகின் முக்கிய இயக்குநர்



நடிகர் ரஜினிகாந்த், இயக்குநர் நெல்சன் கூட்டணியில் "ஜெயிலர் 2" திரைப்படம் உருவாகி வருகிறது. பிரம்மாண்டமாக உருவாகி வரும் ஜெயிலர் 2 திரைப்படத்தில் பல திரைப்பிரபலங்கள் நடிக்கின்றனர். மேலும், ஜெயிலர் படத்தில் நடித்த கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ் குமார், ஜெயிலர் 2 படத்தில் நடிக்கிறார்.

ஜெயிலர் 2 படத்தில் முதல் பாகத்தில் இருந்ததை விட அதிக நேரம் திரையில் வரக்கூடிய சாத்தியம் இருப்பதாக நடிகர் சிவராஜ்குமார் கூறியிருந்தார். மேலும், ஜெயிலர் படத்தில் நடித்த பலர், இந்தப் படத்தில் நடிப்பதாக கூறியிருந்தார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பலக்கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ் குமார் சமீபத்தில் அளித்த பேட்டியில் ஜெயிலர் 2 படப்பிடிப்பு அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அப்போது அவர், "ஜெயிலர் 2 படப்பிடிப்பு ரஜினி சாரும் நானும் நன்றாகப் பழகுவோம். எஸ்.ஜே. சூர்யா நகைச்சுவையாகக் பேசுவார். கிடைக்கும் போதெல்லாம், உறவினர்கள் போல பேச விடுவார்கள்."

சூப்பர் ஸ்டாராக உயர்வதை நான் பார்த்து வளர்ந்தேன். வெற்றி பெற்றாலும், அவர் யதார்த்தமாகவே இருக்கிறார். அவர் என் தந்தையுடன் நெருங்கிய பிணைப்பைப் பகிர்ந்து கொள்கிறார். பெங்களூரு வருகைதரும் ஒவ்வொரு முறையும், எங்கள் வீட்டிற்கு வருவதை அவர் வழக்கமாக கொண்டுள்ளார்," என்றார்.

# 'ரூட்' படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள்

நடிகர் கவுதம் ராம் கார்த்திக் நடிப்பில் வெளியாக இருக்கும் படம் 'ரூட் - ரன்னிங் அவுட் ஆஃப் டைம்'. ரஜினிகாந்தின் 'கோச்சடையான்' படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய அறிமுக இயக்குநர் சூரியபிரதாப் இயக்கத்தில் உருவாகி உள்ள இப்படத்தில் நடிகை அபர்சக்தி குரானா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து உள்ளார். நடிகை பவ்யா திரிகா, கவுதம் ராம் கார்த்திக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

இப்படத்தில் ஒய்.ஜி.மகேந்திரன், பாவ்னி ரெட்டி, லிங்கா, ஆர்.ஜே.ஆனந்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். அறிவியல் கற்பனையும், உணர்ச்சியைப் பிணைந்து கலந்த ஒரு வித்தியாசமான கிரைம் திரில்லராக இப்படம் உருவாகி உள்ளது. சென்னை மற்றும் பிற முக்கிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அக்டோபர் மாதம் படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், கடந்த மாதம் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வெளியிட்டார். அதனை தொடர்ந்து இரண்டாவது லுக் போஸ்டரை இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் வெளியிட்டார்.

இந்த நிலையில், 'ரூட் - ரன்னிங் அவுட் ஆஃப் டைம்' படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதனை தொடர்ந்து இப்படத்தை விரைவில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தயாரிப்பாளர் ஷேக் முஜீப் கூறியதாவது, "படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. எடிட்டிங் மற்றும் பின்னணி இசை முதல் VFX மற்றும் ஒலி வடிவமைப்பு வரை ஒவ்வொரு துறையும் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்ட வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்படத்தின் மூலம் திரையரங்கில் புதிய அனுபவத்தை ரசிகர்கள் அனுபவிப்பார்கள் என்பதை நம்புகிறோம் என கூறியுள்ளார்.



# அல்லு அர்ஜுனை சந்திக்க 42 கட்டுப்பாடுகளா?



தெலுங்கு நட்சத்திர நடிகரான அல்லு அல்ஜுனை சந்திப்பதற்கு 42 கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி வெளியிட்டிருந்தார். இது தெலுங்கு சினிமா உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் அல்லு அர்ஜுன் அலுவலகம் இது தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் "அல்லு அர்ஜுனுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படை ஆதாரமற்றது. உண்மைக்கு புறம்பானது. அல்லு அர்ஜுன் எப்போதும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டார். அவரது அணி இந்த பொய் குற்றச்சாட்டை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொண்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை வெளியிட்டவருக்கு எதிராக அவதூறு வழக்கு தொடர்வதற்கான வேலையை தொடங்கியுள்ளது. மேலும், சரிபார்க்கப்படாத தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்கவும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லு அர்ஜுன் கண்ணை நேருக்குநேர் பார்க்கக் கூடாது, கைக்குலுக்கக் கூடாது, மீடியாவை சந்திக்கும்போது அவரிடம் கேட்கும் கேள்விகள் தொடர்பாக முன்னதாக ஒப்புதல் பெற வேண்டும் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியானது.

# 'ராமாயணா' படத்தில் நடிக்கிறேனா?



வெற்றிமாறன் இயக்கத்தில் சிம்புவின் 'அரசன்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

தமிழ் தாண்டி பான் இந்தியா அளவில் முன்னணி நடிகராக ஜொலித்து வருகிறார், விஜய் சேதுபதி.

தற்போது 'டிரெய்ன்', 'ஸ்லம்டாக்: 33 டெம்பிள் ரோடு' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். வெற்றிமாறன் இயக்கத்தில் சிம்புவின் 'அரசன்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

இதற்கிடையில் இந்தியில் நிதேஷ் திவாரி இயக்கத்தில் ரன்பீர் கபூர் -சாய் பல்லவி நடிப்பில் உருவாகி வரும் 'ராமாயணா' படத்தில் விஜய் சேதுபதி நடிக்கப்போவதாக பேசப்பட்டது.

அதாவது ராவணன் (யாஷ்) தம்பி விபீஷனன் கதாபாத்திரத்தில் நடிக்கப்போவதாக கூறப்பட்டது.

இதனை விஜய் சேதுபதி மறுத்துள்ளார். "நான் அந்த படத்தில் நடிக்கவில்லை. இதுபோன்ற தகவல் எப்படி பரவியது? என்று எனக்கு தெரியவில்லை", என்று அவர் கூறி உள்ளார்.



நடிகை யாஷிகா ஆனந்த் இருட்டு அறையில் முரட்டு குத்து போன்ற படங்களில் மிக கவர்ச்சியாக நடித்து தமிழ் சினிமாவில் பிரபலம் ஆகி இருந்தார். அதன் பின் பிக் பாஸ் போட்டியாளராக வந்து இருந்தார் அவர். தற்போதும் படங்களில் கவர்ச்சியாகவே நடித்து வருகிறார் அவர். இந்நிலையில் யாஷிகா தற்போது வெறும் பூக்கள் மற்றும் பிளாஸ்டிக் கவரை வைத்து உடையாக சுற்றிக்கொண்டு மிக கவர்ச்சியாக போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அதை பார்த்து ரசிகர்கள் ஆச்சர்யம் அடைந்து இருக்கின்றனர்.

# பணம் கேட்டு ரன்வீர் சிங்குக்கு மிரட்டல்



பாலிவுட் நடிகரான ரன்வீர்சிங், சமீபத்தில் துரந்தர் படத்தில் நடித்திருந்தார். இத்திரைப்படம் ரசிகர்களிடம் அமோக வரவேற்பு பெற்றிருந்தது. அத்துடன் வசூலையும் வாரிக் குவித்தது.

இந்நிலையில், ரன்வீர் சிங்கின் வாட்ஸ் அப் எண்ணுக்கு ஒருவர் மிரட்டல் விடுத்துள்ளார். அதில் கோடிக்கணக்கில் பணம் தரவேண்டும் என கோரியுள்ளார். இதுதொடர்பாக, மும்பை போலீசிடம் ரன்வீர் சிங் புகார் அளித்தார்.

இதையடுத்து, ரன்வீர்சிங் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. தனியார் பாதுகாவலர்களும் அதிகப்படுத்தப்பட்டு உள்ளனர்.

மிரட்டல் விடுத்தவர் லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலைச் சேர்ந்தவர் என்ற கோணத்தில் போலீசாரும் விசாரணையைத் தொடங்கி உள்ளனர்.

பாலிவுட் நடிகரான ரன்வீர் சிங்கிடம் பணம் கேட்டு மிரட்டல் விடுக்கப்பட்டது மும்பையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

# அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

## அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் **(22-02-2026) ஞாயிற்றுக்கிழமை** பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.


### நிகழ்ச்சி நிரல்


| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம், நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிராத்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

**திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு**

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829

















### ஆண்டாண்டு காலம்

ஜனவரியில் பொங்கல் விழா
பிப்ரவரியில் காதலர்
அலப்பறை
மார்ச்சில் தேர்வுகள் அச்சம்

ஏப்ரல் முட்டாள்கள் தினமாம்
மேயில் வெய்யில் வாட்டும்
ஜூனிலும் தொடரும்அவலம்

ஜூலையில் உஷ்ணம்
தணியும் ஆகஸ்டில்
இந்திய சுதந்திரம்

செப்டம்பரில் கல்யாண களை
அக்டோபரில் காந்தி ஜெயந்தி



நவம்பரில்
குழந்தைகள்
தினம்
டிசம்பரில்
கடுங்குளிர்
வாட்டும்

**பி. பழனி,**
சென்னை.




எண்ணச் சிதறல்கள்
தெறித்து விழ
வண்ண வானவில்
உள்ளங்கைகளில்..

பார்த்த கணம் உயிர் பிரிந்து
சென்றது.. பேச ஆரம்பித்த
நொடியில் உட்புகுந்து
நிரம்பித்தன்னை
சாஸ்வதமாக்கிக்
கொண்டது அன்று.

சிலிர்க்கவைக்கும்
பாடல்களுக்கும்,
உட்புகுந்து உயிர்நிறப்பும்
சுவாசக்காற்றுக்கும்
உன் ஞாபகத்தின் சாயல்!

ஆயுள் ரேகையாய்
நீண்டு படுத்திருக்கிறாய்
என் உள்ளங்கைக்குள்..



சுருட்டி
வைக்கப்பட்ட
காதல் நீ !

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.

### காலம்

அதிகாலை மெல்லப்
புலருகிறது என்பது
பொழுதுக்கு வலிக்கும்
என்பதால் அல்ல. அதைப்
பார்க்கப் பார்க்க அழகு
என்பதை உணர்த்தவே...

நேரம் அதிவேகமாக
ஓடுகிறது என்பது
கடிகாரத்துக்கு வலிக்காது



என்பதால்
அல்ல
காலம்
கடந்துவிடும்
என்பதை
உணர்த்தவே.

**கே. பி. ஜனார்த்தனன்**



### தாஜ்மஹல்

ஒருவேளை ஷாஜகான்
மும்தாஜை காணும் முன்
உன்னை கண்டிருப்பின்....
நான் ஒரு குழந்தை ,
நீ ஒரு குழந்தை !
நமக்கு எதற்கு பதினான்கு



குழந்தை
என்று
உன்
வேதனையை
தாங்க
மாட்டாமல்
சொல்லி
இருப்பானோ !

**எம்.பி.தினேஷ்.** கோவை



இந்த மேகத்திலிருந்து
அந்த மேகத்திற்குத்
தாவும் போதுதான்
உன்னைப் பார்த்தேன் !

**ரிஷபன்**



### காயங்கள் !

'இந்த மயிலிறகை
உன்நோட்டு புத்தகத்தில்
வச்சுக்கோ என் ஞாபகம்
வரும்போது எல்லாம்
எடுத்து பாரு !" என்று
பத்தாம் வகுப்பில் என்னிடம்
சொல்லிய கீர்த்தனா !

" என் கையாலயே
எம்பிராய்டரிங் செய்த இந்த
கர்ச்சீப்பை எப்பவும் என்
நினைவா வச்சுக்கோ !"
என்று பன்னிரண்டாம்
வகுப்பில் சொன்ன ராதிகா !

"நீ வாங்கி கொடுத்த
'பார்க்கர் பென் ' ல தினமும்
உன் பெயரை எழுதுவேன் !".
என்று கல்லூரியில் சொன்ன
ரேவதி !

"நீங்க லஞ்ச் கொண்டு
வர வேண்டாம், இனி
உங்களுக்கும் சேர்த்தே
நான் கொண்டு வரேன்
இனிமே அப்படித்தான் !
என்று சொன்ன என் அதே
நிறுவனத்தில் பணிபுரிந்த
லாவண்யா !

இவர்களெல்லாம்
உருவாக்கிய காயங்கள்...
என்னை நினைவுபடுத்தி
கொள்ள வைக்கிற
நாள்................ பிப்ரவரி 14 !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

### வாழ்தலின் வலிமை.!

விரதநாளன்று மடைதாண்ட
நேர்கையில் குறுக்கே
பாய்ந்து குதூகலிக்கின்றன
பெருத்த விரால்மீன்கள்....
பத்தியத்தில் பாத்தியப்பட்ட
காய்கறிகளே விலைமலிவாய்
விரவிக்கிடக்கின்றன
சந்தைத்திடலெங்கும்...
விருப்பமான துணிகளையே
விண்டெடுத்து
துண்டாடுகின்றன
பாச்சைகளும்.. எலிகளும்...
முதல் வரும்படியென
எடுத்துவைத்த ஒன்றை
ஐநூறையும் செல்லாதென்று
அறிவித்துவிட்டதே
காலம்.. சலிப்போடு
சாய்கையில்.. மின்சார
தூண்டலாய்.. முதுகெலும்பை
நிமிர்த்துகிறது.. சன்னலுக்கு
வெளியே..'எங்கே
பிழைக்கப்போகிறது
'என விட்டேந்தியாய்
வைத்த விதையொன்று..
தளிர்விட்டு.. எழுந்து
தலையாட்டும் உயிர்ப்பில்.!*

**க.குமாரகுரு,**மயிலாடுதுறை

### வழியெல்லாம் வசந்தம்!

அறுசீர் மண்டிலம்.
எங்கெங்கு நோக்கினும்
வசந்தம் இயற்கையின்
படைப்பெல்லாம் வசந்தம்
அங்கிங்கே
எனாதவாறு வசந்தம்
அழகுக்கே
அழகூட்டும் வசந்தம்!
மங்காத
காட்சியெலாம் வசந்தம்
மாண்புக்குப்
பேர்போன வசந்தம்
தங்கிடுமா
எங்கெங்கும் வசந்தம்
தண்மைதனை
நல்கிடுமா வசந்தம்!

போகின்ற
வழியெல்லாம் வசந்தம்
பொலிவுக்குப்
பேர்போன வசந்தம்
ஈகைக்குப் பயனாகும் வசந்தம்
இனிமைதனை
நலமாக்கும் வசந்தம்!
சோகத்தை
விரட்டிடுமே வசந்தம்
சொர்க்கத்தைக்
காட்டிடுமே வசந்தம்
தாகத்தைப்
போக்கிடுமே வசந்தம்
தங்கத்தின்
மேலான வசந்தம்!



### குழந்தைப் பாடல்!
### குரங்கு!

குரங்குப் பொல்லாக் குரங்கு
குனிந்து பார்க்கும் குரங்கு
உருண்ட கண்ணால் பார்க்கும்
உன்னை என்னை
முறைக்கும்!


முறைத்து முறைத்துப்
பார்க்கும் முன்னே வந்து
நிற்கும் பழத்தை எடுத்தே
ஓடும் பயமே இன்றி ஆடும்!

எல்லா இடமும் தாவும்
எல்லை இன்றி ஓடும்
பொல்லாச் செயல்கள் புரியும்
போகும் எங்கும் தாவியே!



மரத்தில் ஏறித் தாவும்
மந்தி என்ற பேராம்
விரைந்து விரைந்தே ஓடும்
கடுவன் என்ற பேராம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



### காதலி

என் சூடான நேரங்களில்
என்னைக்குளிர்ச்சியாக்குகிறாய்!
குளிர்ந்த நேரங்களில்
என்னைச்சூடேற்றுகிறாய்!
உன்னை விட ஆகச் சிறந்த
கா த லி யா க எனக்கு
வேறு யார் கிடைப்பார்கள்!

### கவிதை

உன் சிரிப்பை விட
வேறோர் அழகான
கவிதையை இந்த உலகத்தில்
நான் பார்த்து விட முடியுமா
என்ன?!

### நினைவுகள்

என்னைப்பின்னிப்
பெடலெடுக்கிறது உன்
நினைவுகள்!
அதை அமர வைக்க
முயற்சி செய்து ஒவ்வொரு
முறையும் தோற்றுப்
போகிறேன் நான்!

### பயிர்

உனக்கும் எனக்கும்
மிகப் பொருத்தமான
வார்த்தைகள் அன்பே
பருவத்தே பயிர் செய் என்பது!

### அழகு

ஒவ்வொரு முறையும்
அழகாகவே சிரிக்கிறாய்!
அதைப் பார்க்கும்
போதெல்லாம் வெகு
அழகாகவே கவிதை எழுதிக்
கொள்கிறது என்
கா த ல் ம ன சு!

### அன்பே

ஒரு கவிதையைப் படித்து
விட்டு இந்தக் கவிதை
மிகவும் அழகாக
இருக்கிறது என்கிறாய்!
நீயிருக்கும் ஒவ்வொரு
கவிதையும் எனக்கு
அழகு தானே அன்பே!

### காதல் தீ

நீ என்னவோ ஒவ்வொரு
முறையும் என்னை
வெகு சுலபமாகக்கடந்து
செல்கிறாய்! ஆனால்
எனக்கோ உன்னைக்
கடந்து செல்ல இயலாமல்
கா த ல் தீ பற்றி எரிகிறது!

### இ த ய ம்

அதென்னவோ
உன்னைப் பார்த்த பிறகு
என் இதயக் கதவுகள்
தானாகத்திறந்து கொண்டது!

### மனது

உன்னைத்தவிர
வேறு யாரையும் பார்க்கக்
கூடாது நினைக்கக் கூடாது
என்று என்னமாய்ப்
பிடிவாதம் பிடிக்கிறது இந்தக்
கா த ல் ம ன து!

### ஏன்?



நீ எப்பொழுதும்
என்னுடனிருக்கப்
பயமேன்?
என் கா த லு க் கு!

**முத்து ஆனந்த்**
வேலூர்



### எனக்கொரு சொந்தம்.!

என் பாட்டன் பாரதியார்!
என் தாத்தன் காந்தியார்!
என் அண்ணா காஞ்சிபுரம்!
என்தம்பி பிரபாகரன்!

என்பூட்டன் ராசராசன்!
என் சொந்தம் கரிகாலன்
எனதூரான் கட்டபொம்மன்
என் பாட்டன் பாவேந்தன்!

எமக்கிங்கு சொந்தங்கள்
எங்குமுண்டு! எமகிங்கு ஈடாக
எந்த இனம்தானுண்டு?

கல்தோன்றும் முன்தோன்றி
வந்தோமென்று..
கருத்தூன்றி விதைத்திட்ட
சொல்தானுண்டு!
தென்பாண்டித் தமிழ்தந்த
சிவன்தானுண்டு! சீறிவரும்
வேல் தாங்கி நின்றானென்று..

தேரிட்டு மகன்உயிரை
எடுத்தானென்று.. தேயத்தில்
மனுநீதிக் காத்தானென்று..
போரிட்டு மார்பினிலே
வேலேந்தி நின்று.. மண்டியிடா
புலியாகப் பிறந்தானென்று..

எங்களுயிர் சொந்தங்கள்
எங்குமுண்டு! எம்போன்ற
இனம்தான் இங்கு எங்கே
உண்டு?

கற்பனையல்ல அவன்
வந்தபாதை! காட்டாறு
முட்புதர்கள் எத்தனை வாதை?
அற்புதமாய் கடந்துவந்த
சாதனைப்பாதை!
அத்தனைக்கும்சொந்தக்காரன்..
அணையா நெருப்பு!

இத்தனைக்கும்
சொந்தக்காரன்
எம்மினத்தான்! எமக்கிங்கு
ஈடாக இனம் எங்கு உண்டு?

கலைத்தாகம் மொழியின்
வேகம்.. கருணைமழை
பொழியும் மேகம்!
அனைத்துமே கொண்டிருந்த
இனம்தான் தமிழன்!
அவனுடனே பிறந்தேனென்ற
பெருமையுண்டு!

எமக்கிங்கு சொந்தங்கள்
எங்குமுண்டு! எமக்கிங்கு
ஈடாக எந்த இனம்தானுண்டு?

### அடக்கம்

நடக்கும் யாவும் நாம்
அறிவோம்.. எல்லாம்
அடக்கம் என்ற சொல்லில்
தான் அடக்கம்.

நாவடக்கம். புலனடக்கம்
நாணத்தின் பெயரடக்கம்.
ஊனுக்குள் உயிரடக்கம்
உயிரடங்க உடலடக்கம்!

உலகமே எதிலடக்கம்?
உண்மையிலே எது
அடக்கம்! துள்ளும் அலை
கரையடக்கம்!
கரையெல்லாம் கடலடக்கம்!

வாழவந்த நிலத்தில்தான்
எவ்வுயிரும் அடக்கம்..
எவ்வுயுரும் படைத்தவனின்
பார்வையிலே அடக்கம்!

ஆமைகுணம் அடக்கம்.
ஊமைமொழி மனதடக்கம்!
தாயின் மொழியில்
உயிரடக்கம் ! தத்துவங்கள்
மௌனத்தே அடக்கம்.

அடக்கம் இல்லையெனில்
ஆடுவது தொடக்கம்..
ஆடும்வரை ஆடிவிட்டால்
அடங்குவதும் அதில்
அடக்கம்.

### இதுதான் உலகமா.?

சில்லரையால் சுத்துதடா
உலகம்.! இந்த உண்மையினை
சொல்லப்போனா கலகம்!
அட.. ராமய்யா.. அட..
சோமய்யா.. சில்லரைபின்
போகுறயே.. ஏனய்யா?

காந்தி நோட்டை மாத்தி வச்சு
பிராந்திக்கடை போகுறீயே..
வீதியிலே நின்று கொண்டு
வேதாந்தம் பேசுறேயே.!
பாய்விரித்து படுத்துக்
கொண்டு.. பல்லாக்கில்
மிதக்குறேயே.. கானலினை
நம்பி நித்தம் கனவுலகில்
ஏங்குறேயே! அட..
ராமய்யா.. அட.. சோமய்யா..
சில்லரைப்பின் செல்கிறாயே
ஏனய்யா?

எழுதி எழுதி வைத்ததெல்லாம்
புத்தகத்தில் தூங்குது..
கைப்பேசி உலகத்திலே
காண்பதெல்லாம் சுருங்குது.!
பந்தமுடன் பாசமிங்கு
பணத்துக்குப்பின் ஓடுது..
பாதையோரம் நின்றபடி
பழங்கதைகள் பாடுது!
அட.. ராமய்யா.. அட..
சோமய்யா.. சில்லரைப் பின்
செல்லுகிறாய் ஏனய்யா?

### சோளக்காட்டழகி..

சோளக் காட்டுக்குள்ளே
சொக்க வைக்கும் அழகியே..
மேலாக்கைப் போட்டுக்கிட்டு
நிக்குற.. என்.. மனசைத்
துடிதுடிக்க வைக்குறே.!

ஆலையிட்ட செங்கரும்பே..
அச்சு வெல்ல உதட்டாலே..
அத்தானை ஆசைப்பட்டு
அழைக்குறே.. அடிக்கரும்பு
தொட்டவுடன் இனிக்குறே.!

மாலையிலே மங்குகிற
சூரியனை போலிருந்தேன்..
மேலெழுந்த வெண்ணிலவாய்
ஜொலிக்கிறே..
சோளைக்காட்டில்
கண்ணாலே அழைக்குறே.!

ஆத்தோரம் பூத்துவந்த
ஆவாரம் பூவாகி.. அந்தி
சாய முந்திவந்து நிக்குறே..



முத்துமுத்தா
சோளக்கதிர் வெடித்து
சிதறவைத்து..
ஒத்துகிட்டு
ஒத்தையாக வந்து
நிக்குறே.!

**வே.கல்யாணகுமார்.**

### நூல் விமர்சனம்

நூலின் பெயர்: கால தானம்
ஆசிரியர்: வழக்கறிஞர் சுமதி
வெளியீடு : எழுத்து பிரசுரம்
விலை : ₹225 தொடர்புக்கு :
8925061999

காலதானம் இறந்தவரின் ஆன்மாவே பேசுகிறார் போல ஒரு கதை "இன்னும் சற்று நேரத்தில் எரியூட்டிய பின் எல்லோருமே என்னை மறந்துவிடப் போகிறார்கள்."

ஆனால் மறைந்த பாமா கோபாலனுக்கு , " சே என்ன மனுஷன் ஸார் "நீங்கள், உங்களை மீண்டும் ஒரு முறை சேவித்துக் கொள்கிறேன் என வழக்கறிஞர் சுமதி, அவர் ஆன்மாவோடு பேசுவது போலவே அமுதசுரபி மாத இதழில் எழுதியிருந்த அந்த அஞ்சலிக் கட்டுரை நெஞ்சம் நெகிழச் செய்தது. (கால தானம் வீண்போகலை)

"அடவுகள் "கதையில் வீணாவின் நாட்டியக் கனவுகளைப் பொசுக்கி, மனசுக்குள் அவளை அலறவிட்ட ரவி அவள் மறைவிற்கு பின் நடனம் தெரியாது போனாலும் ,சலங்கை மணியை ஆட்டி பூஜித்து அலாரிப்பு சமர்பித்து என்ன பயன்?




கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன் சொன்னது போல, இந்த கதை தொகுப்பிற்கு(கலைமகளில் வந்த 12 கதைகள்) சாகித்திய அகாடமி விருது கிடைத்தால் என் போன்ற வாசகனுக்கும் அளவிலா மகிழ்ச்சி என்பதை சொல்லவும் வேண்டுமோ?

**ஸ்ரீகாந்த் திருச்சி**

### ஆறறிவு எதற்கு?

இந்த மந்தி காட்டும்
அன்பு கூட
ஒரு மகனும் காட்டவில்லை.

என் முந்தி விரித்துப்
பெற்ற உறவு என்னை வீட்டில்
சேர்க்கவில்லை.

எந்திரமாய் இதயம் மாறி
சந்தை விலை ஆயாச்சு?

இதில் சந்திரனுக்கு
ஊர்திவிட்டு
லாபமென்னலாச்சு.?


கருவறையில் சுமந்த
உயிர்கள் என்னைத்
தெருவினிலே துரத்தி

கருவேப்பிலை போல்
என்னைத் தூக்கி
குப்பையிலே வீசி

எச்சில் சோறு கேட்டும் கூட
இரங்கவில்லை மனசு.

ஒரு வாய்ப் பிச்சையிடக்கூட
இங்கே பிரியமின்றிப் போச்சு.
அனாதையாக அழுகின்றேன்
நடுத்தெருவில் நின்று

என் வயிற்றுப்பசியை



கழுவுகின்றேன்
கையேந்தி விதியை நொந்து

படைத்தவனைத்
தேடுகின்றேன்
கேள்வி கேட்க ஒன்று

நான் பெற்ற கடனைத்
தீர்ப்பதற்கு வழியெங்கே என்று

உறவென்று யாருமில்லை
நீயும் நானும் சமம்தான்.

உன்னைக் குரங்கென்று
இகழவில்லை உன் கரங்கள்
கடவுள் முகம்தான்.

ஆறறிவு இனி எதற்கு
அன்பில்லா மகற்கு ?

மரமேறுகின்ற மந்தியிடம்
உள்ள நன்றியுண்டா
உனக்கு?

**நறுமுகை**

### எந்தக் கடையில் வாங்கியது

ஒரேகடையில் வாங்கிட்ட துணியோ நம்மை
ஒன்றாகக் காக்கிறது மானம் தன்னை
ஒரேகடையில் வாங்கிட்ட அரிசி நம்முள்
ஒன்றாக அணைக்கிறது பசியின் தீயை !
ஒரேவகுப்பில் படித்திட்ட கல்வி பட்டம்
ஒன்றாக அளிக்கிறது நம்மின் கையில்
ஊரினிலே எக்கடையில் வாங்கிய சாதி
உங்களினை ஏற்றியது உயர்ந்தோ ரென்றே !

உங்களுடை இல்லத்துத் திரும ணத்தில்
உயர்வான பந்திலினைப் போடு கின்றோம்
உங்களுடை இல்லத்துத் திருமணத்தில்
உட்கார நாற்காலி போடுகின்றோம் !
உங்களுடை இல்லத்துத் திருமணத்தில்
உண்பதற்குப் பந்தியினைப் போடுகின்றோம்
எங்களுக்குப் பந்திமட்டும் பந்தல் விட்டு
ஏக்கமுடன் காத்திருக்கும் நாய்களோடே

புறம்போக்கென் றெங்களுக்கோ ஊரை விட்டுப்
புறம்போக்கில் சேரிகட்டி ஒதுக்கி வைத்தீர்



அறமின்றித் தேர்தல்லே போட்டி போட
அறிவித்தீர் தனியாகத் தொகுதி யென்றே !
மறத்திமிழன் யாதும்ஊர் கேளிர் என்றே
மார்தட்டி முழங்குகின்றீர் மேடை தோறும்
இறந்தாலும் தனியான சுடுகா டென்றே
இருக்கின்ற போதுசாதி மறைவதெப்போ !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**





## அனைத்துயிர்க்கும் உரிமை என்றுணர்வோம்

அருட்திருவாம் இரமணர்தாம் அமர்ந்திருந்த
அழகான மலைக்குகைக்குள் அரவமொன்று
திருமுகத்தைக் காட்டியதைக்கண்ட சீடர்
திரளாக எழுந்திட்டார் அடித்துக்கொல்ல !
திருமகனார் என்னவென்று விழியால் கேட்கத்
தீநஞ்சு பாம்பொன்று நுழைந்த தென்றார்
பெருமகனார் நுழையவில்லை அதனிடத்தில்
பெருந்தீங்காய் நாம்தானே உள்ளோ மென்றார் !

அதுவாழ்ந்த இடத்தில்நாம் அமர்ந்து கொண்டு
அதைவிரட்ட நாம்முயலல் தவறுதானே
அதுவொன்றும் நம்மிடத்தைப் பறிக்க வில்லை
ஆக்ரமித்த குற்றத்தைப் புரிந்த வர்நாம் !
மெதுவாக இரமணர்தாம் எடுத்துரைத்து
மேலுமதைத் துன்புறுத்த வேண்டாவென்றார்
அதுவாகச் சென்றதந்தக் குகையை விட்டே
அதைப்பார்த்த அனைவருமே அமைதியானார் !

அதுபோல யானைகள்தாம் சென்ற பாதை
அடைத்ததிலே வீடுகள்தாம் கட்டிக்கொண்டு
அதுவந்து தொல்லைகள்தாம் தருகுதென்றே
அனைவரதை விரட்டுதற்குக் கூடுகின்றோம் !
எதுவொன்றும் நமக்கென்றே எண்ணிக்கொண்டு
எல்லாமும் நாமெடுத்துக் கொள்ளல் விட்டு
பொதுவென்றும் அனைத்துயிர்க்கும் உரிமை யென்னும்
பொறுப்புணர்ந்தால் இடையூறு வாராதார்க்கும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



காதலின் தடங்களை
நீ காத்திருந்த
வாசல்படிகளே சொல்லும்!

நீ கடந்து போவதே
காயப்படுத்துகிறது
நீயும் காதலித்து இருந்தால்
நான் என்னாவேன்?!

நீ விட்டு போன பின்பும்
சிக்கித் தான் தவிக்கிறது
அந்த பாவப்பட்ட உயிர்
உடல் சிதைவது மட்டும்
மரணமாகாது!

உன் கண்கள் என்னும்
தூண்டிலில் மீனாய்
சிக்கிக் கொண்டேன்
நானடி!
உன் வனத்தில்
மட்டும் தான்
மான்கள் புலிகளை
வேட்டையாடுமோ
என்னவோ?!

ஒருமுறை எந்தன் நிலத்துக்கு
வந்து போயேண்டி வறண்ட
பாலைவனங்களிலெல்லாம்
மழை பெய்ந்து தீர்க்கட்டும்!!

மொத்தமாய் வேண்டாம்
உன் சின்ன முத்தங்கள்
இப்போதைக்கு போதுமடி!!

கால் மேலேறி எக்கி
ஏக்கத்தோடு கொடுக்கும்
குள்ளச்சியின் தூய எச்சில்
முத்தத்திற்கு ஈடு இணை
இப்பிரபஞ்சத்தில் இல்லை!

கண்களை மூடிக்கொள்
கவிதை மழை
கொட்டோ கொட்டுகிறது!

பார்த்ததும் போதையேற்றியது?
உன் கண்கள் என்ன??
(வ/ந)யாகரா நதியா!!

இதுவரை இதழ்கள்
பேசாததை மௌனங்களால்
இரு விழிகள் பேசிடுதே!

மெல்ல,மெல்ல கொல்கிறதே?
காதல் என்ன
உயிர்க்கொல்லி நோயா!



காதலொரு
உயிர்க்கொல்லி நோய்
அது உன்னை
நரகத்தில் தள்ளி
விடாமல் விடாது!

**லி.நௌஷாத் கான்**

## ஊர்ப் பேச்சு !

உன்னைப் பற்றியும்,
என்னைப் பற்றியும்
ஊரெல்லாம் பேசிக்
கொண்டு தான்
இருக்கிறது...
ஆனால் என்னைப் பற்றி
நீயோ உன்னை பற்றி
நானே நினைத்துக்
கொள்வதை தவிர இனியும்
பேசிக்கொள்ளாமல் தான்
இருக்கிறோம் !

**எம்.பி.தினேஷ்.**கோவை

1. விருப்பத்திற்கும்
நேசத்திற்கும் வேறுபாடு
உண்டு பூக்களை
விரும்புபவர்கள் அதனை
பறித்து சூடுவார்கள்
பூக்களை நேசிப்பவர்கள்
அந்த செடிக்கு தண்ணீர்
ஊற்றுவார்கள்

2.கவலையும் கண்ணீரும்
ஒருபோதும் நம்மை வாழ
வைக்காது தைரியமும்
நம்பிக்கையும் தான் நம்மை
வாழ வக்கும்

3. மீதம் எவ்வளவு உள்ளது
என்பது தெரியாமலே நாம்
செலவு செய்வதுதான் காலம்

4.சிரித்துக் கொண்டே
நகர்வதால் வலிக்கவில்லை
என்ற அர்த்தம் இல்லை
வலிகளை காட்டிக் கொள்ள
விருப்பமில்லை என்று
அர்த்தம்

5. புண்ணியம் என்பது
எதுவென்றால் யாருக்கும்
எதையும் கொடுப்பது அல்ல
யாருடைய சாபத்தையும்
வாங்காமல் இருப்பது தான்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## கூட்டுக் குடும்பம்

குதூகல வாழ்விற்கு
கூட்டுக் குடும்பம்
வேண்டுமே!
குறை கூறினாலும்
குற்றம் கண்டாலும்
கூட்டுக் குடும்ப சுகம்
கூடுதல் சுகமே!

மகேசனாய் மனதார
மகிமைகளை கூறி
மாண்பாய் வழி நடத்திட
மாமனார் வேண்டுமே!

குல வழக்கத்தை
குறையின்றி
கூறிடவே
குதூகலமாய் வாழ்வை
குறையின்றி
நடத்திடவே
குறைகளை
கோபுரமாக்கா
மாமியார் வேண்டுமே!

நறுக்கென்று பேசாது
நட்பாய் பழகி
நயமாய் பேசிடவே
நாத்தனார் வேண்டுமே!

கொத்தமல்லியின்
நறுமணமாய்
குறை கூறா குணமாய்
குழந்தைகளை தூக்கி
கொஞ்சிடவே
கொழுந்தன் வேண்டுமே!

உறவு முறை தெரியா
உலக மாய் மாறிட
வேண்டாமே!
உறவு பாலம் அமைந்திட
உறவுகளை உரமாக்கு
உன்னத வாழ்விற்கு



**பா.கலைமகள்,**
விழுப்புரம்.



## வேரை அறுத்தாலும்..!

அறுசீர் மண்டிலம்.

இயற்கையின் வரமே
மரங்கள் ஈடிலாத் தொண்டின்
வரங்கள் நயன்மையாய்
நன்மை செய்யும் நாளுமே
உதவி செய்யும்!
உயிர்வளி தம்மை நல்கும்
உன்னதத் தன்மை பல்கும்
வியப்புடன் தானே மரங்கள்
வீறுடன் தேனாய் உரங்கள்!

மரத்தினை வெட்ட வேண்டாம்
மாண்புடன் கன்றை நடுவோம்
மரமது நம்மின் நண்பன்
மணியெனக் காக்கும்
அன்பன்! மரமது தமிழர்
தெய்வம் மங்கையர் போற்ற
உய்வோம் திருவென
மரத்தைப் போற்று
தெளிவுடன் மரத்தைச் சாற்று!

## பருப்புவகை உண்போம்!

நேரிசை வெண்பா!

ஆரோக்கியமான
அன்பாம் உணவுக்குச்
சீரான நல்பருப்பு சீர்மையே...
தேர்ந்திட நோய்ப்புரதமும்
நேர்ந்தேதான் கிட்டுமே
ஆராய்ந்தே உண்ணலாம்
ஆம்!

புரதமும் நார்ச்சத்தும் பீடுற
உண்ண பருப்பு வகைகளே
பாங்கு!---
அருமையான
தாதுப்பொருட்கள்
தந்திடுமே ஆகவே
ஒது பருப்பையே ஓர்ந்து!

## குடைகளுக்கு நன்றி கூர்வோம்!

அறுசீர் மண்டிலம்.

வெப்பத்தின் வீச்சில்
காக்கும் வீறுடனே நிழலைத்
தேக்கும் தப்பாமல் மழையைக்
காக்கும் தவறாது தலையைக்
காக்கும்! எப்பவுமே நம்மைக்
காக்கும் ஏற்றமுடன் குடையே
காக்கும் ஒப்பில்லாக் குடையே
நன்று ஒண்மையாக சொல்லு
நன்றி!

கலைநயமாய்க் குடைகள்
உண்டு காட்சிக்குப் பலவும்
உண்டு விலைமதிப்பாய்க்
குடையும் உண்டு
வீறுடைய குடைகள் உண்டு!
பலவிதமாய்க் குடைகள்
உண்டு பரவசமாய்க் குடைகள்
உண்டு நலங்காக்கும்
குடைக்கு நன்றி
நாமும்தான் சொல்லு
வோமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## இன்னும் வேண்டும்

" பேச்சுரிமை எழுத்துரிமை
சொத்துரிமை வாக்குரிமை
சமத்துவ உரிமை..."

நாடு நமக்கு எல்லாம்
கொடுத்தது சுதந்திரம்
எனும் பெரும் பொக்கிஷம்
நம் கையில் கிடைத்த
பிறகு..."

சட்ட உரிமை உணவுப்
பொருள் உரிமை
பாதுகாப்பு உரிமை
நீர் உரிமை நில உரிமை ....."

எல்லாம் கொடுத்து
குடிமகன் இந்திய
மண்ணின் மைந்தன்
என்கிற பெரும்
பாக்கியத்தை நாடு
sதருகிறது .... "

தாய்நாடு தாய்மண்
நம் தேசம் நம் சுவாசம்
நம் பாசம் நல் நோக்கம் ....."

கனவிலும் நினைவிலும்
நம் தேசம் பற்றிய சிந்தனை
முன்னேற்ற பாதை
காண உழைப்பு
தான் மூலவிதை ..."

துரோகம் இல்லாத
தூய்மை நேர்மை



நேசிப்பு தான்
வேண்டும்
இன்றும்
என்றும்..."

**ஆர்.சீதாராமன்**
சீர்காழி

## வாய்க்குமா வரம்?


கடுமையான கோடையில்
ஒரு குளிர்ந்த நதி
வானத்தரையில் நின்று
பூமியைப் பார்க்கும் வாய்ப்பு.
நொடியில் துரோகியை
மறக்கின்ற மனம்
சொல்வதைத் தட்டாமல்
கேட்கும் பிள்ளைகள்
மரணத்தின் வருகையைத்
தெரிந்து கொள்ளும் பேறறிவு
கடவுளை நேரில் சந்தித்து
கைக்குலுக்கிக் கொள்ளும்
அரிய தருணம் இடையூறு
இடையூறைத்தீர்க்கும் கடவுள்
போக்குவரத்துக்கு
இடையூறாகத்
தார்ச்சாலை நடுவே!



## சுதந்திரம்

சுதந்திரம் பெற்ற
மகிழ்ச்சியில்
காந்தியோ ரூபாய் நோட்டில்
மக்களோ நடுரோட்டில்

**வே.திருஞானமூர்த்தி**
உமையாள்புரம் தஞ்சை (மா)



## இயற்கை

விண்ணை கூர்ந்து
பருகினேன் பசுமை
கண்ணுக்கு விருந்து
கடலலை வேகமாய் கரையில்
மோதித் திரும்புவது
வாடிக்கை

மழை ஜோவென்று
கொட்டுகிறது இடையில்
மின்னல் வெட்டுகிறது
மின்சாரம்
துண்டிக்கப்படுகிறது
வீதி கொட்டக் கொட்ட
விழிக்கிறது

மக்கள் விரைவாய்
ஓடுகின்றனர் பையில்
வைத்தது மாயமாகிறது
நல்லோர் மீட்டுத்
தருகின்றனர்
கண்ணீர் தாரையாய்



வழிகிறது
இதயம்
மீண்டும்
இயங்குகிறது

**பி. பழனி,**
சென்னை.



## சின்னஞ்சிறு உலகம்

மழை நின்ற இதமான
மாலைப் பொழுதில்...

சலசலவென
ஓடும் சேரற்ற நீர்....

துறுதுறுத்த கன்றாய்
துள்ளும் பருவம்..

குளிர் நீரில் விளையாடி
உள்ளம் களிக்கும்..

காகிதத்தை கிழித்து
கப்பலாக்கும்,

கலைநயம் தெரிந்த பிஞ்சு
விரல்கள்!

துடுப்பேதும் வேண்டாத
ஆசைக் கப்பல்,
எரி பொருளை அறியாத
குழந்தைக் கப்பல்!

"சின்னச் சின்ன அலைகளில்
அசைந்து செல்லும்,

அழகான என் கலம்
ஆழ்ந்திடாமல் மெதுவாக
வீசிடணும் காற்றே".....என்று,

இதழ் பிரித்து வேண்டுகின்ற
பிள்ளை உந்தன்,



வண்ணமிகும்
சின்ன
உலகந்தான்
வேண்டும்
எனக்கும்!

**மீனா சேகர்**



## தென்னை மரமே!

மண்ணிலிருந்து
விண்ணைத்தொடுகின்ற
முயற்சியில்
தோல்வியுறுகின்றாய்
ஆனாலும் உன்
தன்னம்பிக்கை மட்டும்
தளர்வதில்லை!

பீஷ்மர் நெஞ்சைத்
துளைத்த அம்புகளைப்
போல் பூமாதேவியின்
நெஞ்சைத்துளைத்த
அம்புகளாய் உன்
பக்க வேர்கள்!

உன் கீற்றுகள் ஏழை
பணக்காரன் பாகுபாடு
பார்க்காமல் வேயப்படும்
பொதுவுடைமைக்
கோபுரங்கள்!

ஆரோக்கியம் வளர்க்கும்
நன்மருந்தாய் இளநீர்
தருகின்றாய் உன்னில் கள்
இறக்கும் சூழ்ச்சியைக்
கற்பித்தது யார்?

வீழ்கின்ற நிலையில்
காய்ந்து தொங்கும்
உன் மட்டைகளைப்
பார்த்துக்காற்றின்
சலசலப்பில் பச்சை மட்டைகள்
சிரிக்கின்றன!
மறைமுகமாய் நீ உணர்த்தும்
நிலையாமைத்
தத்துவத்தை
மானிடர்களால்
புரிந்து கொள்ள
முடியவில்லை!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்



## உணவை மருந்து போல் உண்!

உடல் நலனை பேண உணவே
சிறந்த அடிப்படை !

சத்தான உணவைக்
உட்கொள்வது நோய்களைக்
தடுத்து ஆரோக்கியமான
வாழ்விற்கு வழி வகுக்கும் !

உணவை மருந்தாகக்
உட்கொண்டால் பிற்காலத்தில்
மருந்தை உணவாக
உட்கொள்ள வேண்டிய நிலை
வராது !

பசித்த பின் செரிமானம்
ஆனதை உறுதி செய்து
சத்தான உணவை சரியான
அளவில் உண்பதாகும் !

நோய்களை தடுப்பதோடு
உடலை ஆரோக்கியமாக
வைக்க உதவும் !

பசி அறிந்து உண்பதே
சிறந்தது !

உடல் நலத்திற்கு
தேவையான சத்து
நிறைந்த இயற்கை
உணவை சாப்பிடுவது
நல்லது!

அதிகப்படியான
சர்க்கரையை தவிர்ப்பதே
நீண்ட ஆயுளுக்கு வழி
வகுக்கும் !

உணவே மருந்து மருந்தே
உணவு!

அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சு!

நொறுங்க தின்றால் நூறு
வயது !

தாகம் எடுக்கும் முன் நீர்
அருந்துங்கள்!

அந்தந்த காலங்களில்
பழங்கள் காய்கறிகள் உண்பது
உடலுக்கு நன்மை !

உணவை அதிகம் சாப்பிட்டால்
உணவு உடலை சீரணிக்கும்.!



உணவை குறைவாகக்
சாப்பிட்டால் உடல்
உணவை சீரணிக்கும்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## சேர்ந்து வாழலாமே

தலைவனானாலும்
தலை குனிவது
உன்னிடத்தில்தானே...
கவலையை மறக்க
தலையை கோருவதும் உன்
கைகள்தானே...!

தங்கமே ஆனாலும்
அழகு கூடுவது அதை நீ
அணிந்தால்தானே...
உன்னிடத்தில் நான்
அடிபணிவது உன்
அன்புக்குதானே....!

முந்தானையில் முடிச்சு
போட்டு அக்னியை
சுற்றினோம்தானே...
நம் உறவுக்கு முடிச்சு
போட்டு உயிராய்
இருந்தோம்தானே...!

நாம் பிரிய மனமில்லாமல்
சேர்ந்தே வாழ்ந்தோமே...
நாம் இரண்டுபேரும்
கைகோர்த்து ஊரை
சுற்றினோமே....!

இரு சக்கர வாகனத்தில்
எமன் வருவானு தெரியாம
போச்சே... என்னை விட்டு
நீ பிரிந்த பின்பு நரகம்
இருந்தது தெரியாம
போச்சே...!

நீ எப்போதான் வருவியோ
அன்பு முத்தம் தருவியோ
நீ இருக்கும்இடத்திற்கு
என்னையும்அழைத்துக்கொண்டு
போவியோ....!!

**பொன்.கருணா,** நவிமும்பை



## இன்று பூத்த பூ

இன்று பூத்த பூ...
நேற்றைய மழையும்
இன்றைய
வெப்பத்தையும்
நாளைய
தென்றலையும்
எண்ணி
எதிர்பார்க்காது...

வேர்களில் வலிகள்
இருந்தாலும்
பனித்துளி
தழுவிய இதழ்களில்
இனிய
புன்னகையோடு...

கிளையின் நுனியில்
தொக்கி நிற்கும்
புதிய
நம்பிக்கையோடு...

காலம் கேட்கும்
கேள்விகளுக்கு
மலர்ந்து மௌனமே
பதிலாக...
யாரும் பார்க்காத
கணத்திலும் அழகாய்
இயல்பாய் இருந்து...

வாழ்வின்
நாட்களையும்
வாடும் நேர்த்தையும்
அறிந்தே...

மலரும் இன்று பூத்த
பூ !

**நா.பத்மாவதி**
கொரட்டூர்













**WANTED**

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**

Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com







தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971




999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889



just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


கண்ணீர் அஞ்சலி
கடலூர் மாவட்டம், அரிசிபெரியாங்குப்பம்,
எண்.6, சகுந்தலா நகரில் வசித்து வந்த
திருமதி. G.ராணி அவர்கள்
10.02.2026 செவ்வாய்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார், அம்மையாரது இறுதி ஊர்வலம்
10.02.2026 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு
அரிசிபெரியாங்குப்பம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்...
பிரிவால் வாடும் : கணவர் காந்தி,
மகன்கள், மகள்கள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் பேரக்குழந்தைகள்
வருத்தத்துடன்...
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அரிசிபெரியாங்குப்பம்.



# பல்சுவை களஞ்சியம்



## அந்த கால ஒழுக்க பாடம்



நீரால் கோலம்
போடாதே
நெற்றியைக் காலியாய்
விடாதே
குச்சியைக் கொளுத்தி
வீசாதே
இரவில் ஊசியை
எடுக்காதே

கால் மேல் காலைப்
போடாதே
காலையில் அதிகம்
தூங்காதே
தொடையில் தாளம்
போடாதே
தரையில் வெறுதே
கிடக்காதே

மலஜலம் அடக்கி
வைக்காதே
நகத்தை நீட்டி
வளர்க்காதே
ஆலயம் செல்லத்
தவறாதே

அதிகமாகப் பேசாதே

எண்ணெய் தேய்க்க
மறக்காதே
சந்தியில் நீயும்
உண்ணாதே

விரிப்பைச் சுருட்ட
மறக்காதே
பகலில் படுத்து
உறங்காதே

குளிக்கும் முன்பு
புசிக்காதே
ஈரம் சொட்ட நிற்காதே
நாமம் சொல்ல
மறக்காதே
நல்ல குடியைக்
கெடுக்காதே

தீய வார்த்தை பேசாதே
நின்று தண்ணீர்
குடிக்காதே
எதையும் காலால்
தட்டாதே
எச்சில் பத்தை
மறக்காதே

எல்லாம் சொல்லிக்
கொடுத்தாரே
எந்தன் குடியில்
மூத்தோரே
எல்லாம் கேட்டு
வாழ்ந்தோரே
என்றும் வளமாய்த்
தீர்வோரே

என்ன அழகான வரிகள்
இதை நம்
குழந்தைகளுக்கு
சொல்லி
கொடுக்கலாமே

## எலுமிச்சைப் பழத்தின் தோலில் இவ்வளவு நன்மைகளா!!



எலுமிச்சையில் அதிக கால்சியம், ஃபோலிக் அமிலம் மற்றும் சிட்ரிக் அமிலம் உள்ளது. இது தாகத்தைப் போக்க உதவும் பானமாகவும் மற்றும் பலவித மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ள பழமாகவும் உள்ளது. எலுமிச்சைப் பழத்தைப் போல எலுமிச்சைப் பழத்தின் தோலிலும் ஏராளமான நன்மைகள் உள்ளது.

எலுமிச்சைப் பழத்தின் தோலில் வைட்டமின் ஏ, சி, பீட்டா கரோட்டின், கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம் போன்றவை அதிகம் நிறைந்துள்ளது. மேலும் எலுமிச்சைப் பழத்தோல் ஆண்டிஆக்ஸிடன்டாகச் செயல்படுகிறது.

எலுமிச்சைப் பழத்தோலில் உள்ள நன்மைகள் :

பாத்திரத்தில் தேவையான அளவு வெந்நீர் ஊற்றி, அதில் எலுமிச்சை தோலைப் (எலுமிச்சை தோலின் உட்புறத்தில் உள்ள வெள்ளை தோலை நீக்கி) போட்டு 15 நிமிடங்களுக்கு பின் வடிகட்டி, அதனுடன் தேன் கலந்து குடித்து வந்தால், செரிமான மண்டலம் வலிமையாகி, உடல் எடை குறையும்.

எலுமிச்சைப் பழத்தின் தோலின் மூலமாக செய்யப்படும் டீயை தினமும் குடித்து வந்தால், உடலில் உள்ள ஹைட்ரஜன் அளவைச் சீராக்கி, கல்லீரலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

நமது நகங்களை 15 நிமிடங்கள் வெதுவெதுப்பான நீரில் ஊற வைத்து, பின் எலுமிச்சைத் தோலை நகங்களின் மேல் 30 வினாடிகள் தேய்த்து பின் கழுவினால், நகங்களில் உள்ள மஞ்சள் நிறம் மறைந்து விடும்.

எலுமிச்சைப் பழத்தின் தோலை பற்களில் தேய்த்து வாய் கொப்பளித்து வந்தால், பற்களில் உள்ள மஞ்சள் நிறமும் மறைந்து விடும்.

எலுமிச்சைத் தோலை துருவி, ஸ்பிரேயர் உள்ளே போட்டு அதனுடன் ஒயிட் வினிகரை சேர்த்து 2 வாரம் கழித்து, அதை அனைத்து இடத்திலும் சுத்தம் செய்யும் மருந்தாக பயன்படுத்தலாம்.

எறும்புகள், கரப்பான் தொல்லை போன்ற பூச்சிகளைத் தடுக்க சாக்பீஸ் பயன்படுத்துவதற்குப் பதிலாக, எலுமிச்சைப்பழத் தோலை பயன்படுத்தலாம்.

எலுமிச்சைத் தோலை வெயிலில் உலர்த்தி நன்றாக காய்ந்தவுடன் பொடித்து அதனுடன் தேன், சர்க்கரை, ஆலிவ் ஆயில் கலந்து முகத்தில் ஸ்கரப் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, முகம் பொலிவு பெறும்.

சிலருக்குக் கை, கால் முட்டிகளில் கறுப்பாக இருக்கும். அவர்கள் எலுமிச்சைத் தோலை கருமையான இடங்களில் தேய்த்துவர, கருமை நீங்கி, நல்ல பலன் கிடைக்கும். மேலும், இது சருமத்துக்குப் பளபளப்பையும் தர வல்லது. எலுமிச்சைப்பழத் தோலில் உள்ள எண்ணெய், நறுமணத் தைலங்கள் தயாரிக்க உதவுகிறது.

## மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

## ஜோக்ஸ்



ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?

ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

கடி ஜோக்ஸ்:

டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?

கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?

ஏன் அப்படி?

1330 குறலையும் 133 “அதிகாரமா” எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?



எல்லா பாடங்களையும் “சுமாராய்” தான் நடத்துவார்!

இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?

எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!

ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?

கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா “முழிச்சு”க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.



# வாங்க சம்பாதிக்கலாம்

## வனத்துறையில் அதிகாரி வாய்ப்பு



வனத்துறை அதிகாரி (ஐ.எப்.எஸ்.,) பணியில் 80 காலியிடங்களுக்கு யு.பி.எஸ்.சி., அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கல்வித்தகுதி: அக்ரிகல்சர், வனம், கால்நடை, தாவரவியல், வேதியியல், கணிதம், இயற்பியல், புள்ளியியல், விலங்கியல் பிரிவில் பட்டப்படிப்பு.

வயது: 21-32 (1.7.2026ன் படி)

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு

தேர்வு மையம்: சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 24.2.2026 மாலை 6:00 மணி.

விவரங்களுக்கு: upsc.gov.in

## ஐ.ஏ.எஸ்., அதிகாரியாக விருப்பமா




மத்திய அரசின் சிவில் சர்வீஸ் பணியிடங்களுக்கு தேர்வு அறிவிப்பை யு.பி.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.

காலியிடம்: ஐ.ஏ.எஸ்.,/ஐ.எப்.எஸ்., / ஐ.பி.எஸ்., / ஐ.ஏ.ஏ.எஸ்., / ஐ.சி.ஏ.எஸ்., / ஐ.ஐ.எஸ்., / ஐ.ஆர்.எஸ்., / ஐ.டி.எஸ்., உட்பட 19 பதவிகளில் மொத்தம் 933 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 21-32 (1.7.2026ன் படி)

எத்தனை முறை: பொது 6, ஓ.பி.சி., 9 முறைக்கு மேல் இத்தேர்வை எழுத முடியாது. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு இதில் வரம்பு இல்லை.

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள், எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 24.2.2026 மாலை 6:00 மணி.

விபரங்களுக்கு: www.upsc.gov.in

## பி.எஸ்.என்.எல்., நிறுவனத்தில் வேலை



மத்திய அரசின் பி.எஸ்.என்.எல்., நிறுவனத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சீனியர் எக்சிகியூட்டிவ் டிரைனி பிரிவில் டெலிகாம் 95, பைனான்ஸ் 25 என மொத்தம் 120 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ.,/பி.டெக்., / சி.ஏ., / சி.எம்.ஏ.,

வயது: 21-30 (7.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

தேர்வு மையம்: சென்னை

தேர்வு தேதி: 29.3.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 2500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 1250

கடைசிநாள்: 7.3.2026

விவரங்களுக்கு: bsnl.co.in

## பரோடா வங்கியில் 418 மேனேஜர் பணியிடங்கள்



பொதுத்துறையை சேர்ந்த பரோடா வங்கியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.,) பிரிவில் சீனியர் மேனேஜர் 131, மேனேஜர் 229, ஆபிசர் 56 உட்பட மொத்தம் 418 இடங்கள் உள்ளன.

வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு மையம்: சென்னை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175

கடைசிநாள்: 19.2.2026

விவரங்களுக்கு: bankofbaroda.bank.in

## ஆராய்ச்சி நிறுவனம் அழைக்கிறது



மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தில் (CRRI) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் ஹிந்தி மொழி பெயர்ப்பாளர் 1, செக்யூரிட்டி அசிஸ்டென்ட் 1, எம்.டி.எஸ்., 10 என மொத்தம் 12 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / எம்.ஏ.,

வயது: 18 - 25, 18 - 30 (23.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 23.2.2026

விவரங்களுக்கு: crridom.gov.in/hi

## டில்லி உயர்நீதிமன்றத்தில் உதவியாளர் பணி



டில்லி உயர்நீதிமன்றத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் சட்ட உதவியாளர் பிரிவில் மொத்தம் 152 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

கூடுதல் தகுதி: நிமிடத்துக்கு 35 வார்த்தைகள் தட்டச்சு செய்யும் திறன்.

வயது: 18-32 (1.1.2026ன் படி)

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ.1500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 1300

கடைசிநாள்: 23.2.2026

விவரங்களுக்கு: delhihighcourt.nic.in

# தொடர்ந்து ஏற்றத்தில் சென்செக்ஸ், நிஃப்டி!

பல்வேறு துறைகளில் முதலீட்டாளர்கள் பங்குகளை கொள்முதல் செய்ததாலும், உலகளாவிய சந்தைகளின் நேர்மறையான போக்கு உள்ளிட்டவையால் பங்குச் சந்தை அளவுகோல் குறியீடுகளான சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி இன்று உயர்ந்து முடிவடைந்தன.

30 பங்குகளைக் கொண்ட சென்செக்ஸ், வர்த்தக அமர்வின் போது 417.2 புள்ளிகள் உயர்ந்து 84,482.95 புள்ளிகளை எட்டியது. வர்த்தக முடிவில், சென்செக்ஸ் 208.17 புள்ளிகள் உயர்ந்து 84,273.92 புள்ளிகளாகவும், 50 பங்குகளைக் கொண்ட நிஃப்டி 67.85 புள்ளிகள் உயர்ந்து 25,935.15 புள்ளிகளாக நிலைபெற்றது.

நிஃப்டி-யில் எடர்னல், டாடா ஸ்டீல், பஜாஜ் ஆட்டோ, ஓஎன்ஜிசி மற்றும் எம்&எம் ஆகிய பங்குகள் உயர்ந்தும், மறுபுறம் ஸ்ரீராம் ஃபைனான்ஸ், எச்சிஎல் டெக், டாக்டர் ரெட்டீஸ் லேப்ஸ், பஜாஜ் ஃபைனான்ஸ் மற்றும் பாரதி ஏர்டெல் உள்ளிட்ட பங்குகள் சரிந்தன.

சென்செக்ஸில் எடர்னல், டாடா ஸ்டீல், மஹிந்திரா & மஹிந்திரா, பவர் கிரிட், டெக் மஹிந்திரா, என்டிபிசி, லார்சன் & டூப்ரோ, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், மாருதி சுசுகி இந்தியா, ஆக்சிஸ் வங்கி, டைட்டன் மற்றும் இந்துஸ்தான் யூனிலீவர் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும், மறுபுறம் எச்.சி.எல் டெக்னாலஜிஸ், பஜாஜ் ஃபைனான்ஸ், பாரதி ஏர்டெல், ஏசியன் பெயிண்ட்ஸ், எச்.டி.எஃப்.சி வங்கி, அல்ட்ராடெக் சிமென்ட், அதானி போர்ட்ஸ் உள்ளிட்ட பங்குகள் சரிந்தன.

பார்மா மற்றும் பொது துறை பொதுத்துறை வங்கியைத் தவிர, மற்ற அனைத்து துறை குறியீடுகளும் உயர்ந்தன. மீடியா குறியீடு 2% உயர்ந்த நிலையில் ஆட்டோ குறியீடு 1% உயர்ந்தன.

அமெரிக்க உடனான வர்த்தக ஒப்பந்தம் மற்றும் ஆசிய சந்தைகளின் நேர்மறையான வர்த்தகத்தால், உள்நாட்டு பங்குச் சந்தைகள் தொடர்ந்து மேல் நோக்கி சென்றது. கவனம் ஈர்க்கும் வகையில், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வலுவான முதலீடு மற்றும் ரூபாய் மதிப்பு உயர்வு ஆகியவை முதலீட்டாளர்களின் மனநிலையை வெகுவாக வலுப்படுத்தியது.

நிஃப்டி மிட்கேப் குறியீடு 0.5 சதவீதம் உயர்ந்த நிலையில் ஸ்மால்கேப் குறியீடும் 0.4 சதவீதம் உயர்ந்தன.

பங்கு சார்ந்த நடவடிக்கைகளில், ரூ.455 கோடி ஆர்டரை கையகப்படுத்திய நிலையில், ரயில்டெல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா பங்குகள் 3% அதிகரித்தன. பாட்டா இந்தியா பங்குகள் வலுவான 3வது காலாண்டு வருவாக்குப் பிறகு 4% உயர்ந்தன.

3வது காலாண்டு வருவாய்க்குப் பிறகு நவின் ஃப்ளூரின் இன்டர்நேஷனல் பங்கு விலை 4% சரிந்தன. வலுவான 3வது காலாண்டு முடிவுகளால் பிஎஸ்இ பங்குகளின் விலை 6% உயர்ந்தன. வலுவான 3வது காலாண்டு வருவாய் அடுத்து லுமாக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ஐ.எஸ். ஜி.இ.சி. ஹெவி இன்ஜினியரிங் பங்குகள் 17 முதல் 20% வரை அதிகரித்தன.

ஃபோர்ஸ் மோட்டார்ஸ், 3எம் இந்தியா, டாடா ஸ்டீல், ஜிஇ ஷிப்பிங், நைகா, இண்டஸ் டவர்ஸ், ஏபிஎல் அப்பல்லோ, அசோக் லேலேண்ட், டைட்டன் கம்பெனி, ஜேஎஸ்டபிள்யூ ஸ்டீல், எஸ்பிஐ, அல்ட்ராடெக் சிமென்ட், கேஇஐ இண்டஸ்ட்ரீஸ், எம்ஆர்பிஎல், ஸ்ரீராம் ஃபைனான்ஸ், நவின் ஃப்ளோரின் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பங்குகள் 52 வார உச்சத்தை எட்டின.

ஆசிய சந்தைகளில், ஜப்பான் நிக்கேய் 225 குறியீடு, ஹாங்காங்கின் ஹாங் செங், தென் கொரியா கோஸ்பி மற்றும் ஷாங்காயின் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடுகள் உயர்ந்தன.

தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நேற்று ரூ.2,254.64 கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளனர்.

உலகளாவிய பிரெண்ட் கச்சா எண்ணெய், பீப்பாய்க்கு ஒன்றுக்கு 0.20 சதவீதம் குறைந்து 68.89 அமெரிக்க டாலராக உள்ளது.

## தங்கம் விலை சற்று உயர்வு

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம், வெள்ளி விலைகள் உயர்ந்து வருகின்றன. நேற்று முன்தினம் (பிப்ரவரி 10) ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1,840 ரூபாய் அதிகரித்து, ஒரு சவரன் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை ஆனது. கிராமுக்கு 230 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 14,650 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

வெள்ளி விலை கிராமுக்கு 15 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 300 ரூபாய்க்கும், கிலோவுக்கு 15 ஆயிரம் ரூபாய் உயர்ந்து ஒரு கிலோ 3 லட்சம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று (பிப்ரவரி 10) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 560 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 640 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

கிராமுக்கு 70 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 14,580 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. இந்நிலையில் இன்று (பிப்ரவரி 11) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 160 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

கிராமுக்கு 20 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 14,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி, ஒரு கிராம் 300 ரூபாய்க்கும், ஒரு கிலோ 3 லட்சம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.




இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No



8122664699

## செல்வ விநாயகர் திருக்கோவில் குடமுழுக்கு விழா



மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, எடமேலையூர் செல்வ விநாயகர் திருக்கோவில் குடமுழுக்கு விழாவில் அமைச்சர் டிஆர்பி ராஜா கலந்துகொண்டார்.

## அண்ணா தொழிற்சங்கப் பேரவை ஆர்ப்பாட்டம்



சென்னை எழும்பூரில் நேற்று, டாஸ்மாக் நிர்வாகத்தைக் கண்டித்து அண்ணா தொழிற்சங்கப் பேரவை நடத்திய ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, ஜெயக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 27 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு விழா



மயிலாடுதுறை பெரம்பூர் கிராமத்தில் பழமையான திரிபுரசுந்தரி அம்மன் சமேத அக்னீஸ்வரர் கோவிலில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு விழா நடந்தது.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



விருதுநகர் மாவட்டம் , மல்லாங்கிணறு பேரூராட்சியில் திமுக சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தங்கம்தென்னரசு வழங்கினார்.

## நலத்திட்ட உதவி



எம்ஜிஆர், ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நரசிம்மநாயக்கன்பாளையம் பகுதியில் நலத்திட்ட உதவிகளை அருண்குமார் எம்எல்ஏ வழங்கினார்.

## முனீஸ்வரன் கோயிலில் குடமுழுக்கு விழா



திருவண்ணாமலை தேரடி தெரு முனீஸ்வரன் கோயிலில் நேற்று காலை குடமுழுக்கு விழா நடந்தது.

## கேரம் போட்டியில் உலக சாதனை புரிந்த மாணவி காசிமா,கீர்த்தனா



கேரம் போட்டியில் உலக சாதனை புரிந்த மாணவி காசிமா,கீர்த்தனா மற்றும் தூய்மை பணியாளர்கள் பத்மா, ஷகிலாராணி ஆகியோருக்கு புதுவண்ணையில் டிவிஎம் சேவா பாலம் பாராட்டு விழா நடத்தியது.மனித உரிமை கழக உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் கண்ணதாசன் பரிசு வழங்கினார்.

## திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுக் கூட்டம்



மதுரையில் திமுக 'தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுக் கூட்டம்' துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் நடந்த கலந்தாய்வில், பொதுமக்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்பினரிடம் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

## மௌலிவாக்கம் ஊராட்சியில் நலத்திட்ட உதவி



குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில், மௌலிவாக்கம் ஊராட்சியில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அன்பரசன் வழங்கினார்.

## புதிய ரேஷன் கடை திறப்பு



விளாத்திகுளம் தொகுதி போடுபட்டி கிராமத்தில் புதிய ரேஷன் கடையை, மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து, பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கினார்.

## வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரவீந்திரன்., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 36 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## மகளிர் அணி ஆலோசனை கூட்டம்



குமரி மேற்கு மாவட்டத்தில் வீடு தோறும் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" பரப்புரை மேற்கொள்ளுவது குறித்து கருங்கலில் நடந்த மகளிர் அணி ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் பேசினார்.

## சமுதாய வளையகாப்பு



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயிலில் நடந்த சமுதாய வளையகாப்பு விழாவில் கர்ப்பிணிகளுக்கு கலெக்டர் ஸ்ரீகாந்த், டிஆர்ஓ பூங்கொடி ஆகியோர் மங்கள சீர்வரிசை பொருட்கள் வழங்கினர். அருகில் நிவேதாமுருகன் எம்எல்ஏ.

## திருக்கம்பம் சாட்டு விழா



பழனி மாரியம்மன் கோயில் மாசித் திருவிழாவில் திருக்கம்பம் சாட்டு விழா நடந்தது.

## சாலை பாதுகாப்பு ஓவிய கண்காட்சி




குமரி மாவட்ட ஆயுதப்படையில் 3 நாள் சாலை பாதுகாப்பு ஓவிய கண்காட்சியை எஸ்.பி., ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

## ஆர்ப்பாட்டம்



சிதம்பரத்தில் நியாய விலை கடைபணியாளர் சங்கத்தினர் 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## சேலம் கோட்டை மைதானத்தில் போராட்டம்



தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பினர் நேற்று சேலம் கோட்டை மைதானத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## புதிய பகுதி நேர நியாய விலை கடை திறப்பு விழா



**திருவண்ணாமலை, பிப்.12:**

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேடியப்பனூர் அடி அண்ணாமலை பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை டாக்டர் எ.வ. வே கம்பன் அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பகுதி நேர நியாய விலை கடையை திறந்து வைத்தார்கள். கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## துர்கா ஸ்டாலின் சாமி தரிசனம்



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சியில் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




## தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு



தாம்பரம் மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் அமைச்சர் தா.மோ.அன்பரசன், எம்எல்ஏக்கள் எஸ்ஆர் ராஜா, இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி உணவு வழங்கினர்.

# ரூ. 3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் விமானங்கள்... மத்திய அரசு விரைவில் ஒப்புதல்?

**புதுடெல்லி, பிப்.12:**

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் விரைவில் டெல்லி வர இருக்கிறார். இந்த நிலையில், இந்திய விமானப்படையின் பல்நோக்கு போர் விமானத் திட்டத்திற்காக 114 பிரெஞ்சு தயாரிப்பு ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கான ரூ.3.25 லட்சம் கோடி ஒப்பந்தத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் இந்த வாரம் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்டால், இது இந்தியாவின் இதுவரை இல்லாத மிகப்பெரிய ஆயுத ஒப்பந்தமாக அமையும். இதில் சுமார் 100 விமானங்களை இந்தியாவில் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இது உயர்தர போர் விமான தொழில்நுட்பத்தை இடமாற்றம் செய்வதையும், 'மேக் இன் இந்தியா' திட்டத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டால், இது இந்தியாவை பிரான்ஸ் அல்லாத நாடுகளில் ரஃபேலின் மிகப்பெரிய இயக்குநர்களில் ஒன்றாக உறுதிப்படுத்தும்.

இந்த இரட்டை என்ஜின், பல்நோக்கு போர் விமானம் உலகின் தலைசிறந்த விமானங்களில் ஒன்றாக கருதப்படுகிறது, இது வான்வெளி ஆதிக்கம் மற்றும் துல்லியமான தாக்குதல் பணிகளை நிறைவேற்றுவதற்கு பெயர்பெற்றது. இந்திய விமானப்படை கடந்த 2024 டிசம்பரில் கடைசி 'சி' வகை விமானத்தை பெற்றது. மேலும் ரூ.63,000 கோடி மதிப்புள்ள 26 கடற்படை வகைகளான 'எம்' விமானங்களை ஆர்டர் செய்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூரின் போது பயன்படுத்தப்பட்ட ரஃபேல்கள், ஸ்கால்ப் என்ற வான்-வழி குரூயிஸ் ஏவுகணையை ஏவியதாக நம்பப்படுகிறது. இது ஈராக் போர் மற்றும் லிபியாவில் உள்ளிட்ட பல்வேறு மோதல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரான்ஸ் மற்றும் இந்தியா, உற்பத்தியாளர்களான டசால்ட் ஏவியேஷன் மற்றும் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் இடையே நான்கு முக்கிய உற்பத்தி இடமாற்ற ஒப்பந்தங்களை அறிவித்தன. இது இந்திய இராணுவத்திற்கு ரஃபேல்களின் பாக்கியை விரைவுபடுத்தும். டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஐதராபாத்தில் பிரெஞ்சு போர் விமானத்தின் முக்கிய கட்டமைப்பு பிரிவுகளை தயாரிப்பதற்கான அதிநவீன உற்பத்தி வசதியை அமைக்கும்.

இதில் பின்புற உடற்பகுதியின் பக்கவாட்டு ஷெல்கள், முழு பின்புற பிரிவு, மைய உடற்பகுதி மற்றும் முன்புற பிரிவு ஆகியவை அடங்கும். முதல் உடற்பகுதி பிரிவுகள் 2028இல் உற்பத்தி வரிசையில் இருந்து வெளியேறும். ஒரு மாதத்திற்கு இரண்டு முழு உடற்பகுதிகளை வழங்குவதே இலக்கு, ரஃபேல் போர் விமானத்தின் இறுதி அசெம்பிளி பிரான்ஸின் போர்டோ அருகிலுள்ள மெரிக்னாக்கில் உள்ள டசால்ட் உற்பத்தி ஆலையில் நடைபெறும்.

# பிரான்ஸ் அதிபர் மேக்ரான் 3 நாள் பயணமாக அடுத்த வாரம் இந்தியா வருகிறார்

**புதுடெல்லி, பிப்.12:**

பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் 3 நாள் சுற்றுப் பயணமாக அடுத்த வாரம் இந்தியா வருகிறார். இந்தியாவில் நடைபெறும் ஏ.ஐ. உச்சி மாநாடு (AI Impact Summit) மாநாட்டில் கலந்து கொள்கிறார். வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய துறையில் இருநாட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.



பிப்ரவரி 17-ந்தேதி மும்பையில் இருந்து தனது சுற்றுப் பயணத்தை தொடங்குகிறார். பிரதமர் மோடியுடன் சேர்ந்து இந்தியா- பிரான்ஸ் Year of Innovation-ஐ தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து மும்பையில் இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் டெல்லியில் பிப்ரவரி 19-ந்தேதி நடைபெறும் ஏ.ஐ, உச்சிமாநாட்டில் கலந்து கொள்கிறார். கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றிருந்தார். அதனைத் தொடர்ந்து மேக்ரானின் சுற்றுப்பயணம் அமைய இருக்கிறது.

# திடீரென முடங்கிய யுபிஐ சேவை: பயனர்கள் அவதி!

**புதுடெல்லி, பிப்.12:**




யுபிஐ மின்னணு பரிவர்த்தனை சேவை இன்று(பிப். 10) மாலை திடீரென முடங்கியதால் இன்னொருவருக்கு பணம் அனுப்புதல், ஃக்யூர்.ஆர். கோடு ஸ்கேன் செய்தல் உள்பட பல யுபிஐ சேவைகள் மேற்கொள்ள இயலவில்லை. கூகுள்பே, போன்பே, பேடிஎம் உள்பட பல தளங்களிலும் இந்தப் பிரச்னை இன்று மாலை 7 மணியளவில் எதிரொலித்தது.

இதைத்தொடர்ந்து பெரும்பாலான சமூக ஊடக தளங்களிலும் இது குறித்து பயனர்கள் புகார் தெரிவித்து பதிவுகள் பல வெளியிட்டதைப் பார்க்க முடிந்தது.

தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய பெருநகரங்களில் யுபிஐ சேவை கடுமையாகவே பாதிக்கப்பட்டதாக பயனர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் நேரடியாக பணம் செலுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டதாக பயனர்கள் தெரிவித்தனர்.

# மோடி இருக்கையை முற்றுகையிட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் - வீடியோ வெளியிட்ட மத்திய அமைச்சர்

**புதுடெல்லி, பிப்.12:**



லோக்சபாவில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பிரதமர் மோடியை "நேரடியாகத் தாக்க" திட்டமிட்டிருந்ததாக தனக்கு உறுதியான தகவல் கிடைத்ததாகச் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தெரிவித்தார்.

பிரதமரின் பாதுகாப்பு கருதியே அவரது பதிலுரை ரத்து செய்யப்பட்டதாகவும், எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்களை கேடயமாகப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்ததாக ஓம் பிர்லா தெரிவித்தார்.


பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகள் சதி செய்துள்ளதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பிரதமர் மோடியின் இருக்கைக்கு அருகே காங்கிரஸ் எம்.பி.க்கள் முற்றுகையிடும் வீடியோவை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "காங்கிரஸ் கட்சி தங்கள் எம்.பி.க்களின் மிகவும் இழிவான நடத்தையைப் பற்றி பெருமை கொள்கிறது. நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும் புனிதத்தையும் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

# 'நானும் நிர்பயாபோல இறந்திருந்தால் அனைவரும் நம்பியிருப்பார்கள்' - பாதிக்கப்பட்ட உன்னாவ் பெண் வேதனை

**புதுடெல்லி, பிப்.12:**



உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை காவல் மரணமடைந்த வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைக்கக்கோரி குற்றவாளி குல்தீப் சிங் செங்கார் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

செங்காரின் மேல்முறையீட்டு மனுவை முன்னுரிமை அடிப்படையில் விசாரித்து, மூன்று மாதங்களுக்குள் இறுதி தீர்ப்பு வழங்குமாறு டெல்லி உயர் நீதிமன்றத்திற்கும் உத்தரவிட்டுள்ளது. முன்னதாக, பாலியல் வன்கொடுமை வழக்கில் அவருக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைத்து பிணை வழங்கிய உயர் நீதிமன்ற உத்தரவுக்கும் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் இந்த முடிவால் தான் நிம்மதி அடைந்துள்ளதாகவும், எட்டு ஆண்டுகளாக நீதி கிடைக்கப் போராடி வருவதாகவும் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பு தொடர்பாக பேசிய அவர்,

"இன்று நான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றேன். நீதிபதி தீர்ப்பளித்தபோது நான் நீதிமன்றத்தில் இருந்தேன். இந்தத் தீர்ப்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். விசாரணையை 3 மாதங்களுக்குள் விரைவில் முடிக்க நீதிபதி உத்தரவிட்டதில் நான் திருப்தி அடைகிறேன். என் தந்தை திரும்பி வரப்போவதில்லை. குல்தீப் செங்காரின் சகோதரர்கள் அதுல் சிங் செங்கார் மற்றும் ஜெய்தீப் சிங் செங்கார் ஆகியோர் என் தந்தையைக் கொன்றனர்.

அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக சிறையில் இருந்து வெளியே வந்துள்ளனர். சம்பந்தப்பட்ட அனைத்து காவல்துறை அதிகாரிகளும் வெளியே உள்ளனர். குல்தீப் சிங் செங்காரைப் பொறுத்தவரை, அவர் எனக்கு எதிராக ஒரு கொடூரமான செயலைச் செய்துள்ளார். அவர் என்னை பாலியல் வன்கொடுமை செய்தார். நான் அதை எப்படி நிரூபிக்க முடியும்? நான் உயிருடன் இருக்கிறேன் என்பதற்காக அதை செய்யவேண்டுமா?

நானும் நிர்பயா மாதிரி இறந்திருந்தால், நான் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டேன் என்று எல்லோரும் நம்பியிருப்பார்கள். நான் உயிருடன் இருக்கிறேன். எனக்கு என்ன நடந்தது என்பதை நிரூபிக்க பல வருடங்கள் ஆனது. நான் 8 வருடங்களாக போராடி வருகிறேன். இப்போதும் கூட, நான் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டேன் என்பதை நிரூபிக்க வேண்டும்.

அவரது மகள் இது ஒரு சாதாரண விபத்து என்று கூறினார். விபத்து சாதாரணமானதா என்று எனக்குத் தெரியவில்லை. நான் வென்டிலேட்டரில் இருந்தேன். என் தந்தைக்கு உச்ச நீதிமன்றம் நீதி வழங்க வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்துள்ளேன். என் தந்தையின் ஆன்மா சாந்தியடையவும், அவருக்கு நீதி கிடைக்கவும் குல்தீப் செங்காரை தூக்கிலிட வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

# மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை தீயில் கருகி உயிரிழந்த சோகம்!

**கான்பூர், பிப்.12:** உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் தனியார் மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை ஒன்று தீயில் கருகி உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கான்பூரில் உள்ள பக்கர்கஞ்சில் வசிக்கும் அருண் நிஷாத் மற்றும் அவரது மனைவி பிட்டு ஆகியோருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்த குழந்தையின் உடல் வெப்பநிலையைச் சரியாகப் பராமரிக்க உதவும் கருவியில் குழந்தை வைக்கப்பட்டது. அப்போது மின் கசிவு ஏற்பட்டு தீ பிடித்ததில், அதிலிருந்த குழந்தை தீ காயம் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறது.

இந்தசம்பவத்தைப்பலமணி நேரம் கழித்தே பெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளது மருத்துவமனை நிர்வாகம். இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள் மருத்துவமனைக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து இந்த சம்பவத்தை குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட குழு அமைத்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# சொகுசு கார் விபத்து : தொழிலதிபர் மகன் காரை ஓட்டவில்லை! சரணடைகிறார் ஓட்டுநர்?



**கான்பூர், பிப்.12:** உத்தரப் பிரதேசத்தில் அதிவேகமாகச் சென்ற சொகுசு கார் மோதி 6 பேர் படுகாயமடைந்த விவகாரத்தில் காரை ஓட்டிச்சென்றது தொழிலதிபரின் மகன் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொகுசுக் காரை ஓட்டுநர் மோகன் ஓட்டிச்சென்றதாகவும், விரைவில் அவர் சரணடைவார் என்றும் காவல் துறையிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரிலுள்ள குவால்டோலி பகுதியில் பிரபல தொழிலதிபரான கே.கே. மிஸ்ராவின் மகன் அதிவேகமாக ஓட்டிய சொகுசுக் கார் கட்டுப்பாட்டை இழந்து பாதசாரிகள் மீது மோதியதில் 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

புகையிலை தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வரும் கே.கே.மிஸ்ராவின் மகன் ஷிவம் மிஸ்ரா, கான்பூரில் ஞாயிற்றுக்கிழமை பகல் 3.15 மணியளவில் லம்போர்கினி காரில் அதிவேகமாகச் சென்று விபத்து நேர்ந்துள்ளது.

அப்போதுகட்டுப்பாட்டை இழந்த கார் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனத்தின் மீது முதலில் மோதி, பின்னர் சாலையோரம் இருந்த பாதசாரிகள் மீது மோதியது. இந்த விபத்தில் 6 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்தவுடன் ஷிவம் மிஸ்ரா தப்ப முயற்சித்ததாகவும், காரின் கண்ணாடியை உடைத்த மக்கள் அவரை தாக்க முயற்சித்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

காவல் துறையினர் பறிமுதல் செய்த சிசிடிவி காட்சிகள் மற்றும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூறிய தகவல்களின் அடிப்படையில் தொழிலதிபரின் மகன் ஷிவம் மிஸ்ரா காரை ஓட்டிச் சென்றது தெரியவந்துள்ளது.

எனினும், தொழிலதிபரின் குடும்பத்தினர் இதனை மறுத்துள்ளனர். விபத்து நேர்ந்தபோது புதிதாக சேர்ந்த ஓட்டுநர் துரை என்பவர் காரை ஓட்டிச்சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

விபத்தைஏற்படுத்தியதாகக் கூறப்படும் ஓட்டுநர் துரை, இதுபோன்ற பல்வேறு தொழிபதிபர்கள் மற்றும் பிரபலங்களின் சொகுசுக் கார் விபத்துகளில் தொடர்புடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது" - யோகி ஆதித்யநாத் உறுதி



**பாராபங்கி, பிப்.12:** "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது. அதைப் பற்றி கனவு காண்பவர்கள் நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் எச்சரித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பாராபங்கியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் யோகி ஆதித்யநாத், "பாபர் மசூதியை கட்ட கனவு காண்பவர்களுக்கு, அந்த தீர்ப்பு நாள் (judgement day) ஒருபோதும் வராது என்று நான் அவர்களிடம் கூற விரும்புகிறேன். எனவே அந்தத் தீர்ப்பு நாளுக்காக வாழாதீர்கள்.

இந்தியாவில் உள்ள விதிகளின்படி வாழ கற்றுக் கொள்ளுங்கள். நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படியுங்கள். யாராவது விதிகளை மீறினால், அந்தப் பாதை அவர்களை நேராக நரகத்திற்கு இட்டுச் செல்லும். சட்டங்களை மீறி சொர்க்கம் செல்வதாக யாராவது கனவு கண்டால், அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது" என்றார்.

மேலும், "சில சந்தர்ப்பவாதிகள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது ராமரை நினைவில் கொள்கிறார்கள், பின்னர் அவரை மறந்துவிடுகிறார்கள். எனவே, ராமரும் அவர்களை மறந்துவிட்டார். அவர்களால் இப்போது வெற்றி பெற முடியாது. ஒருபோதும் முன்னேறவும் முடியாது" என்று அவர் கூறினார்.

# மேற்கு வங்கத்தில் ஒரே மாவட்டத்தில் 90 எச்ஐவி பாதிப்புகள் உறுதி!

**கிழக்கு பர்தமான், பிப்.12:** மேற்கு வங்க மாநிலத்தின் கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு பர்மான் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வசித்து வரும் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்புகள் ஏற்பட்டு அங்கு பெரும் சுகாதார அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல மருத்துவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மூத்த கார்பரேட் அதிகாரிகள் ஆகியோர் எச்ஐவியால் பாதிக்கப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர்கள் பணியாற்றும் இடங்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் 50 எச்ஐவி பாதிப்புகள் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது 90 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், பாதுகாப்பற்ற முறையில் உறவு கொண்ட தன்பாலினச் சேர்கையாளர்களிடம் இந்தப் பாதிப்புகள் அதிகம் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், எச்ஐவி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த நோய் பரவிய வழிகள் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் சமூக ஊடகங்களின் வழியாக இணைந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், எச்ஐவி பாதிப்புகள் குறித்து கிழக்கு பர்தமான் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு வருவதாக, தலைமை சுகாதார மருத்துவ அதிகாரி ஜெயராம் ஹெம்பிரோம் தெரிவித்துள்ளார்.

# உத்தவ் தாக்கரே கட்சி ஆதரவுடன் மேயர் பதவியை பிடித்த பாஜக: குதிரை பேரம் என காங்கிரஸ் குற்றச்சாட்டு



**மகாராஷ்டிரா, பிப்.12:**

மகாராஷ்டிரா மாநிலத்தில் மாநகராட்சி தேர்தல் நடைபெற்றது. கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் மேயர் தேர்தல் நடைபெற்று வருகிறது.

சந்த்ரபூர் மாநகராட்சி மேயர் தேர்தலில் பாஜக-வுக்கு ஆதரவாக உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா கட்சி கவுன்சிலர்கள் வாக்களித்ததால், பாஜக மேயர் வேட்பாளர் வெற்றி பெற்றார். உத்தவ் தாக்கரே கட்சி கவுன்சிலர்கள் மாற்றி வாக்களித்ததால் குதிரை பேரம் நடைபெற்றதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

சந்த்ரபூர் மேயர் தேர்தலில் பாஜக 32 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. காங்கிரஸ் 31 இடங்களில் வாக்குகள் பெற்று தோல்வியை சந்தித்தது. சிவ சேனா (UBT) 6 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. இது காங்கிரஸ் கூட்டணியில் இடம் பிடித்திருந்தது. ஆனால் தேர்தலில் சிவ சேனா (UBT) கவுன்சிலர்கள் பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர்.

63 இடங்களை கொண்ட தேர்தலில் காங்கிரஸ் கட்சி 27 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. பாஜக 23 இடங்களை பிடித்திருந்தது. சிவ சேனா (UBT) 6 இடங்களையும், பாரதிய ஷேட்கரி கம்கார் பாக்ஷ் (ஜனவிகாஸ் சேனா) 3 இடங்களையும், விபிஏ 2 இடங்களையும், ஏஐஎம்ஐஎம், பிஎஸ்பி, சிவ சேனா ஆகியவை தலா ஒரு இடங்களையும் பெற்றிருந்தது. சுயேட்சை வேட்பாளர்கள் இரண்டு இடத்தில் வெற்றி பெற்றிருந்தன.

விபிஏ கவுன்சிலர்கள் தேர்தலை புறக்கணித்துள்ளனர். விபிஏ கவுன்சிலர் இருவர் காங்கிரஸ்க்கு வாக்களித்திருந்தால் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றிருப்பார். காங்கிரஸ் கட்சியுடன் விபிஏ கூட்டணி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் குதிரை பேரம் நடைபெற்றது என காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

# வங்கதேசத்தில் மேலும் ஒரு வர்த்தகர் கொடூர கொலை

## இந்துக்களின் பாதுகாப்புக்கு சர்வதேச அமைப்புகள் வலியுறுத்தல்

**நியூயார்க், பிப்.12:**

வங்கதேசத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. பிரதமர் பதவியில் இருந்து ஷேக் ஹசீனா விலகிய பிறகு நடந்த வன்முறை சம்பவம் மற்றும் தாக்குதல்களில் இந்துக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், மைமென்சிங் மாவட்டத்தில் நேற்று முன் தினம் இந்து அரிசி வர்த்தகர் சுஷேன் சந்திர சர்க்கார் (62) கொடூரமான முறையில் மர்ம நபர்களால் கொல்லப்பட்டுள் ளார். இதுகுறித்து காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




இந்நிலையில் 'இந்துக்கள் மனித உரிமை' என்ற அமைப்பு ஐ.நா. மற்றும் பல்வேறு நாடுகளுக்கு கடிதம் அனுப்பி உள்ளது. அதில் 15 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மத அமைப்புகள், சமூக அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது: வங்கதேசத்தில் யூனுஸ் தலைமையிலான இடைக்கால நிர்வாகத்தின் கீழ், இந்துக்களுக்கு எதிராக தொடர்ந்து அடக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. திட்டமிட்டு இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்த விவகாரத்தில் ஐ.நா. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, வங்கதேச இந்துக்களைப் பாதுகாக்க வேண்டும். ஐ.நா. உட்பட உலக நாடுகள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி தீர்வுள்ள ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மைசூரு சாண்டல் சோப் விளம்பர தூதராக தமன்னா பாஜக, கன்னட அமைப்பினர் எதிர்ப்பு



**பெங்களூரு, பிப்.12:**


கர்நாடக அரசின் சோப்பு மற்றும் டிடர்ஜென்ட் நிறுவனத்தின் கீழ் மைசூரு சாண்டல் சோப்பு மீண்டும் புதுப்பொலிவுடன் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. 108 ஆண்டுகள் பழமையான இந்த சோப்பின் புதிய விளம்பர தூதராக நடிகை தமன்னா நியமிக்கப்பட்டார். இதற்காக அவருக்கு ரூ.6.2 கோடி ஊதியமாக வழங்கப்பட்டது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற அறிமுக விழாவில் கர்நாடக தொழில் துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல், நடிகை தமன்னா ஆகியோர் பங்கேற்றனர். அப்போது எம்.பி.பாட்டீல் பேசுகையில், "மைசூரு சாண்டல் சோப்பு விளம்பரத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டதற்காக நடிகை தமன்னாவுக்கு நன்றி. இவருக்கு உலகளவில் இருக்கும் பிரபலத்தால் வரும் 2030-ம் ஆண்டுக்குள் மைசூரு சாண்டல் சோப்பின் விற்பனையை ரூ.5 ஆயிரம் கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்றார்.

கர்நாடக மாநிலத்தை சேராத நடிகை தமன்னாவை விளம்பர தூதராக நியமித்ததற்கு பாஜக, மஜத ஆகிய எதிர்க்கட்சிகளும் கன்னட அமைப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கர்நாடக நடிகைகள் ரம்யா, ரஷ்மிகா, ருக்மணி வசந்த் உள்ளிட்டோர் இருக்கும்போது தமன்னாவை நியமித்தது ஏன் என கேள்வி எழுப்பி உள்ளனர்.

# மலேசிய இன்ஸ்டா பிரபலத்துக்கு ரூ.9.2 லட்சம் அபராதம்

**கோலாலம்பூர், பிப்.12:**



மலேசியாவைச் சேர்ந்த இன்ஸ்டா பிரபலம் டேங் சீ லுக். கடந்த 2025 ஆகஸ்ட் 3-ம் தேதி 'டுயின்' மற்றும் இன்ஸ்டா கிராம் பக்கங்களில் வீடியோ ஒன்றை அவர் வெளியிட்டார்.

அதில், மூன்று சிறுவர்கள் கே.எஃப்.சி உணவகத்தில் கோழி இறைச்சியை உண்டுவிட்டு, மீதமிருந்த எலும்புகளை வீணாக்க விரும்பாமல் அதனைச் சாதத்துடன் கலந்து ஒரு ஆதரவற்ற முதியவருக்கு வழங்குகின்றனர். "இன்று நாம் ஒரு நற்செயல் செய்யப் போகிறோம்" என்ற பின்னணி குரலுடன் அந்த வீடியோ தொடங்குகிறது.

இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி நெட்டிசன்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில், அந்த இன்ஸ்டா பிரபலம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.


இது தொடர்பான விசாரணையின்போது அரசுத் தரப்பு வழக்கறிஞர், "இது ஒரு தர்ம காரியம் அல்ல; பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் ஒரு மனிதனின் வறுமையை சுரண்டும் திட்டமிட்டச்செயல்" என்று வாதிட்டார். பாதிக்கப்பட்ட ஆதரவற்ற முதியவரும் இந்தச் செயலால் தான் மிகுந்த மனவேதனையையும், கோபமும் அடைந்ததாகத் தெரிவித்தார்.

தனது செயலுக்கு மன்னிப்புக் கோரிய டேங் சீ லுக், குறைந்தபட்ச அபராதம் விதிக்குமாறு கோரினார். இருப்பினும், இதுபோன்ற செயல்கள் இனி தொடராத வண்ணம் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியதுடன், அவருக்கு ரூ.9.2 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.

தீர்ப்பு வெளியான சில நிமிடங்களிலேயே அந்த பிரபலம் அபராதத் தொகையைச் செலுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பந்தப்பட்ட வீடியோவை நீக்கியுள்ள அந்த இளைஞர், "இந்தச் சம்பவத்துக்காக நான் மனதார வருந்துகிறேன். இனி என்னை முழுமையாக மாற்றிக்கொண்டு பொதுமக்களுக்கு முன் தோன்றுவேன்" என்று தனது இன்ஸ்டா கிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# முசாபர் நகர் கலவர வழக்கில் 22 பேர் விடுதலை போதிய ஆதாரம் இல்லை என நீதிமன்றம் விடுவித்தது

**புதுடெல்லி, பிப்.12:**



முசாபர் நகர் கலவரம் தொடர்பான வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 22 பேரையும் ஆதாரம் இல்லை எனக் கூறி நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் முசாபர்நகரில் கடந்த 2013ல் நடந்த கலவரத்தில் 60-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சுமார் 40,000 பேர் அந்நகரை விட்டு இடம்பெயர்ந்தனர். இந்த சம்பவத்தில் 2013, செப்டம்பர் 8ம் தேதி முகமது பூர் ரைசிங் கிராமத்திலும் வன்முறை ஏற்பட்டது.

இது தொடர்பான கொலை, கொள்ளை மற்றும் தீவைப்பு வழக்கில் 26 பேர் மீது சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியது. முசாபர் நகரின் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. வழக்கு விசாரணை காலத்தில் 4 பேர் இறந்ததால் 22 பேர் வழக்கை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் இந்த வழக்கில் குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி எஸ்ஐடி நிரூபிக்க தவறிவிட்டதாக கூறி 22 பேரையும் நீதிபதி கனிஷ்க் குமார் விடுதலை செய்தார்.

இதுகுறித்து அரசு வழக்கறிஞர் நரேந்திர சர்மா கூறுகையில், "ஹனீஃப் என்பவர் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்கை எஸ்ஐடி பதிவு செய்து விசாரணை செய்தது. அதில் கிராமத்தில் உள்ள வீடுகளை கலவரக்காரர்கள் நூற்றுக்கணக்கானோர் தாக்கியதாக கூறப்பட்டது. அவர்களின் சொத்துகளை கொள்ளையடித்து, வீடுகளுக்கும் தீ வைத்ததாகப் புகாரில் கூறப்பட்டிருந்தது.

தாக்குதலில் புகார்தாரரின் தந்தை ரஹீஷுதீன் கொல்லப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. கலவரக்காரர்கள் ஒரு மசூதியை சேதப்படுத்தியதாகவும், ஒரு காவலருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. எனினும் சாட்சியங்கள் குறைபாடு காரணமாக அனைவரும் விடுவிக்கப்பட்டனர்" என்றார்.

விடுவிக்கப்பட்ட அனைவரும் முகமது பூர் ரைசிங் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனில், சுபாஷ், சஞ்சீவ், கரண், ஷேர் சிங், ரிஷிபால், ஹன் சர்பால், பிரமோத், விக்கி, பாதல், மதன், ஜெய நாராயண், பிரிஜ்வீர், வினோத், கலா, பர்வீன், ஜக்பால், பிரேம்பால், பப்பு, நீது, பூரா, ஹரேந்தர் சிங் ஆகியோர் ஆவர்.

# மணிப்பூரில் 50 வீடுகள் எரிப்பு இணைய சேவை துண்டிப்பு



**இம்பால், பிப்.12:**

மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் உள்ள லிட்டன் கிராமத்தில் தங்குல் நாகா மற்றும் குகி சமூகத்தினரிடையே கடந்த சனிக்கிழமை மீண்டும் கடும் மோதல் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதையடுத்து மாவட்ட ஆட்சியர் ஆசிஷ் தாஸ் ஞாயிற்றுக் கிழமை முதல் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார். மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உக்ருல் மாவட்டத்தில் 5 நாட்களுக்கு இணைய சேவையை ரத்து செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில்தான் ஆட்சியரின் உத்தரவையும் மீறி திங்கள்கிழமை நள்ளிரவு மர்ம நபர்கள் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குத் தீ வைக்கத் தொடங்கினர். செவ்வாய்க் கிழமை காலை நிலவரப்படி சுமார் 50 வீடுகள் தீயில் எரிந்து சாம்பலானதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், இரு தரப்பினரிடையே துப்பாக்கிச்சூடும் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

"லிட்டன் சம்பவத்தைத் தொடர்ந்து கொன்ஷாகுல் கிராம மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டதாக சமூக வலைதளங்களில் பரவும் செய்திகளில் உண்மையில்லை. இதுபோன்ற வதந்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று காவல் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அமெரிக்காவுடனான ஒப்பந்தம்: அகிலேஷ் யாதவ் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, பிப்.12:**



சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் மக்களவையில் நேற்று பேசியதாவது: "இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தால் அமெரிக்கா மட்டுமே பலன் அடையும். குறிப்பாக அந்த நாட்டில் இருந்து வேளாண் விளை பொருட்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட உள்ளது. இதனால் இந்திய விவசாயிகளுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படும்.

அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. சுகாதாரம் உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளுக்கு பட்ஜெட்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. விவசாயிகளின் வருவாய் இரு மடங்காக உயரும் என்று பாஜக அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால் விவசாயிகளின் நிலைமை மோசமாக இருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# கவுரவ் கோகோய் மீது அசாம் முதல்வர் அவதூறு வழக்கு

**குவாஹாட்டி, பிப்.12:**



அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வாவின் குடும்பத்தினர் மாநிலம் முழுவதும் சுமார் 12,000 பிகா (சுமார் 3,960 ஏக்கர்) நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாக மாநில காங்கிரஸ் தலைவரும் மக்களவை எம்.பி.யுமான கவுரவ் கோகோய் அண்மையில் குற்றம் சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை ஹிமந்த பிஸ்வா சர்மா மறுத்திருந்தார். இந்நிலையில் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி தனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்ததாக கவுரவ் கோகோய், ஜிதேந்திர சிங் மற்றும் பூபேஷ் பாகேல் மீது ஹிமந்த பிஸ்வா சர்மா அவதூறு வழக்கு (சிவில் மற்றும் கிரிமினல்) தொடர்ந்துள்ளார்.

அவர் தனது மனுவில், "காங்கிரஸ் தலைவர்களின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. அரசியல் உள்நோக்கம் கொண்டவை. மக்களை தவறாக வழி நடத்தும் நோக்கம் கொண்டவை" என கூறியுள்ளார். மேலும் அவர் இந்த வழக்கில் ரூ.500 கோடி நஷ்ட ஈடு கோரியுள்ளார்.

# அதுதான் பிரதமரின் துணிச்சல்! விடியோ வெளியிட்ட அமைச்சருக்கு நன்றி

**புதுடெல்லி, பிப்.12:**



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்துவரும் நிலையில் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. அப்போது சீன ஆக்கிரமிப்பு குறித்து பேசத் தொடங்கிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்கவில்லை.

இதற்கு எதிராக காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த நிலையில் கடந்த பிப். 4 அன்று பெண் எம்.பி.க்கள், பிரதமரின் இருக்கைக்கு அருகில் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதுதொடர்பாக விடியோ ஒன்றை அமைச்சர் கிரண் ரிஜுஜு வெளியிட்டுள்ளார்.

ஆனால், பிரதமரை தாக்க எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்கள் முயன்றதாகவும் அதனால் பிரதமரை அவைக்கு வர வேண்டாம் என்று கூறியதாகவும், அவைத் தலைவர் ஓம் பிர்லா கூறியதுதான் இப்போது சர்ச்சையாகியுள்ளது.

இந்நிலையில் அமைச்சர் கிரண் ரிஜுஜு வெளியிட்டுள்ள விடியோ குறித்து காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கூறுகையில்,

"எங்களுக்கு எதிராக நிறைய அவதூறு பிரசாரம் இருந்ததால், இந்த விடியோவை வெளியிட்டதற்காக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜுஜிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தில் ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்திருக்கலாம் என்று அவைத் தலைவர் ஓம் பிர்லா கூறினார். ஆனால் அமைச்சர் கிரண் ரிஜுஜு வெளியிட்டுள்ள இந்த விடியோ மூலமாக அவைத் தலைவரின் கூற்று பொய்யாகிறது.

காங்கிரஸ் பெண் எம்.பி.க்கள் எங்கள் கைகளில் ஒரு பதாகையைப்வைத்துக்கொண்டு முதல் வரிசை இருக்கைகளுக்குச் சென்றோம். நாங்கள் அமைதியாக அங்கு நின்று, பிரதமர் உரையாற்றுவதற்காகக் காத்திருந்தோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு பேச அனுமதி மறுக்கப்பட்டது.


பிரதமரைத் தாக்க முயற்சித்ததாக பாஜகவினர் கூறி வருகின்றனர்.

இந்த விடியோ அந்த பொய்யை உடைக்கிறது. அவையின் மரியாதை மற்றும் கண்ணியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நாடாளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்த அப்போதைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மீது பாஜக எம்.பி.க்கள், காகிதங்களைக் கிழித்து எறிந்து வீசிய விடியோவை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது. அப்படி நடந்தபோதிலும் டாக்டர் மன்மோகன் சிங் அவையில் தொடர்ந்து பேசினார். அதுதான் பிரதமரின் துணிச்சல்" என்று கூறியுள்ளார்.

# 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றும் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தேர்தல் ஆணையம் உத்தரவு

**புதுடெல்லி, பிப்.12:**




தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றும் அதிகாரிகளை உடனே இடமாற்றம் செய்யுமாறு தலைமைச் செயலர்களுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழகம், அசாம், மேற்கு வங்கம், கேரளா மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான பணிகளை தேர்தல் ஆணையர்கள் செய்து வருகின்றனர். தேர்தல் பணிகளில்வெளிப்படைத்தன்மை மற்றும் நடுநிலையை உறுதிப்படுத்தும் நோக்கில் தலைமைத் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில் முக்கிய அரசு அதிகாரிகளை இடமாற்றம் செய்ய தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நம்பிக்கையில்லா

தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, சொந்த மாவட்டங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றி வரும் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் விதிமுறையாகும். இதனைப் பின்பற்றி, தற்போது அந்தந்த மாநில அரசுகளின் தலைமைச் செயலர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு இந்த இடமாற்ற உத்தரவு குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சியர்கள், கண்காணிப்பாளர்கள்: குறிப்பாக, தேர்தல் பணிகளுடன் நேரடி தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், வருவாய்த் துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, இந்த இடமாற்றப் பட்டியலைத் தயார் செய்து உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வாக்காளர் நம்பிக்கை: எந்தவொரு அதிகாரியும் அரசியல் ரீதியாக ஒரு சார்பாகச் செயல்படுவதைத் தவிர்க்கவும், வாக்காளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பணியிட மாற்றம் செய்யப்படும் அதிகாரிகளுக்குப் பதிலாக புதிய அதிகாரிகளை நியமிக்கும் போது அவர்களின் கடந்த கால தேர்தல் பணி அனுபவங்களையும் கருத்தில் கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

# துபாயில் இந்தியப் பெண் தவறுதலாக குப்பையில் போட்ட ரூ.12 லட்சம் தங்கத்தை மீட்டுக் கொடுத்த போலீஸார்



**துபாய், பிப்.12:** இந்தியாவைச் சேர்ந்த காமினி கண்ணன் 23 ஆண்டுகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வந்தார். கடந்த 2021-ம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

ஒரு திருமணத்தில் கலந்துகொள்வதற்காக மீண்டும் துபாய் சென்றிருந்தார். தனது மகன் அபிமன்யு வீட்டில் தங்கியிருந்தார். அப்போது தங்க நாணயங்கள் கொண்ட பை பழையதாகிவிட்டதால், அதை வேறு ஒரு பையில் மாற்றி டைனிங் டேபிளில் வைத்தார். அந்தப் பையில் தலா 8 கிராம் எடையுள்ள நான்கு 22 காரட் தங்க நாணயங்கள் மற்றும் ஒரு 50 கிராம் 24 காரட் தங்கக் கட்டி ஆகியவை இருந்தன. மறுநாள் காலை (பிப்ரவரி 1) காமினி இந்தியா திரும்ப வேண்டிய நிலையில், தங்கம் வைத்திருந்த பை காணாவில்லை. விசாரித்த போது அவரது மகன் தவறுதலாக அந்தப் பையைக் குப்பையில் வீசியது நினைவுக்கு வந்தது. குப்பையில் போனால் போனதுதான் என்று கருதி, அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கூட அளிக்கவில்லை.

ஆனால், பிப்ரவரி 4ம் தேதி அபிமன்யு வசிக்கும் கட்டிடத்தின் காவலாளி மூலம் அவரை போலீஸார் தொடர்பு கொண்டனர். குப்பை சேகரிக்கும் தொழிலாளி ஒருவர் தங்கத்தைக் கண்டெடுத்து, அதை விற்க முயன்றுள்ளார். அங்கு அதிகாரிகள் விசாரித்த போது, அது குப்பையில் கிடைத்தது தெரிய வந்துள்ளது. அன்று மாலை அபிமன்யு காவல் நிலையத்துக்குச் சென்று, புகைப்படங்கள் மற்றும் வாங்கியதற்கான ரசீதுகளைச் சமர்ப்பித்தார்.

சில மணி நேர நடைமுறைகளுக்குப் பிறகு தங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. "துபாயில் குப்பைகளைக் கண்காணிக்க தனி அமைப்பு உள்ளது. எந்தப் பை எந்த இடத்தில் இருந்து வருகிறது என்பதை அவர்களால் துல்லியமாகக் கண்டறிய முடியும்" என்று அபிமன்யு வியப்புடன் தெரிவித்தார்.

# கழிவுநீர் கால்வாயில் விழுந்து இளைஞர் உயிரிழப்பு.. 4 நாட்களில் 2வது சம்பவம்



**புதுடில்லி, பிப்.12:** டெல்லி ரோகிணி செக்டர் 32 பகுதியில் உள்ள மகாசக்தி காளி கோயில் அருகே, திறந்த நிலையில் இருந்த கழிவுநீர் கால்வாயில் விழுந்து 32 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் நேற்று இரவு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பீகார் மாநிலம் சமஸ்திபூரைச் சேர்ந்த பிரிஜு குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் இருந்த தேஜ்பால் யாதவ் என்பவர் கூறுகையில், "இந்த நபர் நீண்ட நேரமாக பள்ளத்தில் விழுந்து கிடந்துள்ளார். அவரது நண்பர்கள் மாலை 4 மணிக்கே போலீசாருக்குத் தகவல் கொடுத்தனர். ஆனால் நான் 112 என்ற எண்ணிற்கு அழைத்து புகார் அளித்த பின்னரே மீட்புப் பணிகள் தொடங்கின" என்று தெரிவித்துள்ளார். முன்னதாக கடந்த பிப்ரவரி 6 அன்று மேற்கு டெல்லியின் ஜனக்புரி பகுதியில் டெல்லி குடிநீர் வாரியம் தோண்டியிருந்த பள்ளத்தில் விழுந்து, தனியார் வங்கியில் பணிபுரிந்த 25 வயது இளைஞர் பலியானார்.

டெல்லி மாநகராட்சி மற்றும் குடிநீர் வாரியத்தின் இத்தகைய அலட்சியப்போக்கு குறித்து பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.




# பஞ்சாபில் பல்வேறு பள்ளிகளுக்கு போலீசார் தீவிர சோதனை

**பஞ்சாப், பிப்.12:** பஞ்சாப் மாநிலம் மொகாலியில் பல பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்த உடன் உடனடியாக பள்ளிகளை மூடிய நிர்வாகத்தினர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

பள்ளிகளுக்கு விடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டலை உறுதிபடுத்திய டி.எஸ்.பி. ஹர்சிம்ரன் சிங் பால், பள்ளிகளை மூடி தேடுதல் நடவடிக்கை நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மொகாலியில் யத்விந்திரா பப்ளிக் பள்ளி, மானவ் மங்கள் பப்ளிக் பள்ளி, ரியான் இன்டர்நேஷனல் பள்ளி, பாரகன் பள்ளி, ஷெம்ராக் பள்ளி மற்றும் பல பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. மொகாலி போலீசார், வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் பல்வேறு பள்ளிகளில் சோதனை நடத்தி வருகின்றனர்.

# ரஷ்யாவில்தான் அதிக எண்ணிக்கையில் இந்திய மாணவர் மீது தாக்குதல்: வெளியுறவு அமைச்சகம் தகவல்

**ஹைதராபாத், பிப்.12:** ரஷ்யாவில் படிக்கும் இந்திய மாணவர்கள் 4 பேர் மீது சமீபத்தில் தாக்குதல் நடந்தது.

இந்நிலையில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சர்வதேச அளவில் உள்ள 196 நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் இந்திய மாணவர்கள் படிக்கின்றனர்.

அந்த நாடுகளில் சித்ரவதை, இன ரீதியிலான தாக்குதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக கடந்த 2025ம் ஆண்டு 350 புகார்களை இந்திய மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். அவற்றில் 200-க்கும் மேற்பட்ட புகார்கள் ரஷ்யாவில் தான் பதிவாகி உள்ளன.

இதில் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் தான் அதிகபட்சமாக இந்திய மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யாவில் இந்திய மாணவர்களுக்கு எதிராக தாக்குதல் தொடர்பாக கடந்த 2023ம் ஆண்டு 68, 2024ம் ஆண்டு 78, 2025ம் ஆண்டு 201 புகார்கள் பதிவாகி உள்ளன. எனினும், கல்லூரியை விட்டு நீக்கிவிடுவார்கள் என்ற அச்சத்தில் இந்திய மாணவர்கள் பலர் புகார் தெரிவிப்பதில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.மொகாலி போலீசார், வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் பல்வேறு பள்ளிகளில் சோதனை நடத்தி வருகின்றனர்.

# செல்போன் ஸ்கிரீன் கார்டில் சிக்கி தவித்த குட்டி பாம்பு

## பசையில் இருந்து போராடி மீட்கப்பட்டு காட்டுக்குள் விடப்பட்டது



**திருவனந்தபுரம், பிப்.12:** கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் தளிப்பரம்பா மார்க்கெட் சாலையில் ஒரு செல்போன் கடை செயல்பட்டு வருகிறது. அந்த கடையில் செல்போன்களுக்கு தேவையான ஸ்கிரீன் கார்டு உள்ளிட்ட பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தநிலையில் அந்த கடைக்கு வாடிக்கையாளர் ஒருவர், தனது செல்போனுக்கு ஸ்கிரீன் கார்டு ஒட்டுவதற்கு சென்றார். அப்போது கடை ஊழியர் ஸ்கிரீன் கார்டுகள் வைக்கப்பட்டிருந்த மேசை டிராயரை திறந்தார். அப்போது உள்ளே ஒரு குட்டி விரியன் பாம்பு உயிருடன் கிடந்தது.

அந்த பாம்பு அங்கிருந்த ஸ்கிரீன் கார்டில் இருந்த பசையில் சிக்கி அசைய முடியாமல் கிடந்தது. இதனை பார்த்த கடை ஊழியர்கள் மற்றும் கடைக்கு வந்திருந்த வாடிக்கையாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். அது குறித்து தளிப்பரம்பாவில் உள்ள வனத்துறை அலுவலகத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அதன்பேரில் பாம்பு இருந்த செல்பேன் கடைக்கு வனத்துறையினர் வந்தனர். அவர்களுடன் பாம்பு பிடிப்பவர் ஒருவரும் வந்தார். அவர் செல்போன் ஸ்கிரீன் கார்டில் சிக்கியிருந்த குட்டி பாம்பை காயமடைந்து விடாமல் மீட்க நடவடிக்கை எடுத்தார்.

இதற்காக தேங்காய் எண்ணெயை பயன்படுத்தினார். ஆனால் அது பலனளிக்கவில்லை. செல்போன் ஸ்கிரீன் கார்டில் இருந்த பசையில் பாம்பின் உடல் நன்கு ஒட்டியிருந்ததால் அதிலிருந்து பாம்பை பிரித்து எடுக்க முடியவில்லை. இதையடுத்து அந்த பாம்பு, அது சிக்கியிருந்த செல்போன் ஸ்கிரீன் கார்டுடன் தளிப்பரம்பா வனத்துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்குபல்வேறுமுயற்சிகளுக்கு பிறகு செல்போன் ஸ்கிரீன் கார்டில் இருந்து குட்டி பாம்பு மீட்கப்பட்டது. செல்போன் ஸ்கிரீன் கார்டில் இருந்து மிகவும் கவனமாக பிரிக்கப்பட்டதால், பாம்புக்கு உடலில் எந்த காயமும் ஏற்படவில்லை. இதையடுத்து அந்த பாம்பை வனத்துறையினர், காட்டுப்பகுதிக்கு கொண்டு சென்று விட்டனர்.

செல்போன் ஸ்கிரீன் கார்டில் இருந்த பசையில் சிக்கி உயிருக்கு போராடிய குட்டி பாம்பை காப்பாற்ற வனத்துறையினர் எடுத்த நடவடிக்கையை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

# மென்பொருள் வல்லுனரை நெகிழ வைத்த ஆட்டோ டிரைவரின் செயல்




**புதுடில்லி, பிப்.12:** இன்றைய அவசரமான காலத்தில் எதிரில் வருபவர்களை கூட கவனிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனால் பல நேரங்களில் நம்முன்னே நடைபெறும் குற்றச்சம்பவங்களை கூட தட்டிக்கேட்க முடியாத நிலையில் உள்ளோம். இதற்கு உதாரணமாக சமீபத்தில் இரவு நேரத்தில் நடு ரோட்டில் கணவருக்கு உயிருக்கு போராடுவதை கண்டு உதவி கோரிய பெண்ணுக்கு யாரும் உரிய நேரத்தில் உதவாததால் கணவர் இறந்தது தொடர்பான வீடியோ வெளியானது. இந்த வீடியோவை பார்த்த பலரும் மனித நேயம் என்ன ஆனது? என வினா எழுப்பி வருகின்றனர். இதனிடையே சிலர் செய்யும் உதவிகள் தொடர்பான வீடியோக்களையும் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால் இங்கே ஒருவர், தாம் செய்த உதவி பெரிதாயினும் அதனை வெளிக்காடாமல், பாராட்டையும் எதிர்பாராமல் உள்ளது நெகிழச் செய்துள்ளது.

லிங்க்டுஇன் வலைத்தளத்தில் பெங்களூருவைச் சேர்ந்த மென்பொருள்பொறியாளரான உத்யா படேல் என்பவர் பகிர்ந்துள்ள பதிவில், ரேபிடோவில் ஆட்டோவை புக் செய்து பயணித்த போது ஆச்சரியப்பட்டேன். அதாவது அவர் பயணித்த ஆட்டோவில், எங்கள் வாடிக்கையாளருக்கு இலவசம் என்று கூறி குடிநீர், டிஷ்யூ பேப்பர், கை சுத்திகரிப்பான் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு 5 கி.மீ. வரை இலவசம் என்று கூறி நோட்டீஸ் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இருக்கைக்கு அருகில் செயற்கையான பூக்கள் வைக்கப்பட்டு இருந்தது. இதுகுறித்து எதுவும் கூறாத ஆட்டோ டிரைவர் பாராட்டையும் எதிர்பார்க்காமல் மனித நேயம் அவரது வழக்கத்தின் ஒரு பகுதியாக இருப்பது போல அவர் ஆட்டோவை ஓட்டிச் சென்றார் எனக்குறிப்பிட்டுள்ளார்.

உத்யா படேலின் பதிவை பார்த்த ரேபிடோ நிறுவனம் மற்றும் சமூக வலைத்தள பயனர்கள் அந்த ஆட்டோ டிரைவரின் செயலை பாராட்டி வருகின்றனர்.

# பிஹார் மருத்துவமனை அவலம்: சொந்த கட்சி அமைச்சரிடம் பேரவையில் கேள்வி கேட்ட பாஜக எம்எல்ஏ மைதிலி தாக்குர்



**பாட்னா, பிப்.12:** பிஹார் மாநிலம் தர்பங்கா மாவட்டம் அலிநகர் தொகுதியின் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் மைதிலி தாக்குர், தனது தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை மிகவும் சிதிலமடைந்துள்ளதாக சட்டப்பேரவையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சரும், பாஜகவின் மூத்த தலைவருமான மங்கல் பாண்டே, "மருத்துவமனைக் கட்டிடம் நல்ல நிலையில்தான் உள்ளது. சிறிய பழுது பார்ப்புப் பணிகள் மட்டுமே அதில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது" என்றார்.

அமைச்சரின் இந்தப் பதிலால் அதிருப்தியடைந்த மைதிலி தாக்குர், அடுக்கடுக்கான துணை கேள்விகளை எழுப்பினார். அப்போது அவர் கூறுகையில் "அமைச்சரின் பதில் எனக்கு முழுமையான திருப்தியை அளிக்கவில்லை.

நான் அந்த மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தேன். கட்டிடம் மிகவும் மோசமான நிலையிலும் இடியும் தருவாயிலும் உள்ளது. ஆனால், கட்டிடம் நன்றாக இருப்பதாக அமைச்சர் கூறியது வியப்பாக இருக்கிறது. எதார்த்த நிலைக்கு மாறாக அமைச்சரின் பதில் உள்ளது" என்றார்.

மேலும், அந்த மருத்துவமனையில் முன்பு இரண்டு எம்பிபிஎஸ் மருத்துவர்கள் பணியாற்றி வந்த நிலையில், தற்போது ஆயுஷ் மருத்துவர் மட்டுமே பணியில் உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் கவனத்தைப் பெற்ற இளம் தலைவரான மைதிலி தாக்குர், தனது சிறுவயது முதலே மங்கல் பாண்டேவை தமக்குத் தெரியும் என்று குறிப்பிட்டதோடு, தொகுதியின் நலன் கருதி அவர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

# தேசிய கீதத்துக்கு முன்பாக அரசு விழாக்கள், பள்ளிகளில் வந்தே மாதரம் பாட வேண்டும்- மத்திய அரசு உத்தரவு



**புதுடில்லி, பிப்.12:** தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இந்த பாடல் எப்போது பாடப்பட்டாலும் அல்லது இசைக்கப்பட்டாலும் பார்வையாளர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டு உள்ளது.

தேசிய கீதம் மற்றும் 'வந்தே மாதரம்' இரண்டும் ஒரே நிகழ்வில் பாடப்பட்டால், முதலில் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும். 1937-ம் ஆண்டு காங்கிரசால் நீக்கப்பட்ட 4 சரணங்கள் உட்பட 'வந்தே மாதரம்' பாடலின் 6 சரணங்களும் அதிகாரப்பூர்வ விழாக்களில் இசைக்கப்படும். பாடலைப் பாடுவதற்கான மொத்த கால அளவு 190 வினாடிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொடியை ஏற்றும் போதும், முறையான நிகழ்வுகளில் ஜனாதிபதி வருகை மற்றும் புறப்படும் போதும், ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கு முன்னும் பின்னும் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும் என்றும் வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் கவர்னர்கள் முறையான மாநில விழாக்களுக்கு வரும்போது அல்லது புறப்படும்போது, பொதுமக்கள் விருது வழங்கும் விழாக்களின் போது மற்றும் தேசியக் கொடி அணி வகுப்பின்போது இந்தப் பாடல் இசைக்கப்பட வேண்டும். எனினும், சினிமா தியேட்டர்களில் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று உள்துறை அமைச்சகம் தெளிவுபடுத்தி உள்ளது.

ஏற்கனவே தேசத்தின் மரியாதையை அவமதிப்பதைத் தடுக்கும் சட்டம் 1971 தேசிய கீதத்திற்கு மட்டுமே பொருந்தும் என்று கூறப்பட்டு உள்ளது. அரசியலமைப்பின் பிரிவு 51(ஏ) தேசிய கீதத்திற்கு மரியாதை காட்ட மக்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று கூறுகிறது.

வங்கமொழிக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜி கடந்த 1875 நவம்பர் 7-ம் தேதி 'வந்தே மாதரம்' பாடலை எழுதினார். இந்த பாடலுக்கு ரவீந்திரநாத் தாகூர் இசையமைத்தார். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்பாடல் மிகுந்த உத்வேகம் அளித்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, 1950 ஜனவரி 24-ம் தேதி இது தேசியப் பாடலாக அறிவிக்கப்பட்டது. வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் தற்போது அரசு விழாக்கள், பள்ளிகளில் இதனை பாட வழிகாட்டுதல்களை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

வந்தே மாதரம் பாடலுக்கான புதிய வழிகாட்டுதல்கள் விவாதப்பொருளாக மாறியுள்ளது. ஏற்கனவே காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அரசு 'வந்தே மாதரத்தை' ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டின என்பது குறிப்பிடத்தக்கது.

# பிப்.4-ல் மக்களவையில் நடந்தது என்ன? வீடியோ வெளியிட்டார் மத்திய அமைச்சர் ரிஜிஜு



**புதுடில்லி, பிப்.12:** மக்களவையில் பிப்ரவரி 4-ம் தேதி நடந்தது என்ன என்பது தொடர்பான வீடியோவை மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு நேற்று வெளியிட்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜனவரி 28ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. சீன ஆக்கிரமிப்பு குறித்த முன்னாள் ராணுவத் தளபதி நரவனேவின் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள தகவல்களைக் குறிப்பிட்டு காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், பிப்ரவரி 1-ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது. பிப்ரவரி 4ம் தேதி அன்று மக்களவையில் இந்த தீர்மானத்துக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்து உரையாற்றுவார் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் பிரதமர் மோடி அன்று அவைக்கு வரவில்லை.

இந்நிலையில், பிரதமர் மோடியை நான்தான் வர வேண்டாம் என்று கூறினேன், அவருக்கு எதிராக எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்கள் சதி செய்யத் திட்டமிட்டிருந்தனர் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா கூறியது சர்ச்சையை எழுப்பியது.

பிரதமர் மோடி அன்று மக்களவைக்கு வராதது குறித்து இரு தரப்பு எம்.பி.க்களும் விவாதித்து வரும் நிலையில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, பிப்ரவரி 4-ம் தேதியன்று எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்கள் மக்களவையில் ஆர்ப்பாட்டம் செய்த வீடியோ ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

அதில் பிரதமர் இருக்கைக்கு அருகே காங்கிரஸ் எம்.பி.க்கள் ஜோதிமணி, சுதா மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெண் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் காட்சி உள்ளது. பின்னர் பாஜக எம்.பி.க்களுடன் வாக்குவாதம் செய்வது போன்ற காட்சிகளும் அந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன. மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு தனது எக்ஸ் பக்கத்தில் இந்த வீடியோவை வெளியிட்டு "காங்கிரஸ் கட்சி, தங்கள் எம்.பி.க்களின் மிகவும் இழிவான நடத்தையைப் பற்றி பெருமை கொள்கிறது.

நாடாளுமன்ற அவையில் பாஜக பெண் எம்பிக்கள் தடுத்து நிறுத்தாமல் இருந்திருந்தால், காங்கிரஸ் பெண் எம்பிக்களால் ஒரு மோசமான சம்பவம் அங்கு அரங்கேறி இருக்கும். நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும் புனிதத்தையும் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்" என்று பதிவிட்டுள்ளார்.

# அமராவதிக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்க வேண்டும்: அமித் ஷாவிடம் சந்திரபாபு நாயுடு கோரிக்கை

**அமராவதி, பிப்.12:** முதல்வர் சந்திரபாபு நாயுடு டெல்லிக்கு சென்று பல மத்திய அமைச்சர்களை நேரில் சந்தித்து ஆந்திர மாநிலத்துக்கு தேவையான திட்டங்களை எடுத்துக் கூறினார். நேற்று காலை முதலில் அவர் ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவை சந்தித்தார். அப்போது,ஆந்திராவையொட்டி செல்லும் 3 அதிவேக ரயில்வே காரிடார்களை அறிவித்தமைக்கு நன்றியை தெரிவித்தார்.

மேலும், சென்னை - பெங்களூரு அதிவேக ரயில், திருப்பதிக்கு வந்து செல்லும் படியாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன் வைத்தார். இதனை தொடர்ந்து, மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீலை முதல்வர் சந்திரபாபு நாயுடு சந்தித்தார். விவசாயத்தில் ரசாயனம் உபயோகப்படுத்துவதை நிறுத்தியதற்கான மானியத்தை வழங்கிட வேண்டும் என்றும், இதற்காக 2024- 25 ஆண்டுக்கு ரூ.216 கோடி ஆந்திராவுக்கு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்னர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு சந்தித்தார். அப்போது, ஆந்திர தலைநகர் அமராவதிக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு குறித்து இருவரும் பேசினர். ஏற்கெனவே இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளதாகவும், விரைவில் நாடாளுமன்ற 2-வது கூட்டத் தொடரில் இது தொடர்பான மசோதா தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியதாக கூறப்படுகிறது.

பின்னர், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனையும் சந்திரபாபு நாயுடு சந்தித்தார். அப்போது ஆந்திராவுக்கு வர வேண்டிய நிதி, பல்வேறு திட்டங்களுக்கான அனுமதிகள் போன்றவை குறித்து இருவரும் விவாதித்தனர். இந்த சந்திப்புகளின்போது, சந்திரபாபு நாயுடுவுடன், மத்திய அமைச்சர்களான ராம் மோகன் நாயுடு, சந்திரசேகர், கேஷவ், ஆந்திர எம்.பி.க்கள் உடன் இருந்தனர்.

## கனடாவில் வசித்துவரும் தம்பதிக்கு காணொலி காட்சி மூலம் விவாகரத்து வழங்கிய நீதிமன்றம்



தானே, பிப்.12:
கனடாவில் வேலை பார்க்கும் தம்பதிக்கு கடந்த 2022-ம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம், தானே மாவட்டம் மிரா ரோட்டில் திருமணம் நடந்தது. ஆரம்பத்தில் அவர்களின் குடும்ப வாழ்க்கை இனிமையாக சென்றது. இந்தநிலையில் கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள், 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந்தேதி முதல் கனடாவில் வெவ்வேறு பகுதியில் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

எனவே பிரிந்து வாழும் 31 வயது கணவர், 24 வயது மனைவி விவாகரத்து கேட்டு தானே குடும்பநல கோர்ட்டில் மனுதாக்கல் செய்தனர். 2 பேரும் வெளிநாட்டில் இருப்பதால் காணொலி காட்சி மூலம் விவாகரத்து வழக்கு மீதான விசாரணை நடந்தது. 6 மாத காத்திருப்புக்கு பிறகு தம்பதி விவாகரத்து பெறுவதில் உறுதியாக இருந்தனர்.

இதையடுத்து கோர்ட்டு தம்பதிக்கு விவாகரத்து வழங்கி உத்தரவிட்டது. இதுகுறித்து நீதிபதி ஆர்.எஸ்.பகரே அவரது தீர்ப்பில், "பயிற்சி பெற்ற மத்தியஸ்தரால் பேச்சுவார்த்தை நடந்த போதிலும் தம்பதி இணைந்து வாழ ஆர்வம் காட்டவில்லை. மனுதாரர்கள் பராமரிப்பு தொகை, ஜீவனாம்சம், நிகழ்கால, எதிர்கால பிரச்சனைகள் குறித்து பரஸ்பரம் தீர்வு கண்டுள்ளனர். அவர்களுக்கு இடையேயான அனைத்து பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுள்ளன" என கூறியுள்ளார்.

கொரோனா பரவலுக்கு பிறகு திருமணம், நிச்சயதார்த்தம் போன்றவை காணொலி காட்சி மூலம் நடந்து வருகிறது. இந்தநிலையில் குடும்ப நல கோர்ட்டு வெளிநாட்டில் வாழும் தம்பதிக்கு காணொலி காட்சி மூலம் விவாகரத்து வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசு ஆஸ்பத்திரியில் அமரர் ஊர்தி இல்லாததால்

## தந்தையின் உடலை 11 கி.மீ பைக்கில் கொண்டு சென்ற மகன்கள்



கர்ல பாலம், பிப்.12:
அமரர் ஊர்தி வாங்குவதற்கான திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் இது சம்பந்தமாக குறைந்தபட்ச உதவிகள் கூட செய்யவில்லை என நாகேஷின் மகன்கள் தெரிவித்தனர்.

ஆந்திர மாநிலம் பாபட்லா மாவட்டம் கர்ல பாலம் அடுத்த சித்தைய்யா பாலம் கிராமத்தை சேர்ந்தவர் நாகேஷ். தம்பதிக்கு மனைவி, 3மகன்கள், ஒரு மகள் உள்ளனர். நாகேஷ் அங்குள்ள ஏரிக்கரையின் மீது குடிசை வீட்டில் வசித்து வந்தார்.

நேற்று நாகேசுக்கு மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். இதனை கண்ட அவரது மகன்கள் தந்தையை சிகிச்சைக்காக பாபட்லா அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். நாகேஷை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

தந்தையின் பிணத்தை ஊருக்கு கொண்டு செல்ல ஆஸ்பத்திரியில் இலவச அமரர் ஊர்தி இல்லை. இதனால் ஆட்டோ டிரைவர்களை அணுகினர். அவர்கள் ரூ.3ஆயிரம் கேட்டனர். தங்களிடம் பணம் இல்லாததால், அவர்களது மகன்களுக்கு மரணத்தின் துயரம் ஒரு புறமும், உடலை எடுத்துச் செல்ல பணம் இல்லாத துயரம் மறுபுறம் இருந்தது.

இதையடுத்து சகோதரர் உதவியுடன் தந்தையின் உடலை பைக்கில் நடுவில் வைத்து சுமார் 11 கிலோ மீட்டர் தூரம் எடுத்துச் சென்றனர். இதுகுறித்து பாபட்லா கலெக்டர் வினோத் குமார் கூறுகையில்,

அமரர் ஊர்தி வாங்குவதற்கான திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தங்களிடம் பணம் இல்லை என தெரிவித்து இருந்தால் ஆஸ்பத்திரி ஊழியர்கள் உதவி செய்து இருப்பார்கள் என தெரிவித்தார்.

ஆனால் ஆஸ்பத்திரி ஊழியர்கள் இது சம்பந்தமாக குறைந்தபட்ச உதவிகள் கூட செய்யவில்லை என நாகேஷின் மகன்கள் தெரிவித்தனர்.

## திருப்பதி லட்டு கலப்படம் குறித்து அமலாக்கத்துறை வழக்குப்பதிவு



திருப்பதி, பிப்.12:
ஆந்திராவில் முன்பு ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பிரசாதமாக வழங்கப்படும் லட்டு தயாரிக்க வினியோகிக்கப்பட்ட நெய்யில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்டு இருந்ததாக ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு கடந்த 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பகிரங்க குற்றம் சாட்டினார். இதனால் உலகம் முழுவதும் பக்தர்களிடையே அதிர்ச்சி ஏற்பட்டது.

முந்தைய ஆட்சிக்காலத்தில் சுமார் ரூ.250 கோடி மதிப்புள்ள 60 லட்சம் கிலோ கலப்பட நெய் தேவஸ்தானத்துக்கு வினியோகிக்கப்பட்டதாக திருமலை திருப்பதி தேவஸ்தான தலைவர் பி.ஆர்.நாயுடு கூறினார்.

இவ்விவகாரம் குறித்து விசாரிக்க சி.பி.ஐ.யின் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. நெய் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்ட பொருள், ரசாயன முறையில் பதப்படுத்தப்பட்ட பாமாயில் மற்றும் இதர பொருட்கள் என்று சிறப்பு புலனாய்வு குழு கண்டுபிடித்தது.

இதுதொடர்பாக சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில், 9 தேவஸ்தான அதிகாரிகள், 5 பால்வள நிபுணர்கள் உள்பட 36 பேர் மீது சி.பி.ஐ. குற்றம் சாட்டியது.

இந்நிலையில், அமலாக்கத்துறையும் தனியாக ஒரு வழக்குப்பதிவு செய்துள்ளது. திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் நடந்த சட்டவிரோத பண பரிமாற்றம் குறித்தும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சட்டவிரோதமாக திரட்டிய பணம் குறித்தும் விசாரிக்க இந்த வழக்கை பதிவு செய்துள்ளது.

இந்த விசாரணைக்காக சி.பி.ஐ. பதிவு செய்த வழக்கு, ஆவணங்கள் மற்றும் குற்றப்பத்திரிகையை அமலாக்கத்துறை ஆய்வு செய்து வருவதாக அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹவாலா பரிமாற்றம் நடந்திருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.




## சமூக வலைத்தளங்களில் வெளியாகும் ஆபாச படங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள்- மத்திய அரசு

புதுடெல்லி, பிப்.12:
சமூக வலைத்தளங்களில் வெளியாகும் ஏ.ஐ., டீப்பேக் மூலமாக தயாரிக்கப்படும் ஆபாச படங்களுக்கு மத்திய அரசு கடுமையான கட்டுப்பாடுகள் விதித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு என்னும் ஏ.ஐ. தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. இதன் மூலமாக உருவாக்கப்படும் சட்டவிரோதம், ஏமாற்றும் தன்மை கொண்டது, பாலியல் சுரண்டல், அனுமதியில்லா உள்ளடக்கம், போலி ஆவணங்கள், குழந்தை பாலியல் சுரண்டல் தொடர்பான உள்ளடக்கம், வெடிகுண்டுகள், ஆள்மாறாட்டம் போன்றவற்றுடன் தொடர்புடைய படங்கள், வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் வெளியாகி வேகமாக பரவுகின்றன.

இதனை தடுக்க மத்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள் வெளியாகி உள்ளநிலையில் அதனை விரைவில் நடைமுறைக்கு கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.



புதிய விதிமுறைகளின்படி செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் மற்றும் டீப்பேக் போன்ற உள்ளடக்கங்களை கையாள்வதில் ஆன்லைன் தளங்களுக்கு அரசு கூடுதல், கடுமையான பொறுப்புகளை விதித்துள்ளது. அதன்படி எக்ஸ், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களில், தகுதியான அதிகாரிகள் அல்லது நீதிமன்றங்கள் குறியிடும் செயற்கை உள்ளடக்கங்களை 3 மணி நேரத்துக்குள் அகற்ற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்காக, தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021-ல் செய்யப்பட்ட திருத்தங்களை அரசு அறிவித்துள்ளது. இவ்விதிகளில், ஏ.ஐ. மற்றும் டீப்பேக் உள்ளடக்கங்களுக்கு முதன்முறையாக தெளிவான வரையறை அளிக்கப்பட்டுள்ளது. புதிய விதிகள் வரும் 20-ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்ட அரசிதழில் இந்த அறிவிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனர் புகார் தீர்வு தொடர்பான காலக்கெடுகளும் குறைக்கப்பட்டுள்ளன.

# விளையாட்டு செய்திகள்

## ஆசிய ரைஃபிள்/பிஸ்டல் சாம்பியன்ஷிப்: ஆகிருதி, அஞ்சுமுக்கு பதக்கம்!




புதுடில்லி, பிப்.11:
ஆசிய ரைஃபிள்/பிஸ்டல் சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் ஆகிருதி தாஹியா, அஞ்சும் முட்கில் ஆகியோர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

போட்டியின் 7-ஆம் நாளான செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் மகளிர் தனிநபர் இறுதிச்சுற்றில், கஜகஸ்தானின் சோஃபியா ஷுல்ஸென்கோ 358.2 புள்ளிகளுடன் தங்கத்தை தட்டிச் சென்றார்.

இந்தியாவின் ஆகிருதி 354.2 புள்ளிகளுடன் வெள்ளியும், அஞ்சும் 340.4 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனர். களத்திலிருந்த மற்றொரு இந்தியரான ஆஷி சோக்ஸி 330.9 புள்ளிகளுடன் 4-ஆம் இடம் பிடித்தார்.

இதிலேயே அணிகள் பிரிவில் ஆகிருதி, அஞ்சும், ஆஷி அடங்கிய இந்திய அணி 1,756 புள்ளிகளுடன் வெள்ளி பெற்றது. கஜகஸ்தானுக்கு தங்கமும் (1,760), ஜப்பானுக்கு வெண்கலமும் (1,730) கிடைத்தன.

50 மீட்டர் ஏர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் ஜூனியர் மகளிர் பிரிவில், இந்தியாவின் பிராச்சி கெய்க்வாட் 353.3 புள்ளிகளுடன் தங்கமும், அனுஷ்கா தாக்குர் 341.1 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனர்.

கஜகஸ்தானின் டோமிரிஸ் அமனோவாவுக்கு வெள்ளி (351.4) கிடைத்தது. மற்றொரு இந்தியரான மெல்வினா ஏஞ்ஜெலின் 317.9 புள்ளிகளுடன் 5-ஆம் இடம் பிடித்தார்.

அதிலேயே அணிகள் பிரிவில் பிராச்சி, அனுஷ்கா, ஹேஸல் கூட்டணி 1,748 புள்ளிகளுடன் தங்கம் வென்றது. கஜகஸ்தான் வெள்ளி (1,741) பெற்றது.

போட்டியில் இதுவரை இந்தியா, 36 தங்கம், 15 வெள்ளி, 14 வெண்கலம் என, 65 பதக்கங்கள் வென்று முன்னிலையில் உள்ளது.

## பிசிசிஐ ஊதிய ஒப்பந்தம்: விராட் கோலி, ரோஹித் தரமிறக்கம்!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தில், நட்சத்திர வீரர்களான விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோர் 'பி' பிரிவுக்கு தரமிறக்கப்பட்டனர்.

2025 அக்டோபர் 1 - 2026 செப்டம்பர் 30 காலகட்டத்துக்கான ஊதிய ஒப்பந்தத்தை, பிசிசிஐ மொத்தமாக 30 ஆடவர், 21 மகளிருக்கு வழங்கியுள்ளது.

கோலி, ரோஹித் ஒருநாள் கிரிக்கெட்டில் மட்டும் விளையாடி வரும் நிலையில், எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே அவர்களின் ஒப்பந்த நிலை குறைத்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட், ஒருநாள் அணிகளின் கேப்டனாக இருக்கும் ஷுப்மன் கில் 'ஏ' பிரிவுக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார். டி20 கேப்டன் சூர்யகுமார் யாதவ் 'பி' பிரிவில் நிலைக்கிறார்.

கடந்த முறை ஷ்ரேயஸ் ஐயர், இஷான் கிஷண் சேர்க்கப்படாத நிலையில், இந்த முறை ஷ்ரேயஸ் ஐயருக்கு மட்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முகமது ஷமி ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

'ஏ+' நீக்கம்...

இதுவரை அமலில் இருந்த 'ஏ+' ஒப்பந்த பிரிவு தற்போது நீக்கப்பட்டு, 'ஏ' பிரிவு பிரதானமாக்கப்பட்டுள்ளது. 'ஏ+' பிரிவில் கோலி, ரோஹித், பும்ரா, ஜடேஜா ஆகியோர் இருந்தனர்.

தற்போது அந்தப் பிரிவு நீக்கப்பட்டுள்ள நிலையில், எந்த ஒப்பந்தத்துக்கு என்ன மதிப்பு என்பது தொடர்பான தகவல் இல்லை. இதுவரை 'ஏ+' பிரிவுக்கு ரூ.7 கோடி, 'ஏ' பிரிவுக்கு ரூ.5 கோடி, 'பி' பிரிவுக்கு ரூ.3 கோடி, 'சி' பிரிவுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டு வந்தது.

ஒப்பந்த பட்டியல்

தரநிலை 'ஏ'

ஷுப்மன் கில்
ஜஸ்பிரீத் பும்ரா
ரவீந்திர ஜடேஜா

தரநிலை 'பி'

வாஷிங்டன் சுந்தர்
ரோஹித் சர்மா
விராட் கோலி
கே.எல்.ராகுல்
முகமது சிராஜ்
ஹர்திக் பாண்டியா
ரிஷப் பந்த்
குல்தீப் யாதவ்
யஷஸ்வி ஜெய்ஸ்வால்
சூர்யகுமார் யாதவ்
ஷ்ரேயஸ் ஐயர்

தரநிலை 'சி'

அக்ஸர் படேல்
திலக் வர்மா
ரிங்கு சிங்
ஷிவம் துபே
சஞ்சு சாம்சன்
அர்ஷ்தீப் சிங்
பிரசித் கிருஷ்ணா
ஆகாஷ் தீப்
துருவ் ஜுரெல்
ஹர்ஷித் ராணா
வருண் சக்கரவர்த்தி
நிதீஷ்குமார் ரெட்டி
அபிஷேக் சர்மா
சாய் சுதர்சன்
ரவி பிஷ்னோய்
ருதுராஜ் கெய்க்வாட்.



தக்கவைக்கப்படாதோர்

முகமது ஷமி, சர்ஃப்ராஸ் கான், ரஜத் பட்டிதார், முகேஷ் குமார்.

தரமுயர்த்தப்பட்ட ஜெமிமா

மகளிர் அணிக்கான ஒப்பந்த ஊதிய பட்டியலில், உலகக் கோப்பை வெற்றிக்கு முக்கியப் பங்காற்றிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் 'ஏ' பிரிவு தரமுயர்த்தப்பட்டார். கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர், துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா அந்த பிரிவிலேயே நீடிக்கின்றனர்.

ஸ்நேஹா ராணாவும் தரமுயர்த்தப்பட, பிரதிகா, கிராந்தி, ஸ்ரீசரணி, கஷ்வீ, கமலினி, வைஷ்ணவி, தேஜல் ஆகியோர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஹர்லீன் தியோல் மீண்டும் இணைக்கப்பட்டார்.

மகளிர் பிரிவு ஒப்பந்தத்தில், கடந்த முறை 'ஏ' பிரிவுக்கு ரூ.50 லட்சம், 'பி' பிரிவுக்கு ரூ.30 லட்சம், 'சி' பிரிவுக்கு ரூ.10 லட்சம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தரநிலை 'ஏ'

ஹர்மன்பிரீத் கௌர், ஸ்மிருதி மந்தனா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், தீப்தி சர்மா.

தரநிலை 'பி'

ரேணுகா தாக்குர், ஷஃபாலி வர்மா, ரிச்சா கோஷ், ஸ்நேஹா ராணா.

தரநிலை 'சி'

ராதா யாதவ், அமன்ஜோத் கௌர், பிரதிகா ராவல், கிராந்தி கௌட், உமா சேத்ரி, அருந்ததி ரெட்டி, ஸ்ரீசரணி, யஸ்திகா பாட்டியா, ஹர்லீன் தியோல், கஷ்வீ கௌதம், ஜி.கமலினி, வைஷ்ணவி சர்மா, தேஜல் ஹசப்னிஸ்.

தக்கவைக்கப் படாதவர்கள்...

ஷ்ரேயங்கா பாட்டீல், டைட்டஸ் சாது, பூஜா வஸ்த்ரகர்




## ரஞ்சி கோப்பை: இன்னிங்ஸ் வெற்றியுடன் அரையிறுதியில் பெங்கால்!




புதுடில்லி, பிப்.11: ரஞ்சி கோப்பை கிரிக்கெட்டின் 3-ஆவது காலிறுதி ஆட்டத்தில் பெங்கால், இன்னிங்ஸ் மற்றும் 90 ரன்கள் வித்தியாசத்தில் ஆந்திரத்தை செவ்வாய்க்கிழமை வீழ்த்தியது.

இதையடுத்து, அரையிறுதிக்கு முன்னேறிய பெங்கால், அதில் ஜம்மு & காஷ்மீரை சந்திக்கிறது. மற்றொரு அரையிறுதியில் கர்நாடகம் - உத்தரகண்ட் மோதுகின்றன. இரு ஆட்டங்களுமே வரும் 15-ஆம் தேதி தொடங்குகின்றன.

முன்னதாக, ஆந்திரத்துடனான மோதலில் டாஸ் வென்ற பெங்கால், ஃபீல்டிங்கை தேர்வு செய்தது. ஆந்திரம் முதல் இன்னிங்ஸில் 295 ரன்களுக்கு ஆட்டமிழக்க, அதிகபட்சமாக கேப்டன் ரிக்கி புய் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 83 ரன்கள் அடித்தார். பெங்கால் பௌலிங்கில் முகேஷ் குமார் 5, ஆகாஷ் தீப் 4 விக்கெட்டுகள் சாய்த்தனர்.

பின்னர் தனது இன்னிங்ஸை விளையாடிய பெங்கால், 629 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது. சுதிப்குமார் கராமி 31 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் 299 ரன்கள் விளாச, ஹபிப் காந்தி 95, சுமந்த குப்தா 81 ரன்கள் அடித்தனர். ஆந்திர தரப்பில் ஷேக் ரஷீது 4 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

இதையடுத்து 334 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-ஆவது இன்னிங்ஸை விளையாடிய ஆந்திரம், 244 ரன்களுக்கே ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக நிதீஷ்குமார் ரெட்டி 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 90 ரன்கள் அடித்தார். பெங்கால் பௌலர்களில் ஷாபாஸ் அகமது 4 விக்கெட்டுகள் எடுத்தார்.